819
[பகுதி 18] ஆடிமீ : : July, 1926 [பகுதி 7

விவேக போதினி

VIVEKA BODHINI

பொருளடக்கம்

	பக்கம்
முருகன் வழிபாடு	241
பாரத நாட்டின் வரலாறு	242
வர்த்தமானம்—ஒரு கதை	245
மனோ மோகன் கோஸ்	252
கவியும் காலணு லேபிலும்	257
இரஞ்சிதம்—(நாவல்)	265
சிறுத்தொண்டர்—(நாடகம்)	276
சிறுவர், ஸ்திரீகளுக்கான பக்கங்கள்	278
வர்த்தமானக் குறிப்புகள்	280

சித்திரப் படங்கள்

பார்வதி பரமசிவனை உபசரித்தல்.

OFFICE OF THE REGISTRAR OF ... 10 NOV 1926 MADRAS

ymn211, N08VB. N26.18.7. 218380.

விவே... சந்தாதாரர்க்கு ரூ. 1-8-0 விலையுள்ள புத்தகங்கள் இனுமாய்த் தரப்படும்.

என் கொழுப்புள்ள ஆகாரம்?

சரீரம் அல்லது மூளையினால் செய்யப்படும் ஒவ்வொரு காரியத்திலும் குறைகிற சக்தியை திரும்பவும் நாம் அடையவேண்டும். உடம்பில் நிரம்பவும் வியர்த்தால் வெளியில் போன ஜலத்திற்கு பதில் ஜலம் உள்ளே செலுத்தவேண்டும். அதுபோல நரம்புகளும் தசைகளும் தேய்ந்து போனால் அவைகளை சீர்படுத்த ஆகாரம் வேண்டும்.

உணவில் குணமேயன்றி அளவு முக்கியமல்ல

ஒரு கொதிப்பரை (பாய்லர் Boiler) தண்ணீர் காய்ச்ச உபயோகமற்ற கட்டைகளை ஏராளமாக எரித்தால் நெருப்பு திணியடைவதைத் தவிர, நீராவி நிரம்ப வருவது கிடையாது. அம்மாதிரி தான் உடம்பும். நிரம்ப உணவு சாப்பிடுவதால் உபயோகமற்ற சாமான்களை வெளியே தள்ள உடம்புக்குக் கஷ்டமுண்டாகி அதனுடைய சக்தியைக் குறைக்கிறது. பலத்தைக் கொடுக்கும் உணவைக் கொஞ்சம் உட்கொண்டாலும் உடம்புக்கு சிரமத்தைக் கொடுக்காததோடு விருத்தி செய்கிறது.

அதனால் தான் நெஸ்லேஸ் பால் ஆகாரம் (Nestle's Milk Food) உண்மையான பால் கஞ்சியாய் உடம்பினாலும், மூளையினாலும் வேலை செய்கிறவர்களுக்கு உபயோகப்படுகிறது. அதில் ஒருமித்திருக்கும் ஸத்து அவ்வளவும் சரீரத்தில் பரவி மனதிற்கும் விருத்தியடைய வேண்டியதற்கு இன்றியமையாத உத்ஸாகத்தையும் ஆரோக்கியத்தையும் கொடுக்கிறது.

பெரிய டின் 1-க்கு விலை ரூபா 1-6-0 (தான்.)

வலதுபுறத்தி லிருக்கும்
மேல் விலாசத்திற்கு
எந்த பாஷையில்
எழுதி விசாரித்
தாலும் பதில்
அனுப்பப்படும்.



கீழ்க்கண்ட விலாசத்தைக்
கிழித்து கவர் அல்லது
கார்ட் மேல் ஒட்டி
அனுப்பவும்.

NESTLÉ & ANGLO SWISS
CONDENSED MILK CO.,
POST BOX No. 396
CALCUTTA.

பெண்களுக்கு! ஆபரணமே அழகு!

ஜர்மனி தேசத்து "டைமன் எக்ஸ்ட்ரா" என்னும் கமலம்.

சீமைக் கமலம் போன்றது. "**Diamond-extra**" மிக்கப் பிரகாசமுடையது.

லூஸ் தனி கமலம் விலை:—சன்னம் காரட்டு ரூபா.	7	8	0
" " "	5	8	0
ஷை உருசைஸ் காரட் விலை ரூபா.	4	0	0
" " "	2	8	0

கம்மல் or தோடு சிறு ஜதை விலை ரூ. 18 முதல் ரூ. 22
ஷை நடுத்தரம் சைஸ் ரூ. 25 ... ரூ. 30
ஷை பெரிய சைஸ் ரூ. 32 ... ரூ. 40

3-கல்வைத்த பேசரி விலை ரூ. 6 0 0	கிளாவர் ஜதை கடுக்கன் ரூ. 12
8-கல்வைத்த பேசரி விலை ரூ. 9 8 0	ஒத்தக்கல் கடுக்கன் ரூ. 16
கிளாவர் மூக்குத்தி விலை ரூ. 5 0 0	புலாக்கு ரூ. 12
மூக்கு முத்து விலை ரூ. 4 0 0	மூக்குத் திருகு ரூ. 4, 5

நகைகள் பவுன் தங்கத்தில் கட்டியவை.

கேட்லாக் தமிழில் கிடைக்கும். இதர நகைகளும் ஆர்டர்மேல் செய்துகொடுக்கப் படும். மாட்டல், பில்லை, முகப்பு, அட்டிகை முதலியவைகள் இதே ஜர்மன் கமலத்தில் கட்டித் தரப்படும். அசல் சீமைக் கமலம்போலவே யிருக்கும்.

கிரந்தி. சுப்ரமண்யஞ் செட்டி & சன்,
69-நாராயண முதலி தெரு, சௌகார்பேட்டை, சென்னை.

உ. வேலுமயிலுந் துணை

அருணகிரிநாதர் அருளிச்செய்த

ஷண்முக விஜயம்

திருப்புகழ்
= விருத்தியுரை =

படங்களுடன் விலை அணா 12

முதல் தொகுதி : : 6- படை வீடுகள்

டெமி அளவில், 64-பக்கங்கள்கொண்ட 12-சஞ்சிகைகளாக வெளிவருகிறது. கிளேஸ் காகிதத்தில் ஒரு பதிப்பும், பெதர்வெயிட் எனும் விலையுயர்ந்த காகிதத்தில் ஒரு பதிப்பும், ஆக இரண்டு பதிப்புகள் வெளிவருகின்றன.

வருஷ சந்தா (தபாற் செலவுடன்)

கிளேஸ் காகிதப் பதிப்புக்கு ரூ.	4 12	கிளேஸ் தனிச்சஞ்சிகை அணா	7
பெதர்வெயிட் காகிதப்பதிப்பு "	6 0	பெதர்வெயிட் ஷை "	9

விலாஸம்:— அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை.

A. (No. 963)

Aletris Cordial

அல்லெட்டரிஸ் கார்டியல்

ஸ்திரீகளின் பலஹீனத்தைத் தீர்க்கும் மருந்து

உலகெங்கும் வைத்தியர் யாவராலும் ஸ்திரீகளின் சகலவிதமான நோய்களுக்கு உபயோகிக்கப் படுவது. ருது அடையநிற்கும் சிறுமிகளுக்கும் இம்மருந்து மிகச் சிறந்தது.

அளவு:—தேயிலைக் கரண்டி மருந்தை, உண்ட பின்னும், நித்திரைக்குப் போவதற்கு முன்னும் உட்கொள்ளவேண்டும். உஷ்ணமான ஜலத்துடன் கலந்துகொண்டால் விசேஷ குணம் உண்டு.

Celerina

ஸிலரீனு

பலமற்றவர்க்குக் கைகண்ட மருந்து

உண்பதற்கும், உறங்குவதற்கும் ஒரு மணி முன்பு ஒரு தேயிலைக் கரண்டியளவு, நாளுக்கு மும்முறை சாப்பிட்டால், மனத்தளர்ச்சி, அலட்டல், புரட்டல், தூக்கமில்லாமை, மூர்ச்சை, மயக்கம், நரம்புக்கேடா லாகும் அஜீர்ணம், பலஹீனம், குடிக்கேடால் விளையும் நோய்கள் இவை யாவும் ஒழிந்து உடம்பு புஷ்களமடையும். லாகிரி வஸ்துக்கள் கலவாது, மூளை வஸ்து விருத்தியடைய, கவனத்துடன் செய்யப்பட்டது.

இப்பிரசித்திபெற்ற மருந்துபோல் போலியாக இருக்கும் மருந்துகளைப் பார்த்து ஏமாறுமல்

RIO CHEMICAL COMPANY, NEW YORK CITY, U. S. A.

என்ற லேபிலைப் பார்த்து வாங்கவும். இது மருந்துக்கடைகளில் எங்கும் கிடைக்கும்.

(A. No. 2278)

பாலாஜி அண்டு கம்பெனி, காசி.

புதிய சரக்குகள்! உடனே எழுதுங்கள்!! சகாய விலைகள்!!!

புதுமாதிரி பட்டுப் புடவைகள்

இந்தப் புடவைகள் மெல்லிய பட்டினுல் பளபளப்பாகவும் அழுத்தமாகவும் நெசவு செய்யப்பட்டுள்ளது. சிவப்பு, பச்சை, ரோஜா, பூநீலம் முதலிய கலர்களில் விழிம்பு முந்திகளும் அழகான ஜரிகை வேலையும் செய்யப்பட்டுள்ளது. 8 கஜம் 2½ முழம் அகலம், புடவை 1-க்கு விலை ரூ. 25, 30, 35-முதல் 45-வரை.

பட்டு ரவிக்கைகள்

உடல் சாதா விழிம்புக்கு அழகான ஜரிகைவேலை செய்யப்பட்டு பலவித புதுமாதிரி கலர்களில், ரவிக்கை 1-க்கு விலை ரூ. 3-முதல் ரூ. 5-வரை.

விளையாட்டுப் பாத்திரங்கள்

பித்தளை வெங்கலத்தால் செய்த 32-வித சாமான்கள் அடங்கியதும், குழந்தைகளுக்கு சந்தோஷத்தை உண்டுபண்ணக் கூடியதுமானவை:

1 நெ.	பெரிய செட் 1-க்கு	ரூ.	5 0 0
2 நெ.	மத்திம செட் 1-க்கு	ரூ.	3 0 0
3 நெ.	சிறிய செட் 1-க்கு	ரூ.	2 8 0

அன்னபூர்ணி அம்மன் ஸ்தோத்திரம் இனும்.

Balajee & Co., Silk Merchants,

Benares City.

218380

விக்ரமசிங்கன் கோட்டை மர்மம்.

இப்புதிய நாவல் பெயர்பெற்ற துப்பனான ஷண்முக சுந்தரத்தின் துப்புத் திறத்தை நன்கு விளக்கிக் காட்டுகிறது. ஆரம்பத்தில் எவரும் பிரவேசிப்பதற் கரிதான கருங்கற்கோட்டையில் காவற்காரன் எஜமானியைக் கொன்றதாகத் தெரியவருகிறது. அச்சந்தர்ப்பத்தில் ஷண்முகசுந்தரம் அழைக்கப்பட்டு, அந்த அம்மாள் இறக்கவில்லையென்று அறிந்து அவளை உயிர்ப்பித்து, காவற்காரன் குற்றவாளியல்லவென நிரூபித்து, அப்பிராந்தத்தில் பேர்பெற்ற கொள்ளைக்காரனான சிங்கமாமுகனைத தொடர்ந்து, அவன் தாசியை மயக்கி அவனதிருப்பிடத்தையறிந்து, சந்நியாசிவேடம் பூண்டு சிங்கமாமுகனுக்குச் சிகிச்சைசெய்யச் சென்று, அப்போது தன் மந்திர சக்தியால் தீரனான சிங்கமாமுகனையடக்கி வீழ்த்தி அவனைக் கொல்ல முயன்ற துருக்க சந்நியாசி யொருவனை தன்னுடைய நிகரற்ற மந்திர சக்தியால் அடக்கி, சிங்கமாமுகன்பூண்ட பலவேடங்களையும் துருக்கச் சந்நியாசியின் வேடத்தையும் எளிதில் ஊகித்து, அந்த அம்மாளது கணவனான துருக்கச் சந்நியாசியையும் சகோதரனான சிங்கமாமுகனையும் சிநேகப்படுத்தி, கற்பின் அவதாரமான அந்த அம்மாளது கற்பைச் சந்தேகித்து ஆராயாது செய்த செய்கைகளில் யாவருமுற்ற துயரத்தை எடுத்துக்காட்டுகிறான். மிகவும் எளியநடையில் எழுதப்பட்டுளது. எடுத்தவர் படித்துமுடிக்காமல் கீழே வைக்கமுடியாது. நான்கு அழகிய சித்திரப்படங்கள் அடங்கியது. விலை ரூ. ஒன்றுதான். விவேக போதினி சந்தாதார்க்கு மாத்திரம் அணா 12.

சில முக்கிய அபிப்பிராயங்கள்

சுதேச மித்திரன்.—* எல்லாவற்றிலும் ஸ்திரீகளுக்கு முக்கிய ஆபரணமாகவுள்ள கற்பின் மகிமையையும், அதைக் கடைப்பிடித்தோருக்கு எததனை இடுக்கண் நேரிடினும் முடிவில் அவர்களுக்கு வெற்றியே ஏற்படுமென்பதையும் நிரூபித்து இக்கதை எழுதப்பட்டிருக்கிறது ** படிக்கப் படிக்க அறிவையும், தெய்வ பக்தியையும், கற்பின் மகிமையையும், பசுமரத்தாணிபோல், மனதில் பதிக்குமாறு இப்புத்தகம் எழுதப் பெற்றிருப்பதால் இதனைப்படிப்போர் பயனுறுவார்களென்பதில் சந்தேகமில்லை.

***

இந்து நேசன்.—** முதலிலிருந்து ஈறுவரையில் கதையிற் கூறியுள்ள சம்பவங்கள் படிப்போர் மனத்தை கவரத்தக்கனவா யிருக்கின்றன. * * இனிய தமிழில் எழுதப்பட்டுள்ளது.

***

New India.—The language is chaste without pedantry and fine without bombast. The story depicts modern life in India with its Western manners and Western engines of destruction. The hero of course, is the detective Shanmugasundaram, who has already made himself popular as the hero of a novel bearing that name and written by the same author * * *
* *The story is full of interest from beginning to end.*

***

சுதேச பரிபாலினி.—* தற்சமயம் வெளிவந்துலவும் துப்பறியும் நாவல்களுள் இது மிகவும் சிறந்ததென்றே கூறவேண்டும். ** துப்பறியும் சமர்த்தர் (ஷண்முகசுந்தரம்) எடுத்துக்கொள்ளும் கஷ்டம் படிப்போருக்கு அளவில்லா ஆனந்தத்தையும் ஆச்சரியத்தையும் ஒருங்கே அளிக்குந் தன்மையில் இருக்கின்றது. புத்தகத்தைக் கையிலெடுப்போர், முடிவு காணும் வரையில் கீழே வைக்க மாட்டார். இடையிடையே அரிய பல நீதிபோதனைகளும், பக்திமார்க்கங்களும் காட்டப்பட் டிருக்கின்றன.

ஸ்ரீமான் வா. சு. செங்கல்வராய பிள்ளை அவர்கள், எம். ஏ.—* கதையின் சுவையும் கற்கண்டின் சுவைபோல ஒரே தன்மையதாய் முதன் முதல் இறுதிவரையும் நன்கு அமையப்பெற்றுளது. இந்நூலில் முக்கிய புருஷனான ஷண்முகசுந்தரத்தின் துப்பறியும் திறமும், பக்தியின் சிறப்பும் உத்தம குணங்களும் படிப்பவர் மனத்தைக் கவர்ந்து இன்பம் விளைவிக்கின்றன.

***

நவசக்தி.—இந்நூலுக்கு உயிர் நாடியாகவுள்ள ஷண்முகசுந்தரம் தன்னிடம் ஒப்புவிக்கப்பட்ட குற்றத்தை ஆராய்ச்சிசெய்வதில் காண்பிக்கும் சாமர்த்தியங்கள் போற்றத் தக்கனவா யிருக்கின்றன. இந்நூலைப் படிக்கும் காலத்து உள்ளத்தில் ஒருவித இன்பம் உண்டாகிறதென்பதை ஈண்டும் குறிப்பிட விரும்புகிறோம். இதைத் தமிழர் ஒவ்வொருவரும் வாங்கிப் படிக்கவேண்டுவது அவசியம்.

***

The Hindu.—*This is an interesting detective novel *the story is designed to bring out the strength and value of chastity for women folk and as such the book deserves to be placed in the hands of all young girls. The style is simple and the printing good.

***

வைசிய மித்திரன்.—** அழகிய தமிழில் கற்பனை செறிந்த அலங்கார நடையில் எழுதப்பெற்றிருக்கிறது. * கதையின் போக்கும், குற்றங்காணு முறையும் கதா புருஷர்களின் செயலும் கற்பின் வெற்றிக்கொடியை நிலை நாடியே செல்கின்றது: படிப்போருக்கு பக்தி ரசமும் கதைச் சுவையும் முன் வந்து நிற்கும். இனிய நடையில் குற்றங் குறைகளின்றிச் செவ்வனே எழுதப்பெற்றது.

விலாஸம்:— மானேஜர், விவேக போதினி, மயிலாப்பூர், சென்னை.

NOEVB N26.18.7

கந்தபுராணச்சுருக்கம்

மூலமும் பொழிப்புரையும் விருத்தியும்

இந்நூல் ஸ்ரீமத் - சம்பந்தசரணாலய சுவாமிகளால் சொற்சுவை, பொருட்சுவை, சந்தச்சுவை முதலியன ததும்ப 1000 பாடல்களாகப் பாடப்பட்டது. கடல்போல் பரந்து கிடக்கும் பெரிய கந்தபுராணக் கதையை இனிது விளக்குவது. மூலத்திற்கேற்ற பொழிப் புரையும், விருத்தியும் பலநூற் பிரமாணங்களுடன் எழுதப்பட்டுள்ளன. டிம்மி 8-பக்கம் அளவில் நல்ல காகிதத்தில் அச்சிடப்பட்டது. 496 பக்கங்கொண்டது.

காலிகோ பயிண்டு விலை ரூ. **3**

திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம் ...	0	12	0
குசலோபாக்கியானம் மூலமும் அரும்பதவிளக்கமும் ...	0	12	0
உத்தியோகம் (நாடகம்)	0	6	0

முருகவேள் புத்தகசாலை, இராயப்பேட்டை, சென்னை.

பாதி விலை ! ஒரு மாதம் வரை பாதி விலை !!

அசல் விலை ரூ. **14**.

பாதி விலை ரூ. 7.

22 காரட்ரோல்டு கோல்டு கைக் கெடியாரம் 5-வருஷம் உத்திரவாதம். பார்வைக்கு அழகாயிருக்கும். இக் கெடியாரங்களில் எம்மாதிரி ஷேப் ஆனபோதிலும் அனுப்பி வைக்கப் படும். பாதி விலை ரூ. 7.

ஒவ்வொரு கடியாரமும் ஒரு பட்டுப் பட்டையுடன் அனுப்பி வைக்கப்படும்.

ஸ்வான் ஹவுஸ்,

தபால் பெட்டி 508,

பி. டி. மதராஸ்.

A. (No. 2700)

ஷண்முகம் மூக்குத்தூள்

70-வருஷ காலமாக குணத்தில் உயர்ந்ததாயும், மணத்தில் இதர பொடியைவிட மேன்மையாயுமிருந்து, இந்தியா, பர்மா, ஸிலோன் முதலிய இடங்களில் ஏராளமாய் விற்பனையாய் வருகிறது.

4 பலம் **13** அண. **5** பலம் **15** அண.

ஆர். கே. பரிமள மூக்குத்தூள் 1புட்டி அண 4.

(போஸ்டேஜ் உள்பட)

மறந்துவிடுமுன் எழுதவும்

ஷண்முகம் ஸ்னப் கம்பெனி, லிமிடெட்,

தபாற்பெட்டி நெ. 140, சென்னை.

பெரிய கம்பெனி! பெரிய கம்பெனி!!

பட்டு பீதாம்பர கம்பெனி, ஸ்ரீகாசி

நாணயமான சரக்குகள்.

சுத்தமான பட்டு! சகாய விலை!!

உயர்தரமான

பட்டு பீதாம்பர சேலைகள் ரவிக்கைகள்

துப்பட்டாக்கள், வெண்பட்டு வேஷ்டிகள், அங்கவஸ்திரங்கள், உருமால்கள் முதலிய எல்லாத் தினுசுகளும், சிவப்பு, ரோஸ், ஊதா, பச்சை, மஞ்சள், மேகவர்ணம், வெள்ளை, சிலேட் கலர், ஆரஞ்சு, கத்தரிப்பூக் கலர், கிரிம்ஸன் முதலிய எல்லா இங்கிலீஷ் கலர்களிலும் மிகவும் சரச விலைக்குக் கிடைக்கும்.

பட்டு பீதாம்பர கேட்லாக் இனாம்.

உடனே எழுதுங்கள்.

Address.—Manager, (A. No. 2914)

Silk Pitamber Co., *Benares City.*

விலாஸம்:—மானேஜர்,

பட்டு பீதாம்பர கம்பெனி, ஸ்ரீகாசி.

குணப்படுத்துவதற்கு மாத்திரமல்ல

(இன்னும்)

வியாதிகள் அணுகாவண்ணம் தடுப்பதற்கும்

எங்கள்

ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள்

பேரும் புகழும் பெற்றிருக்கின்றன!

அஜீரணம், பலஹீனம், மலச்சிக்கல், நரம்புகளின் தளர்ச்சி, மூளைக்கொதிப்பு இன்னும் இவைபோன்ற மற்ற வியாதிகளை குணப்படுத்தி அவைகளை அணுகாதபடி செய்யும்.

32-மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு ரூபாய் 1.

விவரம் வேண்டுவோர்

கீழ்க்கண்டவருக்கு எழுதவும்:—

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,

26-பிராட்வே, மதராஸ்.

இனாம்! இனாம்!! முற்றிலும் இனாம்!!!

'C' ரிஜிஸ்டர் 'C' Regd.

டைம்பீஸ் டைம்பீஸ்



இனாம் இனாம்

எங்களின் "தாராலீவர் 18 காரட்டு ரோல்டு கோல்டு, பின்புறம் சித்திரவேலை செய்யப்பட்ட பாக்கட் கடியாரம் வாங்குகிறவர்களுக்கு "C" டைம்பீஸ் இனாமாக அனுப்பப்படும். விலை பாக்கட் கடியாரம் 1-க்கு இனாமுடன் ரூ. 5. இக்கடியாரத்தில் உள்ள டயலின்பேரில் ஐந்து வருஷம் உத்திரவாதம் என்று அச்சிடப்பட்டிருக்கிறது, முந்துங்கள்.

காப்டன் வாட்ச் கம்பெனி,

தபால் பெட்டி நெ. 265, மதராஸ்.

லோகோபகாரி

முப்பத்திரண்டு ஆண்டுகளாய் நிலவும்

வாரப் பத்திரிகை.

பத்திராதிபர்:—பரலி - சு. நெல்லியப்ப பிள்ளை.

தமிழர்கள் புத்துயிரும் புதுவாழ்வும் பெறுவதற்காகப் பாடுபட்டு வரும் வாரப் பத்திரிகை. உலகத்தில் அந்தந்த வாரத்தில் நடக்கும் செய்திகளெல்லாம் லோகோபகாரியில் சுருக்கமும் விளக்கமுமாக வெளிவரும். சிறந்த பாடல்களும், சித்திரப் படங்களும் அவ்வப்போது வெளிவரும். பாரத தேசம் சகல துறைகளிலும் சுயராஜ்யம் பெற்று, லோக மெல்லாம் க்ஷேமம் அடைய வேண்டுமென்பதே லோகோபகாரியின் நோக்கம். உலகத்தில் அற நெறியும் அன்பு நெறியும் வளர்ந்து இன்பம் நிலவுமாறு லோகோபகாரி நெடுங்காலமாக உழைத்து வருகிறது. இதனைத் தமிழ் மக்கள் ஆதரிக்க வேண்டும்.

வருஷ சந்தா ரூபாய். 4—0—0 வெளி நாட்டுக்கு ரூபாய். 6—0—0.

மாதிரிப் பிரதி இனாம்.

லோகோபகாரி பத்திரிகாலயம்,

கோமளேசுவரன் பேட்டை, சென்னை.

குறிப்பு :—முன்பணம் அனுப்பவேண்டுவதில்லை. புத்தகம் வேண்டுவோர், தங்கள் பெயரை மாத்திரம் பதிவு செய்துகொண்டால் போதுமானது. தங்கள் பெயரைப் பதிவு செய்துகொண்டவர்க்கே புத்தக விலையில் எட்டணு குறைவு செய்யப்படும்.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

திராவிட வேதத்திரட்டு.

பன்னிருதிருமுறை, திருப்புகழ், திருவகுப்பு, ஸ்தலமான்மியச் சுருக்கம் முதலியன அடங்கியது

மூன்றும் பதிப்பு விரைவில் வெளிவரும்

சிவரஹஸ்யப் பதிப்பாசிரியர் க. சதாசிவ செட்டியார், பீ. ஏ., அவர்களால் திரட்டிய இத்திரட்டு, தலைமுறைக் கிரமத்தில், பாடல்பெற்ற **274** - தலங்கட்கும், தேவாரத் திருப்பதிகங்களும், பொதுத் திருப்பதிகங்களும், பின்னர் திருவாசகம், திருக்கோவையார், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருமந்திரம், பதினோராந் திருமுறை, திருத்தொண்டர் புராணம் என்னும் ஐந்து திருமுறைகளில் பாராயணத்திற்கு இன்றியமையாத திருப்பாசுரங்களும் சற்றேறக்குறைய **3,000** திருப்பாட்டுகள் உளவாகத் திரட்டப்பெற்று, முதல் முதல் 1907-ம௵ அச்சிட்டு வெளிப்படுத்தப்பட்டது. பிறகு இரண்டா முறையாகத் தலமான்மியச் சுருக்கம், செல்லும் வழி முதலிய குறிப்புகளுடன் சேர்த்து 1917-ம௵ பிரசுரிக்கப்பட்டது. இப்புத்தகம் தலயாத்திரிகர்களுக்கும் சபைப் பாராயணர்களுக்கும், தேவாரப் பிரசாரகர்களான ஒதுவா மூர்த்திகளுக்கும் மிக்க உபயோகமாகக் கண்டு விரைவில் செலவழிந்து போயிற்று. பின்னர் ஆசிரியர் மூன்றும் பதிப்புக்காக, பல பதிகங்களைச் சேர்த்தும், செய்யுட்களை அதிகப்படுத்தியும், தல மான்மியத்தில் பல கூட்டியும், வழி முதலியவற்றைத் திருத்தியும் செப்பம் செய்து வைத்திருந்தும், பல காரணங்களால் வெளிவராது காலங்கழிந்தது எனினும், புத்தகத்தினது தேவை பல இடங்களிலும் மிகுதியும் காணப்படுகின்றமையின், அதனை மூன்றும் பதிப்பாக பாராயணத்திற்குப் போதுமான வளவு திருப்புகழ் திருவகுப்புத் திரட்டுகளும் சேர்த்து அச்சிடத் தொடங்கி யுள்ளோம். டெமி அளவில் கனத்த வழவழப்புத் தாளில், தெளிவான அச்சில் பதிப்பிக்கப்படுகின்றது. முன்னினும் அதிக விஷயம் சேர்ந்து புத்தகம் பெரிதாக வெளிவரும். நல்ல பூஜைக்கேற்ற கட்டிடம் செய்யப்படும். சுமார் 60-பாரம் அளவையுடையதாகும். இதில் சைவ சமயாசிரியர்களின் படமும், ஆர்ட் பேபரில் அழகாய் அச்சிட்டுச் சேர்க்கப்படுகிறது.

இவ் அரிய நூல், எவ்விதத்திலும் மனோகரமா யிருக்கும். கொஞ்சம் பிரதிகளே அச்சிடப் படுவதால், இப்போதே தங்கள் பெயரை ரிஜிஸ்டர் செய்து கொள்வோர்க்கு மாத்திரம் புத்தக விலையில் **8** அணு குறைவு செய்து அனுப்பப்படும். முன் பணம் அனுப்ப வேண்டியதில்லை.

விலாசம்:— மானேஜர், விவேக போதினி, மயிலாப்பூர், சென்னை.

(A. No 1819) THE MOST CHARMING PERFUME

OTTO DILBAHAR (Registered.)

எல்லோருடைய மனதையும் அதியுற்சாகப்படுத்தும் சுகந்தம்

ஆடோ தில்பஹார் (ரெஜிஸ்டர்ட்.)

நீடித்திருக்கக் கூடியதும், நிகரில்லாத உன்னத வாசனையுடையதும், மனதிற்கு சந்தோஷ முண்டாக்கக் கூடியது. ஆல்கஹால், சாராயம் முதலிய சம்பந்தமில்லாத பொறுக்கான சில சுகந்த புஷ்பங்களிலிருந்து இறக்கிய சத்தினால் சேர்க்கப்பட்டது. உம்முடைய கைகுட்டையில் சில துளிகள்விட, புஷ்பத்தோட்டத்தின் மத்தியிலிருந்து அனுபவிக்கக்கூடும் வாசனையை தரக்கூடியது. விவாக காலங்களிலும், பூஜாகாலங்களிலும், இன்னும் மற்ற செண்டுகள் அத்தர்களைவிட இத்த ஆடோ டில்பஹார் அதிக இன்பத்தைக் கொடுக்கும்.

அடியில் வருமாறு அளவு புட்டிகளில் நிறப்பி விற்கப்படுகிறது.

பெரிய புட்டி 1-க்கு (4-டிராம் அல்லது ½-அவுன்ஸ்) விலை ரூ. 2—0—0

வேறு	,,	(2-டிராம்)	,,	1—4—0
நடுத்தரம்	,,	(1-டிராம்)	,,	0-12—0
சிறிய புட்டி	,,	(½-டிராம்)	,,	0—8—0
மாதிரி	,,		,,	0—2—0
வாசனைக் கார்ட் 1-க்கு			,,	0—1—0

பிரசித்தமான எல்லா வியாபாரிகளாலும் விற்கப்படுகிறது. இதே மாதிரி அநேக பெயர்கள் மார்க்கட்டில் இருப்பதால், வாங்கும்போது புட்டிகள் பேரில் ஆடோ டில்பஹார் என்னும் பெயர் இருக்கிறதா என்று கவனித்துப் பார்த்து ஜாக்கிரதையுடன் வாங்கிக்கொள்ளவும்.

சோல் ஏஜண்டுகள்:—

ஆங்கிலோ இண்டியன் டிரக் அண்டு கெமிகல் கம்பெனி,

155, ஜும்மா மஸீத், மார்க்கட், பம்பாய்.



பார்வதி பரமசிவனை உபசரித்தல்.

விவேகபோதினி

"எப்பொருளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."—திருவள்ளுவர்.

தொகுதி 18 } அக்ஷயஹு ஆடிமீ :: 1926-ஹு ஜூலைமீ { பகுதி 7

முருகன் வழிபாடு

WORSHIP OF LORD MURUGA

தனனதன தாத்த தனதான்

வசனமிக வேற்றி மறவாதே
மனதுதுய ராற்றி லுழலாதே
இசைபயில்ச டாக்ஷ ரமதாலே
யிகபரசௌ பாக்ய மருள்வாயே!
பசுபதிசி வாக்ய முணர்வோனே!
பழநிமலை வீற்ற ருளும்வேலா!
அசுரர்கிளை வாட்டி மிகவாழ
அமரர்சிறை மீட்ட பெருமாளே!

(ப-ரை) பசுபதி சி வாக்யம் உணர்வோனே-ஆன்மாக்களுக்கு நாயகராகிய சிவபெருமான் திருவாய் மலர்ந்தருளிய வேதங்கள் சிவாகமங்கள் இவைகளினுதவியினால் உணரப்படும் மெய்ப்பொருளே!, பழநி மலை வீற்றருளும் வேலா-பழநிமலையின்மீது எழுந்தருளியிருக்கும் வேலாயுதனே!, அசுரர் கிளை வாட்டி-அசுர குலத்தை அழியச் செய்து, அமரர் மிக வாழ-தேவர்கள் மேலான வாழ்வு அடையுமாறு, சிறைமீட்ட பெருமாளே-அவர்களைச் சிறையினின்றும் விடுவித்தருளிய பெரியோனே!, வசனம் மிக ஏற்றி-(அடியேன்) ஒரு மந்திரத்தை உருவேறச் செபித்து, மறவாதே-(நின்னைப் போன்பினாலேயே அடைய முடியுமென்பதை) மறவாமலிருக்குமாறும், மனது துயர் ஆற்றில் உழலாதே-(அடியேனது) மனமானது துயரத்தைத் தருவதும் (பெருகி வடியும்) ஆற்றின் இயல்பையுடையதுமான உலக வாழ்க்கையில் உழன்று திரியாமலிருக்குமாறும், இசை பயில் சட(ா)க்ஷரம் அதாலே-இன்னிசை பொருந்திய ஷடாக்ஷரத்தை அடியேனுக்குப் போதிப்பதன் மூலமாக, இக பர சௌபாக்யம் அருள்வாயே-இம்மையிலும் மறுமையிலும் சகல செல்வங்களையுந் தந்தருள வேண்டும்.

(வி-ரை) சிவாகமங்கள்-சிவபெருமான், ஆன்மாக்கள் தருமார்த்த காமமோக்ஷமென்னும் நான்கு புருஷார்த்தங்களையு மடைவதற்குச் சாதகமாக அருளிச்செய்த முதனூல்கள்; அவை 28. உணர்வோனே உணரப்படுபவனே. முருகப்பெருமானை அடையும் நெறி, அவரிடத்து அன்பு பாராட்டுவது ஒன்றேயென்பதை மறந்து மருட்சியுற்று யாதாமொரு மந்திரத்தை உருவேறச் செபிப்பதைச் சுவாமிகள் பல பாடல்களில் கண்டித்திருக்கின்றார்; அவைகளிலொன்று பின் வருமாறு:—

"உருவேற வேஜெபித்து வொருகோடி யோமசித்தி
யுடனாக ஆக மத்து கந்து பேணி
உணர்வாசை யாரிடத்து மருவாது வோரெழுத்தை
யொழியாது வூதை விட்டி ருந்துநாளும்
தரியாத போத கத்தர் குருவாவ ரோரொ ருத்தர்
தருவார்கள் ஞான வித்தை தஞ்சமாமோ?"

உலக வாழ்க்கையானது ஒரு சமயத்தில் நீர் பெருகிப் பல சுழல்களுடன் கரை புரண்டோடியும் மற்றொரு சமயத்தில் நீர் வற்றியும் இருக்கும் இயல்புடைய ஆற்றையொத்தது என்பதைப் பின்வரும் கந்தரலங்காரப் பாடலில் காண்க.

"சுழித்தோடு மாற்றிற் பெருக்கா னதுசெல்வந் துன்பமின்பங், கழித்தோடு கின்றதெக் காலநெஞ் சேசரிக் கோட்டுமுத்தைக், கொழித்தோடு காவிரிச் செங்கோட னென்கிலை குன்றமெட்டுங், கிழித்தோடு வேலென் கிலையெங்ங னேமுத்தி கிட்டுவதே!"

திருப்புகழ் விருத்தியுரை

6-படை வீடுகள் :: 450 - பாட்டுகள்

12-சஞ்சிகைகளாக வெளிவருகிறது. கிளேஸ் காகிதப் பதிப்பு, பெதர் வெயிட் காகிதப் பதிப்பு ஆகிய 2-பதிப்புகள் பிரசுரிக்கப்படுகின்றன. வருஷ சந்தா (தபால் செலவுடன்) ரூ. 4-12-0. : ரூ. 6-0-0.

அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை.

விவேக போதினி

தொ. 18] அக்ஷய௵ ஆடி௴ [ப. 7

பாரத நாட்டின் வரலாறு

THE STORY OF BHARATA

பாரத நாடு பழம்பெரு நாடே.

—C. சுப்பிரமணிய பாரதியார்.

ஒரு தேசத்தின் சரித்திரம் தொன்றுதொட்டு அங்கு நடந்துள்ள விசேஷ சம்பவங்களையும் அது நாகரிகத்திலும் ராஜாங்க முறையிலும் அபிவிருத்தியடைந்த விதத்தையும், அம்மாதிரி அடைந்த பெருமையில் சம்பந்தப்பட்ட முக்கிய புருஷர்களின் விருத்தாந்தங்களையும் கோர்வையாக எடுத்துச் சொல்லும் கதையாம். அம்மாதிரி அபிவிருத்திக்குக் காரணமானவர்கள் அரசர்களாக விருக்கலாம்; பெரிய தளகர்த்தர்களாக விருக்கலாம் ; வித்தையிலும் சாஸ்திரப் பயிற்சியிலும் பெயர்பெற்ற பெரியோராக விருக்கலாம். புதுமத சித்தாந்தம் செய்து ஒரு புத்தர் போல, முகம்மது நபீ போல, ஒரு தேசத்து ஜனங்களின் மனப்போக்கையே மாற்றும் வல்லமை பொருந்திய மகா புருஷர்களாக விருக்கலாம். ராஜாங்க முறையில் ஏற்பட்டுள்ள குற்றங் குறைகளை அறிந்து அவற்றைப் போக்க முயற்சியெடுத்து, தம்மை எதிர்க்கும் அரசனோ மற்றும் மிக்க பலம் வாய்ந்த ஸ்தாபனமோ, அதிகாரியோ, யாராயிருந்தாலும், அக்கரைப் படாமல் தம்முடைய தியாக புத்தியாலும் ஜன வசீகரண சக்தியாலும் அப்படிப்பட்ட குறைகளைப் போக்கும் திறல்வாய்ந்த சிறந்த தேசாபிமானிகளாக விருக்கலாம். இவர்கள் எல்லோரும் அச்சரித்திரத்தில் பாத்திரங்களாக விருந்து தம்மால் நடந்துள்ள காரியங்களனைத்தையும் புத்தக ரூபமான அம்பலத்தில் மறுபடி நடித்துக் காட்டி அவற்றை வாசிக்குமவர்களுக்குத் தத்தம் குணத்தாலும் சாமர்த்தியத்தாலும் செய்கைகளாலும், தாம் தாம் அடைந்த ஜயாபஜயங்களாலும் அவர்கள் அறிந்துகொள்ளவேண்டிய படிப்பினைகளை வற்புறுத்திக் காட்டுவார்கள்.

உலகமென்பதே ஒரு பெரிய நாடகசாலை. அதில் முக்கியமான நடர்கள் செய்து காட்டும் விஷயங்களே நமக்குத்தெளிவாய்த் தெரிகின்றன. ஆயினும் எந்த நாடகத்துக்கும் சில்லரைப் பாத்திரங்கள் அத்தியாவசிய மானவையாதல் போல ஒரு தேச சரித்திரத்தில் ஜனசமூகத்தில் பலர் செய்யும் காரியங்கள் சேர்ந்துதான் அதைப் பூர்த்தி யாக்குகின்றன. ஆகவே அந்தந்தக் காலங்களில் பொதுஜன வாழ்வில் உள்ள ஏற்றத்தாழ்ச்சியும் சுக துக்கமும் அத்தேச சரித்திரத்தின் அவசியமான பாகம் ஆகலாம்.

பாரத நாட்டின் சரித்திரம் மிக விஸ்தாரமானது. உலகத்தின் பெரும்பாகத்தில் உள்ள ஜனங்கள் அநாகரிகத்தி லமிழ்ந்து, உடுக்க வஸ்திரமும் உண்ண நல்லுணவும், உட்காரக் குடிசையுமில்லாது காடுகள் மத்தியில் அலைந்து திரிந்து கொண்டிருந்தக்கால், விசேஷ நாகரிகம் பெற்று வித்தையிலும், சாஸ்திர ஆராய்ச்சியிலும், இராஜாங்கமுறைகளிலும்,சமூகவாழ்விலும் சிறப்பெய்திய மிகச் சிலதேசங்களில் நம் நாடும் ஒன்றாகவிருந்து, மற்றவைகட்கு ஒரு விதத்திலும் தாழ்ச்சியடையாத பெருமை வாய்ந்திருந்தது. பழைய காலங்களிலிருந்து நமது பெரியோர் எத்தனையோ சதுர்யுகமாக நம் நாட்டார்வாழ்ந்து வந்திருக்கின்றனரென்றும் அந்தக் காலத்துப் பிரமுகர்கள் கதை நமது தேசத்துப் புராண இதிகாசங்களில் பொதிந்து கிடக்கின்றனவென்றும், அப்பழம்பெரு நூல்களில் ஒரு சிறிதே நமக்கு எட்டியுள்ளதென்றும் சொல்லுவர். அவ்வளவில்லாவிடினும் நமது தேச நாகரிகம் புராதனமானதுதான் என்று பாச்சாத்தியரும் ஒப்புக் கொள்ளுவர். இவர்கள் யூதசகாப்தத்தை ஒப்புக்கொண்டு உலகம் கிறிஸ்து பிறக்க 4004 வருஷத்துக்கு முன் ஏற்பட்டது என வெகு காலமாக நம்பி வந்தவர்கள். மற்றெந்த தேச சரித்திரமும் அதைவிடப் பழமையானது என்று சொன்னால் அவர்கள் அது எல்லாம் பொய் யெனச் சொல்லிவந்தனர். எகிப்து நாட்டின் சரித்திரத்தை ஆராய்ச்சி செய்த ஆசிரியர் ப்லின்

டார்ஸ் பெட்ரி (Flinders Petrie) முதலானோர்
அத்தேசத்தையாண்ட முதல் பாரோ(Pharoahs)க்
கள் காலம் 10,000 வருஷத்துக்கு முற்பட்ட
தெனக் கண்டு சொல்லியபொழுது கிறிஸ்தவ
மதாசாரியர்களில் பலர் தம் மத புஸ்தகங்கள்
சொல்லியவற்றுக்கு மாற்ருகச் சொல்லும் சரித்தி
ராசிரியர்கள் எல்லாம் மதத்வேஷிகள் என அவர்
களை வெறுத்துக் கண்டித்திருக்கின்றன ரல்லவா.
ஆகையால் நமது தேச நாகரிகத்தின் காலவள
வைக் கணக்கிடுங்கால் இப்பாச்சாத்திய சரித்திரக்
காரர் ஏற்கனவே தமக்குள்ள பக்ஷபாதத்தினுல்
அதைக் குறைத்துச் சொல்லும் வழக்கத்தில்
வந்து விட்டனர். ஆயினும் மேன்மேலும்
நடந்துகொண்டிருக்கும் ஆராய்ச்சியின் பலனுக
நமது சரித்திரத்தொன்மையைப் பற்றி அவர்க
ளுக்குள்ள அபிப்பிராயங்களும் மாறுதலடைந்து
வருகின்றன. சென்ற மார்ச்சு மாதத்தில் ஆசிரி
யர் மார்ஷல், மோஹெஞ்ஜோ டோரோ என்னு
மிடத்தில் மேலே மூடிக்கொண்டிருந்த மண்ணை
வெட்டியெடுத்து அடியிலுள்ள பழைய பட்ட
ணத்தைப் பரிசீலனை செய்து பார்த்து அது இந்
திய சரித்திரத்தை கிறிஸ்து பிறப்பதற்கு 4000,
5000 வருஷங்களுக்கு முன் வரையில் எட்டும்
படி செய்கிறதென்று சொல்லியிருக்கிருர்.

அம்மாதிரி அவர்கள் செய்வதற்கு நமது
தேசத்துக்குத் தொடர்ச்சியான சரித்திரம் இல்
லாமலிருப்பதே இடம் தந்தது. பெரிய நிகழ்ச்சி
களையும் அவைகள் நடந்தகாலங்களையும் குறித்த
ஒரு அத்தாக்ஷியும் நமது தேசத்தில் இல்லை.
இங்கு வேறிடங்களிலுள்ள மாதிரி அப்பொழு
தப்பொழுது நடந்த விஷயங்களை எழுதி வைத்
தவர் ஒருவருமில்லை. இருக்கும் சில கிரந்தங்களி
லும் நிஜமான சரித்திர பாகம் எது, கதா நாய
கனைப் பெருமைப் படுத்துமாறு சேர்க்கப்பட்டி
ருக்கும் பாகம் எது என்று கண்டு பிடிப்பதும்
கஷ்டமாயிருக்கிறது.

வேறு பல துறைகளிலும் விசேஷமான நூல்
களிருக்க, சரித்திரம் எழுதுவதில் மாத்திரம் நம்
முன்னோர் ஏன் முயற்சி யெடுத்துக்கொள்ள
வில்லையென்று உட்புகுந்து விசாரிக்குங்கால்
அவர்கள், எப்பொழுதும் விதியின் பலனுக இவ்
வுலகத்தில் எல்லாம் சம்பவிக்க, அதைக் குறித்
தெழுதுவதில் என்ன பயனென்றிருந்திருக்கலா
மெனத் தோற்றுகிறது. அவர்களது புத்தி, தத்து
வத்திலும் மோக்ஷலோகத்தை அடையும் வழியை
நினைப்பதிலும் விசேஷமாகப் பிரயோகிக்கப்பட்டு
வந்ததால் ஐஹிக விஷயங்களில் அவர்களுக்
குள்ள வெறுப்பை இப்படிச் சரித்திரமெழுதாமல்
காட்டினுர்களெனச் சொல்லுவாருமுளர். அப்ப
டியானுல் தத்துவசாஸ்திரத்தையும் மதங்களையும்
சார்ந்த புஸ்தகங்கள்தானே இங்கு இருக்கவேண்
டும். வேறு பலவித சாஸ்திரங்களில் பாண்டித்தி
யத்தை அவர்கள் காட்டி இருப்பதைக்கொண்
டும், மனிதர்களுக்குள்ள பலவித உணர்ச்சிகளைச்
செவ்வனே காட்டக்கூடிய ஸாஹித்யத்தில் அவர்
களுக்குள்ள தேர்ச்சியாலும் அது எல்லாம் தகுந்த
முகாந்தரமெனக் கொள்ளமுடியாது. ஆயினும்
மற்றெல்லோராலும் சரித்திரமெனக் கருதப்படு
வது நம்மிடமில்லை யென்பதென்னமோ நிச்சயம்.

நமது தேசத்தில் ஆண்ட ராஜபரம்பரைகளுக்
கும் அவர்கள் காலத்துக்கும் குறிப்பில்லை
யென்ருலும், நம்முன்னோர் வாழ்வு எப்படிப்
பட்டது, அவர்கள் எதெதில் சிரத்தையெடுத்
துக் கொண்டனர், எவ் விஷயங்களில்
சிறப்பெய்தினர் என்று தெரிந்து கொள்ளப்
போதுமான வழிகள் இருக்கின்றன. வேதங்
களும்,ஸ்மிருதிகளும் இதிகாஸங்களும், புராணங்
களும், பல்வகை சாஸ்திரங்களும், பிறகு ஏற்
பட்டுள்ள பல்வகைக் காவியங்களும், நமது
சரித்திர ஆராய்ச்சிக்கு விசேஷமாக உதவுகின்
றன. இவை தவிர கல்வெட்டு, சாசனங்கள் முத
லியனவும், ஆங்காங்கிருந்து கிடைக்கும் நாண
யங்களும் இவ்வாராய்ச்சிக்குப் பயன்படுகின்றன.
நமது எல்லையில் ஒரு பாகத்தில் சமுத்திரமும்
ஒரு பாகத்தில் மலையும் இருந்துகொண்டு அயல்
தேயத்தார் நம்மைச்சுலபமாக அணுகாவண்ணம்
தடுத்தும், அவ்வயலார் பல காரணத்தைக்
கொண்டு இங்கு வந்து தாம் பார்த்தவற்றை
எழுதிவைத்திருக்கும் நூல்களும் ஒருவாறு
நமக்குப் பிரயோஜனமாகின்றன.

இவ்விஷயங்களில் இதுகாறும் விசேஷித்து
ஆராய்ச்சி செய்தவர்கள் பாச்சாத்திய வித்வான்
களே. சென்ற நூறு வருஷ காலமாய் நம்மில்
படித்தோரெனப்படுவர் ஆங்கில சாஸ்திர ஸாகித்
யப் பயிர்ச்சியே தமக்குப் பெரும்பயனெனக்
கருதி அவற்றைக் கற்பதிலும், பரீக்ஷைகளில்
தேறி பட்டங்கள் பெற்று உத்தியோகங்களி
லமர்ந்து சம்பாத்தியம் செய்வதிலும் ஊக்கம்
செலுத்தி வந்தனரேயன்றி நமது நாடு ஞான
விஷயத்தில் உலகத்தாருக்குப் போதிக்க எவ்

வளவு தூரம் முன்வரக்கூடும் என்பதைக்கவனிக்கவேயில்லை. இப்பொழுதுதான் அவர்கள் ஓரளவு ஆராய்ச்சிவேலையில் கருத்துவைத்திருக்கிறார்கள் என்றே சொல்லவேண்டும்.

அப்படி ஆராய்ச்சி செய்த பாச்சாத்தியர் தமது காலத்தையும் பணத்தையும் பாராமல் விசேஷமான வேலை செய்திருக்கின்றனரென்பது அவ்விஷயங்களைக் கவனிக்கும் எவருக்கும் நன்கு புலப்படும். அவர்கள் நாகரிகம் வேறு, நமது நாகரிகம் வேறு. அவர்கள் பழக்க வழக்கங்களும் நம்முடையனவும் வேறு. நமது தேசத்து பாஷைகள் அவர்கள் பாஷையிலிருந்து பதரசனை முதலிய பலவழிகளில் வேறுபாடுடையன. அதிலும் ஸம்ஸ்க்ருதம், பாளி முதலியன பேசும் பாஷைகள் அல்லாததால் அவை சிலருக்கே ஒருவாறு தெரியும். சரித்திர ஆராய்ச்சிக்கு உதவக்கூடிய நாணயங்களிலுள்ள எழுத்துக்களோ, கல்வெட்டு சாஸனங்களோ வெகு கஷ்டப்பட்டு வாசிக்கக்கூடிய லிபிகளில் எழுதப்பட்டுள்ளன. இவ்வாறு ஏற்பட்ட தடைகளையும் இன்னும் தமக்குத் தெரிந்தவற்றைப் பிறருக்குத் தெரியச்சொல்ல நம்மவருக்குள்ள ஆக்ஷேபத்தையும் லக்ஷியம் செய்யாது தமது பெருமுயற்சியால் அவர்கள் செய்துள்ள ஆராய்ச்சி அற்புதமானதென யார்தான் ஒப்புக்கொள்ள மாட்டார்கள். ஆராய்ச்சி முறைகளில் அவர்களுக்குள்ள தேர்ச்சியும் இவ்வேலையில் அவர்களுக்கு உபயோகப்பட்டு வந்திருக்கின்றது.

ஆயினும் அவர்கள் செய்துள்ள வேலைகளில் பல குறைகள் உள்ளன. நமது தேசத்தைப் பற்றிய ஞானக்குறைவே அவர்கள் ஆராய்ச்சியில் தவறுதல்களை உண்டுபண்ணக்கூடியது. நமது தேச ஐதிகம் அவர்களுக்குத் தெரியாது. ஒரு வேற்று பாஷையை அறிவதென்றால் மிகக் கடினம். எவ்வளவு சிரமப்பட்டாலும் அதிலுள்ள வார்த்தைகளின் சூக்ஷ்மார்த்தங்கள் எளிதில் பிடிபடா. அதிலுள்ள கிரந்தங்களை அறியப்புகுங்கால் அப்பாஷையை பரம்பரையாய் அப்பியசித்து அக்கிரந்தங்களை ஆசார்ய முகமாய்ப் படித்துத் தெரிந்து கொண்டவர்களின் அபிப்பிராயங்களையல்லவா சரியென ஒப்புக்கொள்ளவேண்டும். இம் மேற்றிசை வித்துவான்களில் பலர் அக்கிரந்தங்களுக்கு ஏற்பட்டுள்ள வியாக்கியானங்கள் தவறென தைரியமாய்ச் சொல்லிக்கொண்டும், அவை வந்த தாதுக்களிலிருந்தும் இன்னும் பலவிதமாகவும் அவற்றுக்கு அர்த்தம் செய்துகொண்டும், விஷயமொன்றிருக்க அவைகளின் கருத்தை ஒரு விதமாக மாற்றி, அதிலிருந்து பாரத நாட்டார் அடைந்த நாகரிகம் அவ்வளவு விசேஷமல்லவெனவும், அவர்கள் சிறந்தனவெனக் கருதிய கிரந்தங்கள் சாதாரணமானவெனவும் அபிப்பிராயப் பட்டிருக்கின்றனர்.

இவற்றுக்கெல்லாம் காரணங்கள் சிலவுண்டு. நமது தேசசரித்திர ஆராய்ச்சி செய்ய வந்தவர்கள் நமக்கும் சிறப்புள்ளதென்பதை அவ்வளவாக ஒப்புக்கொள்ளத் தயாராகவில்லை. இத்தேசத்தார் ஐரோப்பியரைவிட எல்லா விஷயங்களிலும் மட்டந்தானென நினைத்துள்ளவர். அது மாத்திரமா? வெள்ளைக்காரருக்கு மற்ற எவரும் ஈடில்லையென்று மதித்து மஞ்சள் நிறத்தாரும், பழுப்பு நிறத்தாரும், கறுப்பு நிறத்தாரும் அவர்களுக்குக் கீழ்ப்படிந்து நடந்து அவர்களால் சிறிது முன்னேற்றமடைய வேண்டியவர்கள் என்னும் அபிப்பிராயத்தை அவர்களுக்குள் மனுஷ்யவர்க்க சாஸ்திரம் அறிந்தோர் வற்புறத்திக் கூறியிருக்கிறார்கள். மேலும் அவர்கள் மதாசாரியர்கள் பர மத கண்டனம் செய்யத் தலைப்பட்டு, நமது மதங்கள் அவற்றின் தத்துவங்கள் முதலியன தெரியாது தம்முடன் நெருங்கிப் பழகும் தாழ்ந்த ஜாதியாரைப் போன்றவரே இத்தேசத்திலுள்ள ஜனஸமூகம் முழுவதுமென நினைத்துத் தம் தேசத்தார்களுக்குப் போதித்திருக்கின்றனர். இது மாத்திரமல்ல நமது தேசம் அன்யாக்ராந்தமல்லவா? நம்மை யாள்வோர், செல்வமும் பலமும் படைத்த வெள்ளை நிறத்தாரல்லவா? தம்மால் ஜயித்து ஆளப்பட்டுத் தாம் காலாலிட்ட வேலையைத் தலையால் செய்து வருபவர் தம்மைவிட எந்த விஷயத்திலும் சிறப்புடையவரென ஒப்புக்கொள்வாரா? அதனாலல்லவா நமது தேசத்தில் விசேஷ ஆராய்ச்சி செய்துள்ளவர் ஆங்கிலேயரல்லாது ஜர்மானியரும், பிரான்ஸியரும் மற்ற தேசத்தினருமாக இருக்கின்றார்கள்!

இப்பொழுதுதான் நம்மவர் இவ்வேலையில் புகுந்திருக்கிறார்கள். எனினும் ஏற்கனவே அவர்கள் செய்திருக்கும் வேலை விசேஷமாக இருக்கிறது நம் தேசபாஷைகள் அவர்களுக்குச் சுலபமாகத் தெரிகின்றன. அவைகளை வியாக்யானம் செய்வதும் அவர்களுக்குக் கஷ்டமில்லை. பரம்பரையாய் வந்துள்ள அர்த்தங்களை அவர்கள்

இத்தேசத்தில் நிறையவிருக்கும் பண்டிதர்களிடமிருந்து சுலபத்தில் தெரிந்துகொள்ளலாம் நமது தேசத்தில் மத விஷயங்கள் பலவும், வழக்கங்கள் அநேகமும் ஆதிமுதல் இதுவரையில் அதிகம் மாறவில்லை. ஆதலால் அக்காலங்களில் உள்ளவர்கள் மனப்போக்கை அறிவது நம்மவர்க்குச் சுலபம். பாச்சாத்திய வித்துவான்களுக்குள்ள அகம்பாவம், அலக்ஷ்ய புத்தி, மோஸெஸ் சகாப்தத்தால் உண்டான காலவரையறை முதலியன நம் தேசத்தவர்களைப் பாதிக்காது. அவைகளுக்கு எதிரிடையான தேசபக்தி, பெரியோர்களிடமுள்ள மரியாதை, அவர்கள் நாகரிகத்தின் மேன்மை, அவர்கள்முன் நாம் எம்மட்டு என்று நினைக்கும் பயபக்தி முதலியன நம் நாட்டு ஆசிரியர்களை இப்புராதன சாஸனங்களை ஊக்கத்துடனும் மரியாதையுடனும் க்வனித்து ஆராய்ச்சி செய்யச் செய்யும். மேலும் அவர்களும் ஆராய்ச்சி முறையை நன்கறிந்து இருப்பதால் நமது தேசத்தின் சரித்திரத்தை உள்ளது உள்ளவாறு எழுதும் திறமை அவர்களுடையதென்றே சொல்லலாம். ஆயினும் அவ்வாறு நமது தேச வித்வான்களாலேயே எழுதப்படும் நமது தேச சரித்திரம் எப்பொழுது கிடைக்குமோவென்று நாம் எதிர்பார்க்க வேண்டியிருக்கிறது.

பாச்சாத்திய வித்துவான்கள் நம் தேசத்தவரிடம் வைத்திருக்கும் மரியாதை பதினைந்து வருஷத்துக்கு முன் ஆரம்பித்து மகாயுத்தம் முடிந்தவுடன் பிரசுரம் செய்யப்பட்ட கேம்ப்ரிட்ஜ் இந்திய சரித்திரம் முதற் புத்தகத்தில் தெரிகிறது. அதில் ஒவ்வொரு விஷயத்தைப் பற்றியும் அததில் தேர்ச்சியடைந்த ஒருவித்துவான் எழுதிய வியாசங்கள் அடங்கி யிருக்கின்றன. ஆயினும் இந்திய வித்துவான்கள் ஒருவரும் அதற்கு விஷயம் எழுதித் தர யோக்கியதை உள்ளவர்கள் என அதன் பதிப்பாசிரியர் நினைக்கவில்லை. இந்தியர் அபிப்பிராயங்கள் அதில் அதிகம் இருப்பதாகச் சொல்லுவது சரியல்ல.

மேலே சொல்லியிருக்கும் விஷயங்கள் ஒரு சரித்திரத்துக்கு சாதாரணமாய் வேண்டிய அத்தாக்ஷிகள் இல்லாத காலத்துக்கே ஏற்கும். முஸ்லீம் சரித்திரக்காரர் முதலியோர் எழுதிவைத்திருக்கும் புஸ்தகங்களும் மற்றும் சரித்திர நிச்சயத்துக்கு உதவக்கூடிய யாதாஸ்துகளும் உள்ள காலங்களுக்கு அவையொவ்வா.

அடுத்த மாதம் இந்திய சரித்திர பூ வர்ணனம்.

வர்த்தமானம்

PRESS COPY

ஒரு கதை



பழனியாண்டியின் காமிரா.

அன்று விடியுமுன்னெல்லாம் பெரிய மழை பெய்து கொண்டிருந்தது. விழனியில் சாலையெல்லாம் ஒரே சேறு. ஆங்காங்கு பள்ளங்களில் செவேலென்று ஜலம் தேங்கியிருந்தது. சூரியன் புறப்பட்டும், வானத்தில் கருமை நீங்கவில்லை. மேகங்கள் அங்குமிங்கும் காற்றில் ஓடிக்கொண்டிருந்தன. பெரிய மழை ஓய்ந்துவிட்டாலும் தூவானம் ஓயவில்லை. அப்பொழுது பழனியாண்டி தன் வீட்டிலிருந்து மெதுவாய் மாடவீதிக்கு வந்தார். குளிர் அதிகமானதால் அவர் பலமாகப் போர்த்துக் கொண்டிருந்தார். தூற்றலுக்கு பயந்து தலையில் ஒரு முக்காடும் இட்டிருந்தார். மெதுவாக வந்து அங்குள்ள ஒரு மண்டபத்தில் உட்கார்ந்துகொண்டு ஏதோ முணுமுணுத்துக் கொண்டிருந்தார்.

பழனியாண்டி சென்னைப்பட்டணத்தில் உலவி வரும் அரவபத்திரிகைக்கு சொந்த நிருபர். அவர்

அங்கு இருக்கும்போது, மற்றொருவரும் அங்கு வந்துசேர்ந்தார். அவர் பாரதபாலினி பத்திரிகை யின் நிருபரான ராம்ஜிதாஸ். பழனியாண்டி யைப் போலவே அவரும் பலமாய் மூடிக்கொண்டு தான் வந்தார்.

இவ்விருவருக்குள் தற்காலம் சண்டை இல்லை. எப்பொழுதும் அவர்கள் அப்படி இருந்ததில்லை. அந்தவிடத்தில் பத்திரிகைக்கு அனுப்பக்கூடிய விஷயங்கள் கிடைப்பது வெகு கடினம். அப்படி ஏதாவது விசேஷம் நேர்ந்தால் அவர்களுக்குள் அதைப் பற்றிய விவரத்தை யார் முன்னே தெரிந்து தன் பத்திரிகைக்கு அனுப்புகிறது என் பதைப்பற்றி மித மிஞ்சினபோட்டி. சென்னைப் பத்திரிகாசிரியர்கள் அதைப்பற்றி அக்கரைப்பட்ட தாக ஏற்படவில்லை. ஆயினும் பழனியாண்டி ஒரு விஷயத்தைப் பற்றி எழுதிவிட்டால் ராம்ஜி தாஸ் அவர் தன்னை ஏமாற்றிவிட்டதாக நினைத் துத் தனக்குப் பதில்செய்ய எப்பொழுது சமயம் வாய்க்குமென்று பார்த்துக் கொண்டிருப்பார். அப்படியே பழனியாண்டியும்.

வெறும் போட்டியிலிருந்து அவர்களுக்குள் மனஸ்தாபமும் நேர்ந்தது. ஒருவருக்கொருவர் அபகாரம் செய்ய வாரம்பித்தார்கள். சண்டை முற்றியது.

பின் ஒரு நாள் மதுரையிலிருந்து அங்கு வந்த ஒரு நண்பர் அவர்கள் இருவரையும் ஒன்று கூட்டி பிழைக்கும்வழி அப்படி இல்லையென் றும் ஒருவரை யொருவர் கலந்து ஒத்து வாழ்ந் தால் இருவரும் லாபமடையலா மென்றும் சொன்னார். அதன் உண்மை அப்பொழுதுதான் இருவருக்கும் பட்டது.

"என்ன மழை! விடாது பெய்கிறது!" என் றார் ராம்ஜி.

"ஆமாம்! விசேஷம் ஏதாவதுண்டா" என்று கேட்டார் பழனியாண்டி.

"விசேஷமேது விசேஷம்? உமக்குத் தெரி யாதது எனக்கு மாத்திரம் விசேஷம் ஓடிவரப் போகிறதோ? என்னமோ இருக்கிறது தொழில். சாப்பாட்டுக்குக்கூட வரும்படிக் கிடமில்லை."

"ஆமாம் ஒரு கொலையா, ஒரு களவா, ஒன் றைக்காணோம்" என்று சொல்லிக்கொண்டிருக் கும்போதே அவ் வீதியிலிருந்து ஒரு சந்துக் குள்ளே மோட்டார் ஒன்று போவதை இருவ ரும் கண்ணுற்றனர்.

"அதென்ன போலீஸ் மோட்டார் போலிருக் கிறதே! டெபுடி சூபரின்டென்டென்ட் நேரில் வந்திருக்கிறார். என்ன விசேஷமோ?" என்றார் ராம்ஜி.

"ஆ! போய்ப் பார்ப்போம்" என்று பழனி யாண்டி சொல்ல இருவரும் உடனே தங்கள் தங்கள் வீடுபோய் 'ஆபீஸ்' உடையணிந்து அங்கு வந்துசேர்ந்தனர்.

அவர்கள் வருமுன் அங்கு ஒரு பெரிய கூட்ட மும் இருந்தது. என்ன விசேஷமென்று கேட்க, ஒருவன் "ஏதோ கொலையாம். ஒரு கிறிஸ் தவன் நேற்றிரவு இங்கு வந்திருந்தான். இங் குள்ள ஒரு சிறு பெண்ணைச் சுட்டு தன்னையும் கொன்று கொண்டதாகச் சொல்லுகிறார்கள். உண்மை தெரியவில்லை.வாசலில் போலீஸ்பந்தோ பஸ்து. ஒருவரையும் உள்ளே விடவில்லை" என் றான்.

பழனியாண்டியும் அவர் சிநேகிதனும் கூட் டத்தை விலக்கிக்கொண்டு அந்த வீட்டண்டை சென்றனர். வாசலில் இருந்தவர்கள் அவ்வூரி லுள்ள கான்ஸ்டபில்கள்தான். பத்திரிகை களுக்கு நிருபம் எழுதுகின்றவர்களென்று இவர் களிடம் அங்கெல்லாம் கொஞ்சம் மதிப்புண்டு. ஆதலால் இவர்கள் வந்தவுடன் உள்ளே சுலபமா கப் போக முடிந்தது.

அங்கு ஓர் அறையில் ஒரு கட்டிலில் ஒரு ஸ்திரீ படுத்திருந்தாற்போ லிருந்தது.அவள் முக மெல்லாம் மூடியிருந்தது. கீழே ஒருவன் கிடந் தான். அசைவற்றிருந்த அவர்கள் உடம்பும், பக் கத்தில் கிடந்த ஒரு கைத்துப்பாக்கியும் கட்டி லில் படுக்கை ஓரத்திலும்,கீழே இருந்தவன் வாயி னண்டையும் பெருகிக் கட்டி தட்டியிருந்த கறு ரத்தமுந்தான் அவர்கள் இறந்ததாகக் காட் டிற்று. அங்கு காவலிருந்த போலீஸார் அவர் களை அதற்குமேல் அவ்விடமிருந்து பார்க்க இடங்கொடுக்கவில்லை.

போலீஸ் சூபரின்டென்டைப் போய்ப் பார்த்த னர். அவர் நமது நிருபர்களுடன் ஜாஸ்தி பேச வில்லை.

"கொலைகளைப் பற்றித் தங்கள் அபிப்பிராய மென்ன?" என்று கேட்டார் பழனியாண்டி.

"என்ன அபிப்பிராயம்! எங்கள் அபிப்பிரா யங்களை சொல்ல முடியுமா? இன்னும் நாங்கள் எல்லாவற்றையும் முற்றிலும் கவனித்து முடி வுக்கு வரவில்லை"

'அப்படியா, இவர்கள் யார்?'

"யாரோ கிறிஸ்தவர்கள். இன்று மூன்று மணிக்கு பஞ்சாயத்து விசாரணை நடக்கப்போகிறது. அப்போது உங்களுக்கு வேண்டியதைத் தெரிந்து கொள்ளலாமே. சற்று வேலையாய் இருக்கிறேம். போய் வருகிறீர்களா ? யாரங்கே ஆர்டர்லி—"

என்று கூப்பிடும்பொழுதே நம் நண்பர் இருவரும் வாசலில் வந்துவிட்டனர்.

பஞ்சாயத்து விசாரணையின்போதும் கூட்டந்தான். ஆனல் அங்கு கிடைத்த சமாசாரமும் கொஞ்சந்தான். அவ்வீடு இரண்டு மூன்று மாதமாகக் குடியில்லாமல் பூட்டப்பட்டிருந்தது ஐந்தாறு நாளைக்குமுன் ஞானரத்தின உடையார் என்பவன் அதை வாடகை பேசி ஒரு பெண்பிள்ளையைக் கொண்டுவந்து குடிவைத்தான். யார் யாரோ அங்கு வந்து போய்க்கொண்டிருந்தார்கள். அப் பெண்பிள்ளையையாவது அங்கு வருபவர்களையாவது ஒருவருக்கும் தெரியாது. அந்தத் தெருவே அவ்வளவு நல்ல பெயர் வாய்ந்ததல்ல. ஆகையால் தவருன நடத்தையுள்ள அந்த ஸ்திரீயையும் அங்கு வந்துபோனவர்களையும் ஒருவரும் குறிப்பாய்க் கவனிக்கவில்லை என்று வைத்துக்கொள்ளலாம்.

அங்கு சுட்டுக்கிடந்த ஆண்பிள்ளை ஞானரத்தினந்தான். அவன் அங்கியில் ஒரு பையிலிருந்த கடிதத்திலிருந்து அது தெரியவந்தது. அந்தப் பெண்பிள்ளையின்பேரில் (அவள் பெயர் சுந்திரா) ஞானரத்தினத்துக்கு சந்தேகம் உதித்திருந்ததென்றும் பல நாளாக அவன் அவளைப் பயமுறுத்திக் கொண்டிருந்தானென்றும் ஏற்பட்டது.

ஆகவே ஞானரத்தினத்துக்கு வந்த கோபத்தின் பலனுக அவன் அவளைக் கொன்று தன்னையும்சுட்டுக்கொண்டான். போலீஸ்காரர்களுக்குத் தங்கள் சாமர்த்தியத்தைக் காட்ட இடமில்லையே என்று சற்று வருத்தந்தான். ஆயினும் என்ன செய்கிறது? பிணங்களை ஊர் மணியகாரரிடம் ஒப்புவித்து அவைகளை அடக்கம் செய்ய ஏற்பாடு செய்ய வேண்டுமென்று உத்திரவிட்டு சூபரின்டென்டென்ட் திரும்பினர்.

நம் நிருபர் இருவரும் உடனே தங்களுடைய பத்திரிகைகளுக்கு நடந்தவற்றை வைத்துக்கொண்டு பலமாகக் கடிதம் எழுதிவிட்டார்கள். அரவ பத்திரிகையில், கோரமான கொலை! ஒரு பெண்மணியும் அவள் நேசனும் சுடப்பட்டனர்! சந்தேகம் காரணம் என்னும் தலைப்புகளின்கீழ் இரண்டு பத்திகள் நிறைய விஷயங்கள் சொல்லப்பட்டிருந்தன. 'பாரதபாலினி'யிலோ இரட்டைக் கொலை! நாயகனும் நாயகியும் சுட்டுக்கொண்டிறந்தனர்! பெண்ணின் துர் நடத்தை! என்னும் தலைப்புகளின் கீழ் என்னென்னமோ சொல்லப்பட்டிருந்தன.

¶

மறுநாள் விழுணிக்குப் பத்து மைலுக்கப்பாலுள்ள செம்பட்டியில் மாதா கோவில் தெருவில் ஒரு கூரைவீட்டுப் புழக்கடையில் சாமிவேல் உடையார் வேலை செய்து கொண்டிருந்தனன். அவன் வீட்டுக் கதவு தாளிட்டு இருந்தது. அவனுக்கு வயது இருபத்தைந்து இருக்கும். அவன் தாயார் காது கேளாத ஒரு கிழவி. அவள் மாத்திரம் அந்தவீட்டில் அவனுடன் இருந்தாள். ஆக வேவா[illegible] யாரோ பலமாய்க் கதவை இடித்தபோது சாமிவேலே வந்து அதைத்திறக்க வேண்டியிருந்தது. வந்தவர் விழுணியிலுள்ள ஞான ஒளிவு அய்யர். அவர்களுக்குள் அவ்வளவு பரிசயம் போதாது. ஆயினும் அவர் தரித்திருந்த உடையால் வந்தவர் ஒரு நாட்டய்யர் என்று தெரிந்து, சாமிவேல் அவரை வணங்கி, வந்த சமாசாரத்தைக் கேட்டான். அவரும், "இவ்வூரில் ஞானரத்தின மென்றெரு பிள்ளையாண்டான் இருந்தாஞ?" என்று கேட்டார். "யாரு? ஞானரத்தினமா ? ஆமாம் செல்வராயன் மகன் ஞானரத்தினந்தானே ?"

"அது என்னமோ எனக்குத் தெரியாது. நல்ல லக்ஷணமான பிள்ளையாண்டான். சிவப்பு வர்ணம் பெரிய கண்களும் எடுப்பான மூக்கும் உடையவன். அவன் ஊர் செம்பட்டி என்று சொன்ஞர்கள்" என்று பேசி முடிக்குமுன் சாமிவேல் 'ஆமாம்' அவன்தான். அவனுக்கென்ன ?" என்று கேட்டான்.

'ஒன்றுமில்லை' அவ்வளவு நடத்தை ஒழுங்கில்லையோ ?"

"ஆமாம். இங்குள்ள குட்டிகளே அவனைக் கண்டு பைத்தியம் பிடித்துப் போய்விட்டார்கள். அவன் ரூபமே அவனுக்குக் கெடுதலாக இருந்திருக்கிறது. அவனைப்பற்றி என்ன விசேஷம்"?

"சொல்வதற்கு கஷ்டமாயிருக்கிறது. அவன் இறந்துவிட்டான்."

"இறந்துவிட்டாஞ'? ஏன் ? எப்படி ? யார் அவனைக் கொன்ருர்கள் ?"

"ஒருவரும் கொல்லவில்லை. அவன் ஒரு பெண்ணையும் கொன்றுவிட்டுத் தன்னையும் ஒரு துப்பாக்கியால் சுட்டுக்கொண்டான் போலிருக்கிறது" என்று ஐயர் சொல்லு முன்னமே, கண்ணில் கரகரவென்று நீர்சொரிய அழுதவண்ணம் நின்றான் சாமிவேல்.

"உமக்கு சிநேகிதனோ?" என்றார் நாட்டய்யர்.

"ஆமாம். நாங்கள் எல்லாம் ஒன்றாய்க் கூடி விளையாடினவர்கள். ஞானரத்தினம் நல்லபையன் தான். ஆயினும் பெண்மக்கள் விஷயத்தில் பொல்லாதவனெனப் பெயர் எடுத்தான். இவ்வூரிலேயே கொஞ்சம் கெட்ட பெயர் உண்டு. பாலப்பட்டியில் சிகாமணி உடையார் ஒருதரம் அவன் தன் பெண்டாட்டியோடு பேசிக்கொண்டிருந்தானென்று பலமாக உதைத்து விட்டார். அப்போது ஓடிப்போனவன்தான். இன்று இந்த கஷ்ட சமாசாரம் கிடைத்திருக்கிறது. அவன் சவத்தை என்ன செய்தார்கள்?"

"சர்க்கார் செலவில் குழி வெட்டிப் புதைத்து விடுவதாக ஏற்பாடு செய்தார்கள். அப்பொழுது நான்தான், 'ஐயோ பாவம்! கிறிஸ்தவனாயிற்றே! நமது ஆகம விதிப்படி புதைக்காமல் விட்டுவிட்டால் ஆத்துமா தவிக்குமே' யென்று மணிகாரரிடமும் போலீஸாரிடமும் சொல்ல, அவர்கள் சவத்தை என்வசம் ஒப்புவித்து விட்டார்கள். உடனே பெட்டியில் அடக்கம் செய்து அவ்வீட்டிலேயே வைத்திருக்கிறேன். அதைப் புதைக்க என்ன ஏற்பாடு செய்யலாம்? இங்கு கொண்டுவரலாமா? இல்லை என்று —"

"கட்டாயம் இங்குதான் கொண்டுவந்து புதைக்க வேண்டும், தாங்கள் எந்த சபை உபதேசியார்?"

"லூத்தர் சபை."

"நாங்களும் தான் கர்த்தரின் கிருபை இதிலேயே தெரிகிறது".

"விழுணியில் சொன்னார்கள் நீங்கள் எல்லாம் லூத்தர்சபையென்று. அதனால்தான் நான் இதில் பிரவேசித்தது."

"அப்படியல்ல, இங்கு நாங்கள் நாலைந்து வீட்டுக்காரர்தான் லூத்தர்மார்க்கம் இங்கே கத்தோலிக்கர் இருக்கிறார்கள். இங்கிலீஷ் கோயில் (Church) காரர்களும் இருக்கிறார்கள். எங்களுக்குள் கக்ஷிகளுக்குக் குறைவில்லை."

"அப்படியா? அதிருக்கட்டும். என்றைக்கு அடக்கம் செய்யலாம்?"

"நாளை போக மறுநாள் ஆகலாமா?"

"அதற்குமுன் முடியாதோ?"

"சில ஏற்பாடுகள் செய்யவேண்டியிருக்கிறது. கொஞ்சம் பணமும் சேர்த்துக்கொள்ள வேணும். எல்லாவற்றுக்கும் இன்றைய தினம் திங்கட்கிழமையா? செவ்வாய், புதன்போக வியாழக்கிழமையன்று புதைத்துவிடலாமா?"

"உங்கள் சௌகர்யம். ஆனாலும் உஷ்ணதேசம். ஜாஸ்தி நாளைக்குச் சவத்தை வைத்திருந்தால் துர்நாற்றம் தாங்கமுடியாது"

"என்ன செய்யலாம்? திடீரென இப்படிச் சாவானெனத் தெரியாதே! கூடிய சீக்கிரம் ஏற்பாடு செய்துவிடுகிறோம்"

"சரி, கால தாமதமாகிறது. நான் போய் வரட்டுமா?"

"அதேனையா! வந்து சாப்பிடாமல் போவது? ஏதோ கொஞ்சம் காப்பி குடித்துவிட்டுப் போங்கள்" என்று சாமிவேல் ஐயருக்கு உபசாரம் செய்து அவரை அனுப்பிவிட்டான்.

¶

நாட்டய்யர் போனபின் சாமிவேல் தன் நண்பன் இறந்ததை நினைத்து மிக்க வருத்தப்பட்டான். அவன் இருந்த காலத்தில் சாமிவேலுக்கு ஞானரத்தினம் சில அபகாரம் செய்ததுண்டு. அடுத்த வீட்டில் மரியாள் என்ற குட்டியை அவன் கலியாணம் செய்ய நினைத்துத் தன் தாய் மூலமாம் நிச்சயம் செய்துகொண்டு வருகையில் ஞானரத்தினம்தான் அவளைக்கலியாணம் செய்து கொள்வதாக ஆசை வார்த்தை பேசினான் அதைக் கேட்டு அந்தப் பெண் ஒரே பிடியாய் ஞானரத்தினத்தையே கலியாணம் செய்துகொள்வேன் என்றுரைக்க, இவள் பெற்றோர்கள் என்ன செய்வதென்று தெரியாமல் விழித்தனர். சாமிவேல் கலியாணப் பேச்சு நின்றுபோயிற்று. ஆனால் ஞானரத்தினமோ சாக்குப் போக்குகள் சொல்லிக்கொண்டு காலதாமதம் செய்தான். கடைசியாக அவன் வீண் அயோக்யத்தனம் செய்தானென்று கண்டுகொண்ட மரியாளுடைய தாய்தகப்பன்மார் மிக்க வருத்தப்பட்டு மறுபடியும் சாமிவேலுக்குப் பெண்ணைக் கொடுப்பதாகச் சொல்லினர். ஆயினும் சாமிவேலின் தாயார் ஒரேபிடியாக அது கூடாதென்று தடுத்து விட்டாள். அது நடந்து வருஷம் மூன்றாகி விட்டது. ஆகியும் அந்தப் பெண்ணுக்குக் கலியாணம் என்னமோ இன்னும் நடக்கவில்லை.

ஆனால் இச்சமயம் அதையெல்லாம் மறந்து விட்டான் சாமிவேல். அவன் இறந்தானென்கிற துக்கமே அதிகமாயிருந்தது. தன் பெட்டியைத் திறந்து ஒரு ஐந்து ரூபாய் நோட்டை எடுத்து அவனை யடக்கம் செய்வதற்குத் தன் செலவாக அதை வைத்தான்.

பிறகு அவன் வுத்தர் மார்க்கத்தைச் சேர்ந்த தன் அயலார் வீடுகளுக்குப் போகப்புறப்பட்டான். அந்தத் தெருவில் எதிர்வாடையில் கோடி வீட்டில் ஒரு கைம்பெண் கிழவி இருந்தாள். அவளுக்குப் பெண்கள் நான்கு. ஒருவருக்கும் கலியாணம் ஆகவில்லை. ஆயினும் அவர்களெல்லோரும் கஷ்டப்பட்டு வேலைசெய்து பணம் சம்பாதிப்பவர்கள். கிழவியும் அவள் கடைசிப் பெண் எலிசபெத்தும் விடியற்காலையில் எழுந்திருந்து அப்பம் சுட்டு விற்பார்கள். மற்றும் இருவர் நெல் பிடித்துக் குத்திப் பக்கத்துக் கிராமங்களில் அரிசி விற்பது வழக்கம். இரண்டாவது பெண் ரத்தினம் மதுரையில் ஒரு 'மிஷன்' பள்ளிக்கூடத்தில் சிறிது காலம் படித்தவள். அங்கிருக்கும்போது கம்பளிநூலில் குல்லாய் முதலியன செய்யக் கற்றுக்கொண்டாள். இப்பொழுது நூல் வாங்கி அவைகளைப் பலவித அழகான உருப்படிகளாகச் செய்து சுற்றுக்கிராமங்களில் விற்று வந்தாள். அதில் நல்ல லாபம் கிடைத்தது. அவர்கள் எல்லாம் தங்கள் தங்கள் சம்பாத்தியத்தைத் தாங்களே வைத்துக்கொள்ளுவது வழக்கம். ஆகையால் ரத்தினந்தான் அவர்களில் காசுக்காரி.

சாமிவேல் அவர்கள் வீட்டுக்குப் போனான். அப்போது அவர்களெல்லோரும் வீட்டுத் தாழ்வாரத்தில் கூடியிருந்தார்கள். அவர்களிடம் ஞானரத்தினம் இறந்தானெனச் சொல்ல அவனுக்கு வெகு கூச்சமாக இருந்தது. அதற்குக் காரணம் அவன் ரத்தினம்மாளைக் கலியாணஞ் செய்துகொள்வதாகச் சொல்லிப் பிறகு ஏமாற்றி விட்டதுதான். ஆயினும் ஏமாற்றினானென்று சொல்வது அவ்வளவு சரி அல்ல. அவர்கள் வீட்டுக்கு அவன் அடிக்கடி வந்து போய்க்கொண்டிருந்தான். அவனுக்கும் ரத்தினத்துக்கும் சிறிது நேசம் ஏற்பட்டது. ரத்தினம் அழகு வாய்ந்தவளும் சம்பாத்தியம் செய்யும் திறமை உள்ளவளுமாதலால் அவர்களுக்குக் கலியாணம் நடக்குமெனப் பலர் நினைத்தனர். ஆனால் அப்படி ஒன்றும் நடக்கவில்லை. ரத்தினத்துக்கு மாத்திரம் அவனிடம் அதிக வாஞ்சையுண்டு. ஆகவே அங்கு என்ன சொல்லுகிறதென்று தெரியாமல் சாமிவேல் விழித்தான். பிறகு கிழவியைத் தனியாய் அழைத்து அவளிடம் நடந்தவற்றைச் சொன்னான். "ஆ" என்பதாக அவள் ஆர்ப்பரித்து அழுது ஞானரத்தினம் இறந்ததை எல்லோருக்கும் தெரியக் கத்தினாள். அப்போது அங்குள்ளவர்கள் மிக்க வருத்தமுற்றனர். ரத்தினத்தின் மனநிலை மிகவும் கஷ்டமாகக் காணப்பட்டது. அவள் பெருமூச்செறிந்து கண்களில் நீர் ததும்ப அவ்விடத்தை விட்டுப் பக்கத்திலுள்ள ஓர் அறைக்குள் போயினாள். அங்கிருந்து பத்து நிமிஷம் வரையில் திரும்பி வரவே இல்லை. தாழ்வாரத்தி லிருந்தவர்கள் ஒருவர் முகத்தை ஒருவர் திக்பிரமையுடன் பார்த்துக் கொண்டிருந்தார்கள். கடைசியாக அவள் தன் கையில் தான் செய்துவைத்திருந்த குல்லாய்கள் கால்சிறுப்கள் முதலியவற்றுள் பத்துப் பன்னிரண்டை எடுத்து வந்து, "சாமிவேலண்ணே! இதோ இவைகளை எடுத்துக்கொண்டு விற்று ரத்தினம் அண்ணனை நமது கல்லறையிலேயே அடக்கம் செய்ய ஏற்பாடு செய்யுங்கள்" என்று சொல்லினாள். சொல்லும்போதே அவளுக்கு நெஞ்சடைத்துக் கொண்டது.

அவ்வாறே மற்றுமுள்ள வீடுகளுக்கும் சென்று சமாசாரம் சொல்ல எல்லோரும் மிக்க மனவருத்தமுற்றனர். அவர்களுள் சிலர் சாமிவேலைப் பார்த்து, "நீங்கள் யாராவது விழணிக்குப் போய் இறந்தவன் அவன்தானா எனப் பார்த்து வாருங்கள்" எனச் சொல்லினர். அவனும் ஆகட்டுமென்று புறப்பட்டு நாட்டய்யர் வீடு போய்ச் சேர்ந்தான். இருவரும் சவங்கள் இருந்த வீட்டுக்குச் சென்றனர். அங்கே இருந்த போலீஸ்காரர், கூட்டத்தை விலக்கி இவர்கள் இருவரையும் உள்ளே போகவிட்டனர். சாமிவேலும் சவப்பெட்டியைத் திறந்து இறந்தவன் தங்களூர் ஞானரத்தினந்தானென அறிந்தான்

சாமிவேல் வந்த சமாசாரம் விழணியில் தெரிந்தது. உடனே தெருவில் பலமான கூட்டம். நமது நிருபர் இருவரும் உடனே அங்கு வந்து சேர்ந்தனர். பழைய போட்டி நாட்களில் அவர்கள் இருவரும் புகைப்படக் 'காமிரா' வாங்கி வைத்திருந்தனர். இது பெரிய கொலைக்கேஸ் ஆதலால் இரண்டு காமிராக்களும் வெளிவந்தன. சவம் வெளிவருங்கால் அதைப் படம் பிடிக்கத்

மாறுபா டில்லாத வுண்டி மறுத்துண்ணி னூறுபா டில்லை யுயிர்க்கு.

தகுந்த இடங்கள் பார்த்து அவற்றை அங்கு வைத்திருந்தனர்.

ஆயினும் அதெல்லாம் பிரயோசனமில்லாமல் போயிற்று. சாமிவேல் சவத்தைப் பார்க்க வந்தானேயொழிய அதை யெடுத்துச் செல்ல வரவில்லை. அது அங்கு வந்தவர்களுக் கெப்படித் தெரியும் ?

ஆயினும் அவனைக்கூட அவர்கள் பார்க்கக் கொடுத்துவைக்கவில்லை. சாமிவேல் அவ்வீட்டிலிருந்து புறப்படுமுன்னர் போலீஸ்காரரில் ஒருவன் ஓடிவந்து வாசலில் உள்ள கூட்டத்தைக் காட்டி அதைத் தாண்டிப் போவதை விட புழக்கடைப் பக்கமாய்ச் சந்தடியில்லாமல் போய்விடலாமென்று சொல்லினன். அப்படியே சாமிவேலும் செய்தான். நிருப நேயர்களுக்கு ஒரு படம் பிடிக்கவோ, ஏதாவது மயிர் சிலிர்க்கும் சமாசாரம் எழுதியனுப்பவோ அச்சமயம் சாத்தியப்படவில்லை. ஆயினும் அன்று மத்தியானம் அவர்கள் நாட்டைபரிடம் சென்றனர். அவர் வியாழக்கிழமை காலையில் செம்பட்டியில் சவம் புதைக்கப்படுமென்றும், பிறகு அங்குள்ள லுத்தர் கோயிலில் (தெருக்கோடியில் ஒரு கொட்டகை) இறந்தோருக்குச் செய்யவேண்டிய மற்றக் காரியங்கள் நடைபெறுமென்றும் உரைத்தார். இவ்விஷயங்களையும் பத்திரிகைகள் வாயிலாக உலகமெல்லாம் அறியலாயிற்று.

¶

வியாழக்கிழமை வந்தது. முதல்நாளிரவெல்லாம் பெரிய மழை. பொழுது விடிந்தும் அது நிற்க வில்லை. ஆயினும் என்ன செய்கிறது ? தங்கள் பிழைப்பு நடக்கவேண்டாமா ? இரண்டு நிருபரும் அக் கிராமத்துக்குப் பயணமாகினர். பழனியாண்டியிடம் ஒரு குதிரை வண்டி இருந்தது. அதைக் கட்டிக்கொண்டு அதிலேயே இருவரும் தங்கள் தங்கள் காமிராவை எடுத்துவைத்துக்கொண்டு காலை ஐந்து மணிக்கே புறப்பட்டனர்.

வழியெல்லாம் குண்டும் குழியும். எங்கு பார்த்தாலும் பாதையில் ஜலம் தேங்கி நின்றது. குதிரை பட்ட கஷ்டத்தை யார் அறிவார் ? அதனால் வேகமாக நடக்கமுடியவில்லை. அது பட்ட சாட்டையடிக்கும் கணக்கில்லை.

நடுவில் பாதை ஒரு குன்றின்மேலேறிப் போனது. அதன் உச்சியிலிருந்து கீழே இறங்கும் போது என்னமோ திடீரென ஒரு சாமான் வண்டியிலிருந்து விழுந்தது திரும்பிப் பார்த்தார்கள் இருவரும். அது பழனியாண்டியின் காமிரா. உடனே வண்டியை நிறுத்தி அவர் அதை எடுத்துவந்தார். என்ன கஷ்டம் ! அது உடைந்து போயிருந்தது. அதை அவ்விடத்திலேயே சரிப்படுத்துவது சாத்தியமில்லை. என்ன செய்கிறது ?

"ராம்ஜி, நீர் எடுக்கும் படங்களை எனக்கும் கொடுக்கவேண்டும் இல்லாவிட்டால் நான் வண்டியை விழுணிக்குத் திருப்பிவிடுவேன்" என்றனர் பழனியாண்டி.

ராம்ஜி ஒப்புக்கொண்டார். வண்டியும் முன்போல நகரவாரம்பித்தது.

மழையும் சற்று நின்றது. இருவரும் தாம் பத்திரிகைகளுக்கு அனுப்பும் விஷயத்தை எப்படி எழுதினால் நன்றாயிருக்குமென்னும் யோசனையிலாழ்ந்தனர். பழனியாண்டி தலையங்கத்தில் "இரட்டைக் கொலையின் பரிதாபகரமான முடிவு" ; "தம்மினத்தார் சூழ நிற்க, துக்கத்துடன் அடக்கம்" ; "பிறகு கோயிலில் உருக்கமான பிரசங்கம்" என்று எழுதலாமாவென்றும், முடிவில் தத்துவம் சிறிது சேர்க்கலாமாவென்றும் யோசித்து, "உலகத்தில் மனிதராய்ப் பிறந்தோர் கதி இன்னவென்று யார் சொல்ல முடியும் ? அவர்களுக்கு இறப்பென்பது இருப்பதுதான் நிச்சயம். மற்றும் சுகம், துக்கம், புகழ், நிந்தை, வாழ்வு, தாழ்வு முதலியன எல்லாம்வல்ல ஈசனையல்லால் மற்று யார்தான் அறியக்கூடும் ?" என்று சேர்த்தால் நன்றாயிருக்குமா என்றும் யோசனை செய்து அதில் ஒவ்வொரு வார்த்தையையும் நிறுத்துப்பார்த்து அது பொருத்தமாக விருக்கின்றதாவென்று யோசித்தனர். ராம்ஜிதாஸ், "விழுணி மரணங்களின் கடைசி" ; "ஸ்வஜாதியபிமானம் உருக்கமாகக் காண்பிக்கப் பட்டது" என்னும் தலைப்புகளே போதுமென நினைத்து, முதலிலேயே தத்துவமாகச் சிறிது சொல்லி முடிவிலும் அப்படியே செய்யலாமாவென்று தமது சிறுதலையை (உவமையில்) உடைத்துக் கொண்டனர். அப்படியானால், "இவ்வுலகம் துக்கசாகரம். சமுத்திரத்தில் ஆங்காங்கு ஒரு சிறிய அலைகிளம்புங்கால், சூரிய வெளிச்சம் அதில்பட்டு அதைச் சொக்கவெள்ளிபோல் பிரகாசிக்கச் செய்வது தவிர, மற்றெப்பொழுதும் அந்நீரிலே கருநீலமாகவே இருக்கிறது. அது போலவே இவ்வுலக வாழ்வும். ஓரோர் வேளை

யில் ஏதோ சிறிது சந்தோஷமேற்படலாம். ஆனால் மற்றெப்பொழுதும் சரீரத்துக்கோ, மனதுக்கோ சிரமந்தான்'' எனவாரம்பித்து, ''ஊரார் தாம் இறந்தவனுக்குச் செய்ய வேண்டும் என்று நினைத்த கடமையைச் செய்தனர். ஆயினும் அந்த ஆத்மாவின் கதி என்ன? உலகத்திலுள்ள மதங்கள் இவ்விஷயத்தைப் பற்றிப் பலபலவாறு கூறுகின்றன. ஒவ்வொரு மதாசாரியரும் தமது அபிப்பிராயத்தை ஒப்புக்கொள்ளாதவர் எல்லாரும் நரக வாதனை அடைவர் என்று சொல்லுகின்றனர். உண்மை எது? இறந்தவனுடைய ஆத்மாவைப் பின்பற்றிச் சென்று அறியும் சக்தி நமக்குக் கிடைத்தால்தான் சொல்ல முடியும்'' என்ற முடிப்பது நன்றாயிருக்கு மென்று தீர்மானித்தார்.

இந்த யோசனையில் இருவரும் இருந்தபடியால் அவர்களுக்குள் ஒரு வார்த்தைகூடப் பேசப் படவில்லை. மணி ஒன்பதரையாயிற்று. வண்டியும் செம்பட்டி வந்துசேர்ந்தது. லுத்தர் மார்க்கக் கோயில் வாசலில் இருவரும் இறங்கினர். ஏற்கெனவே அங்கு இரண்டு மோட்டார் வண்டிகள் நின்றன ''என்ன விசேஷம்? பத்திரிகாசிரியர்கள் விசேஷ நிருபர்களை நேரில் அனுப்புவித்திருக்கிறார்கள் போலிருக்கிறது'' என்றார் ராம்ஜி. ''நாலைந்து பெயர் வந்திருக்கிறார்களே'' என்றார் பழனி.

''இங்கு ஒரே நிசப்தமாயிருக்கிறதே. நாம் வருமுன் அடக்கமாகி விட்டதா என்ன? ரஸ்தா வெகு மோசம். அவ்வளவு காலையில் புறப்பட்டும் நாம் சமயத்துக்கு வரமுடியவில்லையே'' என்று வருத்தப்பட்டார் ராம்ஜி.

பழனி கீழே இறங்கிக் கோயில் கதவை இடித்தனர். அப்பொழுது சாமிவேல் கதவைத் திறந்தான். அவன் துக்கத்துக்கு அடையாளமாக ஒரு கறுப்புச் சட்டையைத் தரித்திருந்தான். உள்ளே இரண்டு மூன்று பெயர்தா னிருந்தனர். ''பிரேதத்தை அடக்கம் செய்தாய்விட்டதா?'' என்று கேட்டார் பழனி. உடனே ராம்ஜியும், மோட்டாரிலிருந்தவர்களும் அங்குவந்து தலையைநட்டுக் கொண்டு பதிலை எதிர்பார்த்திருந்தனர். அவர்களைப் பார்த்துச் சற்று மலைத்தான் சாமிவேல்.

''பிரேதமா? ஞானரத்தினம் சமாசாரமா? நேற்றே அவனைப் புதைத்துவிட்டோமே மத்தியானம் நாலு மணிக்கெல்லாம் அவன் காரியம் ஆகிவிட்டது'' என்று பதிலுரைத்தான். ''இன்று காலையில் நடக்குமென்று விழணி நாட்டையர் சொன்னாரே!'' என்று ஆத்திரமாய்க் கேட்டார் ராம்ஜி. ''அப்படித்தான் நினைத்தோம். மழை வரும்போ லிருக்கிறதென்று கண்டு ஐயர் நேற்றுக் காலையிலேயே சவத்தை இங்கு கொண்டு வந்து விட்டார். நாற்றமும் வெகுவாய் அதிகப் பட்டு விட்டது. அதனால் எல்லாக்காரியமும் நேற்றே முடிந்துவிட்டது.''

''அப்பா! நல்ல சாமர்த்தியக்காரர்கள் நீங்கள். சொல்லுவதொன்று செய்வதொன்றா?''

''என்னய்யா சொல்லுத் தவறிவிட்டோம்? எங்கள் ஊரில் ஒருவன் இறந்துவிட்டால் அவனை அடக்கம் செய்வது எங்கள் பொறுப்பு. இஷ்டமானபோது செய்கிறோம். நாங்கள் இப்பொழுதுதான் புதைப்போம் என்று யாரிடமாவது வாக்குமூலம் எழுதிவைத்திருக்கிறோமா? தயவுசெய்து சற்று விலகுங்கள்'' என்று சொல்லிக்கொண்டே கோயில் கதவை இழுத்துச்சாத்தி விட்டு மற்றவர்களுடன் தன் அலுவலாகப் போயினான் சாமிவேல்.

நம்மவர்களும் திரும்பினர்.

மூங்கிலிலிருந்து வஸ்திரம்:—மூங்கில் வஸ்திரம் சீக்கிரமாகவே உபயோகத்தில் வரக்கூடும். பர்மிங்ஹாம் வித்யாபீடத்திலிருந்து ஆராய்ச்சி செய்து வரும் டாக்டர் நாஞ்சி என்னும் இந்திய வித்வானால் மூங்கிலிலிருந்து நார் செய்து வஸ்திரங்கள் தயாரிக்க ஒரு வழி கண்டுபிடிக்கப்பட் டிருக்கிறது. உலகத்தின் உஷ்ணமான பாகங்களில் அபரிமிதமாக அகப்படும் மூங்கிலையும் அதைப் போன்ற நாருள்ள மரம் செடிகளையும் உபயோகித்து அழகிய பலவித வஸ்திரங்களைச் செய்ய முடியு மென்று அவர் சொல்லுகிறார். அதனால் தற்காலம் பருத்தியாலும் சணலாலும் செய்யப்படும் வஸ்திரங்களை யெல்லாம் இப்புதிய பதார்த்தத்தால் செய்யலாமெனவும், காகிதமும் விசேஷமாகச் செய்யப்படு மெனவும் சொல்லுகிறார். இவ்வழியை உலகத்தில் எத்தேசத்திலும் தம்மைத் தவிர வேறொருவரும் செய்யாதபடி 'பேடென்ட்' பெற ஏற்பாடு செய்து வருகிறார். இதனால் துணிகளும், மர மாவிலிருந்து செய்யப்படும் செயற்கைப்பட்டும், இப்பொழுதிருப்பதை விட அதிகம் மலிய இடந்தரு மென்று அபிப்பிராயப்படுகிறார்.

தீயள வன்றித் தெரியான் பெரிதுண்ணி னோயள வின்றிப் படும்.

218380

மனோ மோகன் கோஷ்

MANO MOHAN GHOSE

வககலாகச சறப படயதயது

வங்கநாட்டில் பிறந்து பேரும் புகழும் படைத்த பெரியோரில் சிறந்தவரான மனோ மோகன் கோஸ் டாக்கா ஜில்லாவில் விக்ரமபுரி தாலூகாவில் வைராகாதி என்னும் ஒரு சிறுகிராமத்தில் 1844-ம் வருஷம் மார்ச்சு மாதம் 13-ம் தேதி பிறந்தனர். அவர் தகப்பனார் ராமலோசன கோஸ் என்பவர், மனோமோகன் பிறப்பதற்குச் சில வருஷங்களுக்குமுன் ஸப் ஜட்ஜ் உத்யோகம் வகித்து தமது வேலையைச் சிறக்கச் செய்தமை பற்றி "ராவ் பகதூர்" என்னும் பட்டம் பெற்றிருந்தனர். பிரம ஸமாஜத்தை ஏற்படுத்திய ராஜாராம் மோகனராய் என்னும் பெரியாருடைய ஆப்த நேசர். ஆரம்பப்படிப்பு முடிந்து மனோமோகன் கிருஷ்ணகர் கலாசாலையைச் சேர்ந்த உயர்தரப் பள்ளிக்கூடத்தில் வாசிக்கலானார். இப்பள்ளிக்கூடத்தில்தான் அவர் தகப்பனார் நீதிபதி உத்தியோகம் வகிக்குமுன் வெகு காலம், உபாத்தியாயராக வேலையில் அமர்ந்திருந்தனர்.

அங்கிருந்து பதினாறுவது வயதில் பிரவேசப் பரீக்ஷையில் தேறினர். இன்னும் இரண்டு வருஷம் அங்கே படித்துப் பிறகு 1861-ம் வருஷத்தில், அவர் கல்கத்தாவுக்கு வந்து ராஜதானிக் கலாசாலையில் சேர்ந்தனர். அக்காலம் அவர் நமது தேசத்தில் மஹா கவியெனப் பெயர் பெற்ற ரவீந்திரநாதரின் தகப்பனும், பிரம்ம சமாஜத்தை விருத்திக்குக் கொண்டுவரப் பாடுபட்ட தலைவருள் ஒருவரும், தெய்வபக்தியும் விசேஷ மதப் பற்றுமுள்ள மஹரிஷி தேவேந்திரநாத் தாகூர் என்னும் பெரியார் மாளிகையில் வளர்ந்து வந்தனர். பள்ளிக்கூடத்தில் படிக்கும்போதே பத்திரிகைகளுக்கு எழுதும் வழக்கம் உள்ளவர். கல்கத்தாவுக்கு வந்த வருஷத்திலேயே அவர் இந்தியன் மிரர் என்னும் பெயர் வாய்ந்த பத்திரிகையை மஹரிஷியின் உதவியைக் கொண்டு பிரசுரம் செய்ய ஆரம்பித்தனர். 1862-வது வருஷத்தில் மஹரிஷி தாகூரின் மூத்த குமாரனுடன் நமது கோஸ் லண்டன்மாநகரம் சென்று இந்திய சிவில் சர்விஸ் போட்டிப் பரீக்ஷைக்குத் தயார் செய்தனர். ஆனால் இரண்டு தரம் பரீக்ஷை கொடுத்தும் அவர்கள் அதில் ஜயம் பெறவில்லை. அதற்குக்காரணம் இந்திய பாஷைகளுக்கு அப்பரீக்ஷையில் ஐரோப்பிய பாஷைகளுக்குக் கொடுத்த மதிப்புக் கொடுக்காமலிருந்ததாகும். அதன்மேல் மனோமோஹனர் வக்கீல் பரீட்சைக்குப் படிப்பதாகத் தீர்மானித்து **'லிங்கன்ஸ் இன்'** என்று பெயர் பெற்ற லண்டன் சட்டகலாசாலையில்சேர்ந்தனர். அங்கிருந்து 1866-வது வருஷத்தில் பாரிஸ்டர்பட்டம் பெற்று, அடுத்த வருஷத்தில் இந்தியாவுக்குத் திரும்பிவந்து கல்கத்தா ஹைகோர்ட்டில் அவர் பாரிஸ்டராகஅமர்ந்தனர்; ஸிவில் ஸர்விஸ் பரீக்ஷை நடைபெறும் மாதிரியைக் கண்டித்து உபன்யாஸம் செய்தார்.

இவரே நம் தேசத்தில் இருந்து வேலை பார்த்து வந்த முதல் இந்திய பாரிஸ்டர் ஆகும். ஞானேந்திரநாத் டாகூர் என்பவர்தாம் அப்பரீக்ஷையில் தேறின முதல் இந்தியர். ஆயினும் அவர் இந்தியாவில் தொழில் செய்யவில்லை.

அக்காலத்து ஆங்கிலேய பாரிஸ்டர்கள் மனோ மோகனரைத் தம்மாலானவளவு பரிபவப்படுத்தி

னுர்கள். ஆயினும் வேலையில் அமர்ந்த சிறிது காலத்துக்குள்ளாகவே மனே மோகன கோஸ் சிறந்த நியாயவாதியெனப் பெயரெடுத்துவிட்டனர். கொஞ்ச நாளிலேயே அவர் கல்கத்தா பாரிஸ்டர்களுக்குள் ஒரு பிரமுகராகி விட்டனர். இந்திய பாரிஸ்டர்களில் பலர் நியாயவாதத்தில் தங்களுக்கீடில்லை யென்று உலகம் புகழும்படி கீர்த்திபெற் றிருக்கிருர்களல்லவா. மனேமோகனர் நற்பெயர் படைத்ததற்கு அவருடைய அத்தியந்த சாமர்த்தியமும், மனேதைரியமும் சட்டஞானமுமே யாகும். வங்காளத்தில் அவர் காலத்தில் நடந்துள்ள பிரசித்தமான கிரிமினல் வியாஜ்யங்களில் ஏதோ சிலதுபோக மற்றெல்லாவற்றிலும் அவர் கைதி வைக்கீலாகக் கோரப்பட்டு தம்முடைய சாமர்த்தியமான வாதத்தால் அவற்றில் ஜயம் பெற்ருர். மேலும் கிரிமினல் கச்சேரிகளில் நிரபராதிகளான எளிய மனிதர்களின் சார்பாக வரும்படியை எதிர்பாராது வாதித்து அவர்களைத் தண்டனையிலிருந்து காத்த அவருடைய பரோபகார சிந்தையை வங்காளத்தில் அறியாதார் யார்? அக்காலத்தில் கடினமான கிரிமினல் வியாஜ்யங்களில் மனேமோகன் எப்படி சம்பந்தப்பட நேர்ந்ததென்று தெரிவிக்கும் அநேக அதிசயக் கதைகள் உண்டு. அவைதாம் இப்பிரபல நியாயவாதியின் பெயரை எந்நாளும் மறக்காதிருக்கச் செய்வன.

ஜன ஊழியம்

மனேமோஹனர் தம் தொழிலில் மாத்திரம் சிறந்தோரெனப் பெயரெடுத்ததாக நாம் கொள்ளக்கூடாது. அவர் தேச ஸேவையிலும் விசேஷமாகப் பிரயாசை எடுத்துக்கொண்டார். நமது தேசத்தில் பெண் கல்விக்காகப் பாடுபட முன் வந்தவர்களில் அவரும் ஒருவராகும். கல்கத்தாவில் 'பெத்யூன்' கலாசாலை யெனப் பெயர்பெற்ற பெண்பாடசாலையில் அவர் கௌரவ சூபரின்டென்டென்டாக 1873-வது வருஷத்தில் நியமனம் பெற்றனர். அந்தப் பதவியை வகித்து அவர் ஸ்திரீ வித்தையை அபிவிருத்திசெய்ய வெகுவாகப் பாடுபட்டுள்ளார். அக்காலத்தில் சாதாரண ஜனங்களின் ஸ்திதியை உயர்த்தி அவர்கள் முன்னேற்றத்தையே நோக்கமாகவுடைய பல முக்கிய ஸ்தாபனங்களில் அவர் நெருங்கிக் கலந்து வேலை செய்தனர். அவற்றுள் அவர் தம் வாழ்நாளில் முக்கியமாகப் பாடுபட்ட விஷயம் இந்திய தேசீய மகாநாட்டைக் (Indian National Congress) கூட்டுவித்து அதன் நோக்கங்களை நிறைவேற்றச் செய்த வேலை ஆகும். 1885-ம் வருஷத்தில் அம்மகா நாட்டை ஏற்படுத்த முயற்சித்த நமது நாட்டுத் தலைவர்களுள் மனேமோகனும் ஒருவர். இம்மாதிரி தமது தாய்நாட்டுக்காக அவர் ஊக்கத்துடன் செய்த சேவையினுலல்லவா அவர் 1890-ம் வருஷத்தில் கல்கத்தாவில் நடந்தேறிய 6-வது மகா நாட்டில், வரவேற்புக் கமிட்டியின் அக்ராசனராகத் தெரிந்தெடுக்கப்பட்டனர். திடீரென்று அவருக்கு அகால மரணம் சம்பவிக்காமலிருந்தால் அவரிடம் மிகுந்த பக்திவைத்திருந்த நம் நாட்டார் தம்மால் தரக்கூடிய மகோந்நத பதவியாகிய காங்கிரஸ் அக்கிராசனத்தை வகிக்கும்படி அவரைக் கட்டாயம் நியமித்திருப்பார்கள்.

அந்த மகா நாட்டில் அவர் செய்த பிரசங்கத்தில் ஒரு பாகம் பின்வருமாறு :—

"சென்ற வருஷம் இம்மகாநாடு பம்பாயில் கூடினபொழுது அங்கு விஜயம் செய்த பிரதிநிதிகளை வரவேற்குங்கால் எனது நண்பர் பெரோஜிஷா மேடா (இவர் அப்பொழுது "ஸர்" பட்டம் பெறவில்லை) இத்தேசிய மகாநாட்டு இயக்கத்தை இந்தியாவில் பிரிட்டிஷார் அரசாட்சியின் ஒப்பற்ற பலனெனக் கூறியுள்ளார். அக்கூற்றுடன் நான் ஒரு விஷயம் சேர்த்துச் சொல்லுவேன். அத்தேசத்தாரால் நமது நாட்டில் அநுஷ்டிக்கப்பெற்ற தாராள சிந்தை ததும்பியுள்ள ஆட்சியின் சகஜமான பலனே இதுவெனச் சொல்லலாம். தற்போது இந்திய ஆட்சி இதற்குமுன் இருந்ததை விடத் திறமானதே. ஆசியாக் கண்டத்தில் வேறெரு தேசமும் இவ்வளவு நன்ருக அரசாளப்படவில்லை. ஆயினும் அதைக்கொண்டே நாம் நம் தேசத்து ராஜீயமுறையைச் சீர்திருத்தி இன்னும் திறமாக ஆக்கவேணுமென்று கேட்டுக் கொள்வது தகாதெனச்சொல்லமுடியாது. அவர்கள் நாட்டில் ஆங்கில அரசாட்சி முறை எல்லோரும் நன்கு மதித்து வியக்கத்தக்கவையா யிருக்கின்றதல்லவா. அம்முறையை நம்மை ஆளுவதில் அவர்கள் கையாடாமல் நம்மைத் தாழ்வாக நினைத்து அவர்கள் செய்யும் காரியங்களையும் பேசும் வார்த்தைகளையும் நாம் ஒப்புக்கொள்ள மாட்டோமென்று சொல்லுவதில் அவர்களுக்கு மனத்தாங்கல் ஏற்பட இடமில்லை."

"நமக்கு இராஜாங்க முறையில் உயர்தரமான நீதிகளை அவர்கள் கற்பித்துக் கொடுத்திருக்கிறார்களென்றால் அவர்களுக்குட்பட்ட நமது தேசத்தின் ஆட்சியில் அம்முறைகளை அவர்கள் அனுஷ்டிக்க வேண்டு மென்பதை கேட்டுக் கொள்வதில் ஆட்சேபிப்பதற்கு என்ன இடமிருக்கிறது? மேலும் பல தடவைகளில் நமது தேசபரிபாலன விஷயமாய் அவர்களாலேயே கொடுக்கப்பெற்றபல பட்டயங்கள் இருக்கின்றன வல்லவா? அவற்றைப் பூரணமாக அவர்கள் அனுஷ்டிக்க வேண்டாமா? ஆதலால் இன்று இங்கு கூடியிருக்கும் மகாநாடு வற்புறுத்தும் விஷயம் பின் சொல்லப்படுவதே. இங்கிலாந்து நமக்கு அநேக நன்மைகளைச் செய்திருக்கக்கூடும். ஆயினும் அத்தேசத்தார் நமக்கு இன்னும் செய்து தர வேண்டிய காரியங்கள் ஏராளமாயிருக்கின்றன நமது தேசஆட்சியில் குறைகள்பலவுள. அவைகளைத் தீர்த்து சீர்திருத்தம் செய்ய நிரம்ப இடமிருக்கின்றது என்பதாம் இதுவே இந்தப் பெரிய தேசீய இயக்கத்தின் முக்கிய நோக்கமென்பது என் அபிப்பிராயம். இத்தேசத்தை யாள்வோரைச் சிறிதாவது எதிர்த்து அவர்களுக்குக் கவலையைக் கொடுக்க ஏற்படுத்தப்பட்டதன்று இவ்வியக்கம். இவ்விராஜாங்கத்தார் ஏற்றுக் கொண்டிருக்கும் மகத்தான இப்பெருங்காரியத்தில் முடிந்தவளவு பலவழியிலும் அவர்களுக்கு ஒத்தாசை செய்வதே அதன் நோக்கமாகும்."

பிறகு மனோ மோகனர் நியாய விசாரணையையும், ரெவினியு அதிகாரத்தையும் பிரித்து விடவேண்டுமென்ற தேசீய மகாநாட்டின். அபிப்பிராயத்தை அதிகமாக ஆதரிக்கலானார். இவ்விஷயம் காங்கிரஸ் மகாநாடுகளில் 1886-வது வருஷத்தில் அது இரண்டாவது தடவை கூடினதுமுதல் சர்ச்சை செய்யப்பட்டு வருகிறது. இந்தியாவில் ஜனங்களுக்கு நியாயம் கிடைக்கவேண்டு மென்றால், அப்படிப் பிரிப்பது தான் நலமெனத் தெளிவாக விளக்கக்கூடிய விஷயங்களை ஆராய்ச்சி செய்ய ஆரம்பித்தார். 1895-ம் வருஷத்தில் புனாவில் நடந்தேறிய 11-வது தேசீய மகாநாட்டில் அவர் இவ்விஷயத்தைப் பற்றி ஒரு சிறந்த பிரசங்கம் செய்தார். அதன் சாரம் பின்வருமாறு:—

"18-வது நூற்றாண்டின் இறுதியில் கார்ன்வாலிஸ் பிரபு நமது தேசத்தில் கவர்னர் ஜனரலாக இருந்தது முதல் தற்காலம் வரையில் நம் தேசத்தை யாள்வோரில் பலர், நியாயாதிகாரம் ரெவினியு அதிகாரிகளிடம் இருக்கக் கூடாதென்று ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். கார்ன்வாலிஸ் பிரபுவே, 1793-ம் வருஷம் பிறப்பித்த ஒரு சர்க்கார் உத்திரவின் முகவுரையில், ரெவினியு அதிகாரிகளும்,மற்ற எக்ஸெக்யுடிவ் (நிர்வாக) கடமைகளைச் செலுத்தும் ஏனைய உத்தியோகஸ்தரும் தாமே வாதியாகவோ பிரதிவாதியாகவோ சம்பந்தப்பட்டுள்ள வியாஜ்யங்களைத் தாமே நியாயாதிகாரிகளாக விருந்து விசாரிக்கக் கூடாது என்பதே இந்திய ராஜாங்கத்தின் அபிப்பிராயமெனச் சொல்லியிருக்கிறார். ஆயினும் இந்தச் சீர்திருத்தம் அப்பொழுது முதலே நடை பெறாமல் நின்று விட்டது. 1861-ம் வருஷத்தில் வைசிராய் சட்டசபையில் போலீஸ் சட்டம் சர்ச்சை செய்யப்பட்ட காலத்தில் பிரபலரான ஆங்கில உத்யோகஸ்தர்கள் இச் சீர்திருத்தத்தை அமுலுக்குக் கொண்டுவர வெகுவாய்ப் பிரயாசை எடுத்துக் கொண்டனர். சிவில் உத்தியோகம் வகித்த ஸர் பார்ட்ல் ப்ரியர் என்னும் பெரியோன் இச் சீர்திருத்தம் சீக்கிரமாகவே செய்யப்பட வேண்டுமென்றும் அது நடைபெறாததற்குக் காரணம் இது விஷயமாய் வெகு காலமாகவுள்ள ஆங்கிலேயரின் தப்பெண்ணந் தானென்றும் சொல்லினர். ஸ்கோன் என்னும் மற்றொரு ஸிவில் உத்தியோக அங்கத்தினரும் இச் சீர்திருத்தத்தை உடனே அச்சபை செய்து வைக்கவேண்டுமென வற்புறுத்தினர். ஆனால் அவர் அபிப்பிராயத்தை எதிர்த்தவர் அது அப்பொழுது முடியாதென்றும், ஆனால் சில வருஷங்களுக்குள்ளேயே நடந்தேறி விடுமென்றும் அவருக்குச் சமாதானம் சொல்லினர். அப்பொழுதெல்லாம் இந்தத் தேசீய மகாநாடு பிறக்கவே இல்லை. நம்மையெல்லாம் ராஜீயப் புரட்சியை(Revolution) விரும்பும் கெட்ட சித்தத்தினர் என்றல்லவா சொல்லுகிறார்கள். நாம் மாத்திரமன்று இச்சீர்திருத்தம் அவசியமெனக் கருதுவோர். ஆங்கில உத்தியோகஸ்தரும், ராஜ்ய தந்திர நிபுணரும் கூட அது அவசியமானதென வற்புறுத்திப் பேசியிருக்கிறார்கள். அப்படியிருக்க, இது

விஷயமாய் இதுவரையிலும் ஏதாவது செய்யப்பட்டிருக்கிறதா? இந்த ராஜீய மகாநாடு ஏற்பாடானது முதல், இந்தச் சிறிதளவுசீர்திருத்தமாவது செய்துகொடுக்கப்பட வேண்டுமென்று நாம் ஓயாது மன்றாடிக் கொண்டிருந்தும், நாம் சொல்லுகிறதெல்லாம் ராஜாங்கத்தார் காதில் பட்டதாகத் தெரியவில்லை. இந்திய ஆட்சிக்குப் பார்லிமெண்டு சபையில் காரியதரிசிகளாக விருந்த கிம்பர்லி பிரபுவும், க்ராஸ் பிரபுவும் அம்மகா சபையில் இச்சீர்திருத்தம் காலஹரணம் செய்யாது சீக்கிரமாகவே அமுலுக்கு வரவேண்டுமெனச் சொல்லியிருக்கிறார்கள். ஆயினும் அப்படி உடனே செய்யாமலிருப்பதற்குக் காரணம், இந்திய ஆட்சியின் செலவு அதிகரிக்குமென்கிற பயமேயென கிம்பர்லி பிரபு சொன்னார் ஆயினும் இவ்விஷயத்தை ஆராய்ச்சி செய்த ஒருவரும் இச்சீர்திருத்தத்தை இப்படித் தாமதிப்பதற்கு அது தகுந்த காரணமென ஒப்புக்கொள்ள மாட்டார்கள். இப்பொழுது வருஷா வருஷம், அரசிறையில் வெகு பணம் மிகுதி நிற்கின்றது. அப்படி நிற்கும் மிச்சப்பணத்தை இந்த ராஜாங்கத்தைச் செம்மைப்படுத்துவதில் உபயோகிக்க வேண்டுமென்பதை யார்தான் ஒப்புக்கொள்ளாமலிருப்பார்கள். அப்படியிருக்க பணமில்லையென்று சொல்லி அத்தியாவசியமான காரியங்களை உடனே செய்யாது ஒத்திப் போட்டுக்கொண்டு வருவது ஒழுங்காகுமா?'' என்பதாம்.

அடுத்த வருஷத்தில் மனேமோகனர் ''இந்தியாவில் நியாய முறை '' எனப் பெயரிட்ட சிறந்த இரண்டு புஸ்தகங்களை இயற்றினர். அவற்றில் தாம் ஏற்கனவே ஆதரித்துவந்த இச்சீர்திருத்தத்தைஉடனே அநுஷ்டிப்பதற்குப் பல காரணங்களையு மெடுத்துக் கூறினர். இவைகளையும் அக்காலத்திலுள்ள பெயர்பெற்ற நிபுணர்கள் வெகுவாய்ப் புகழ்ந்து பேசியுள்ளார். லண்டனிலிருந்து இந்தியர் அபிப்பிராயங்களைத் தெரியப்படுத்துவதற்கு ஏற்பட்ட 'இந்தியா' பத்திரிகையில் அவற்றைப்பற்றிப் பின்வருமாறு எழுதப்பட்டிருந்தது :—

''மனே மோகனருடைய இரண்டு புஸ்தகங்களில் ஒன்றில் பெயர்பெற்ற நியாய சாஸ்திர நிபுணர்களால் ஒரே அதிகாரியினிடம் நிர்வாகத்தையும் நியாய விசாரணையையும் சேர்த்து வைப்பதினுல் உண்டாகும் தோஷங்களைப் பற்றிய அபிப்பிராயங்கள் கண்டிருக்கின்றன. மற்றொன்றில், அப்படிச் செய்துவந்ததனுல் உண்டான கெடுதல்களை நிதர்சனமாகக் காட்டக்கூடிய வியாஜ்யங்களின் விவரங்கள் எடுத்தெழுதப்பட்டிருக்கின்றன. இவ்விஷயத்தில் கார்ன்வாலிஸ் பிரபுவின் அபிப்பிராயம் பின்வருமாறு :— அரசிறை வருமானத்தை ஏற்படுத்தி வசூல் செய்யப் பிறப்பித்திருக்கும் உத்திரவுகளை அதிக்கிரமிப்பவர்கள் ரிவினியூ உத்தியோகஸ்தர்களே. அவர்களுக்கெதிராகக் கொண்டுவரும் வியவகாரங்களில் அவர்களே நியாயாதிகாரிகளாக இருப்பின், வாதிகளுக்கு நியாயம் கிடைப்பது அரிது.....ரிவினியூ அதிகாரிகளிடம் உள்ள நியாயாதிபத்யம் எடுக்கப்படவேண்டும். சட்டங்களின்கீழ் ஜனசமூகத்தால் ஆக்ஷேபிக்கப்படுகிற பணத்தைப்பற்றிய வியவகாரங்கள் எல்லாம் ஸிவில் கோர்ட்டுகளில் விசாரணைக்கு விடப்படவேண்டும். அந்தக் கோர்ட்டுகளில் உள்ள நியாயாதிபதிகளும் தாங்கள் செய்யும் தீர்ப்பால் யாதொரு பலாபலனையும் அடையும் ஸ்திதியில் இருக்கக்கூடாது. ஜன சமூகத்துக்கும் நில சுவான்தார்களுக்கும் பொதுவாகவும், நில சுவான்தார்களுக்கும் அவர்களின் கீழுள்ள குடியானவர்களுக்கும் பொதுவாகவும் பாரபக்ஷமன்னியில் விசாரித்துத் தீர்ப்புச் சொல்லுகிறவர்களாகவும் அவர்கள் இருக்கவேண்டும். ரிவினியூ கலெக்டர்களிடமிருந்து தாங்கள் செய்யும் காரியங்களால் நஷ்டமடைந்தவர்கள் கொண்டுவரும் தாவாக்களைத் தாமே விசாரிக்கும் அதிகாரத்தை எடுத்து விடவேண்டும். மேலும் அவர்கள் நடவடிக்கைகள் ஸிவில் கோர்ட்டு விவகாரத்துக்கு உட்பட்டவையாக இருக்கவேண்டும் ஜனசமூகத்தினிடமிருந்து வரி வசூல் செய்யுங்கால், ஒருவன் சட்டப்படி கொடுக்கவேண்டிய தொகைக்கு மிஞ்சி வசூல் செய்தாலும், வசூல் செய்வதற் கேற்பட்ட சட்டங்களை மீறி நடந்தாலும், அப்படிச் செய்த ரிவினியூ அதிகாரியும் நியாய விசாரணைக்குட்படவேண்டும் '' என்பதாம்.

இம்மாதிரி கார்ன்வாலிஸ் பிரபுவால் ஏற்படுத்தப்பட்ட சட்ட திட்டங்களால் வங்காளத்துக்குண்டான விசேஷ க்ஷேமம் உலகத்துக்கே ஆச்சரியமாய் இருந்தது. அதனுலல்

லவா ஆங்கிலேயருக்கு இந்திய ராஜ்யாதிபத்யம் நிலைக்கக் காரணம் ஏற்பட்டது.

அந்திய தசை.

மனோ மோகனர் 1896 - ஆம் வருஷம் அக்டோபர்மீ 16உ கிருஷ்ணகர் பட்டணத்தில் 52-வது வயதில் திடீரெனக் காலகதி யடைந்தனர். தாம் அபிமானித்துப் பாடுபட்ட நியாய நிர்வாகப் பிரிவினையைப் பற்றி அவர் மிதமிஞ்சி உழைத்ததால் வந்த ஒரு மூளை நோயால் அவர் இறக்க நேர்ந்தது. பன்னிரண்டாவது தேசிய மகா நாட்டில் அம் மகாநாட்டு வரவேற்புக் கமிட்டியின் காரியதரிசியும், வங்காள ஹைகோர்ட்டில் சிறிதுகாலம் பிரதம நியாயாதிபதி ஸ்தானம் வகித்தவருமான ஸர் ராமேச சந்திர மித்திரர் இந்தச் சிறந்த தேசபக்தரைப்பற்றிச் சொல்லிய விஷயமாவது :-இவ்விராஜதானியிலுள்ள ஜனங்களுக்கும், ஏன் ? இந்த இந்துதேசத்து ஜனங்கள் எல்லோருக்கும் அத்தியந்தம் துக்கத்தை உண்டுபண்ணிய ஒரு சம்பவத்தைப்பற்றி நான் இப்பொழுது சொல்லாமலிருந்தால் என் அரிய சிநேகிதரும், சிறந்த கனவானும், இத் தேசிய மகாநாட்டு அங்கத்தினருமான ஒருவருக்கு நான் எனது கடமையைச் செலுத்தியதாகச் சொல்லமுடியாது. ஓர் உண்மையான தேச ஸேவகர் திடீரென்று தாம் செய்துவந்த தேச ஊழியத்தினடுவில் காலமாய் விட்டார். அவர் மனோ மோகன கோஸ் அகால மரணம் அவருக்குச் சம்பவித்தது. உண்மை பேசும் அவர் மாதிரியாலும், தீனர்களுக்குக் காலத்தில் உதவிசெய்யும் குணத்தாலும், காரியத்திலேயே கண்ணுயிருக்கும் தன்மையாலும்,கடல் போன்ற தமது வித்தையின் ஆதிக்கத்தாலும், தம் தேசத்துக்குப் பாடுபடும் உத்தம ஸ்வபாவத்தாலும் பெரியோருக்கும் சிறியோருக்கும், தம்மைப் போலுள்ள வக்கீல்களுக்கும் மற்றவர்களுக்கும் அவர் மிகவும் வேண்டியவராகவே இருந்தார். நமது தேசத்தில் படித்தவர்களுக்குச் சாதாரண ஜனங்களிடத்தில் அபிமானமில்லை யென்று நம்மையாள்வோர் சொல்லுகின்றனர். அக்காலத்து கிரிமினல் வியாஜ்யக் கட்டுகளை அவர்கள் எடுத்துப் பார்க்கட்டும். பாச்சாத்திய நாகரிகமும் வித்தையும் சிறந்து வாய்ந்த நமது கோஸ் பூரண அபிமானத்துடன் இந்திய ஜனசமூகத்தில் தாழ்ந்தோரிலும் தாழ்ந்த ஒரு அகதிக்காகப் பாடுபட்டனர் என அவர்களுக்குத் தெரியவரும். அவர் வக்கீலாக மட்டும் பாடுபடவில்லை. அவ்வநாதியைப் பேரன்புடன் ரக்ஷித்தும் வந்தார். சிறந்த குணமும் உண்மையான தேசாபிமானமும் படைத்த இவ்வுத்தமர், தமது தொழிலைப்பற்றிய வேலை அதிகமாயிருந்தும் தமது தேச ஸேவையை மறந்தாரில்லை. இந்தத் தேசிய மகாநாடு என்னும் கட்டடத்துக்கு அவர் ஒரு சிறந்த ஸ்தம்பமாக விருந்தார்'' என்பதாம்.

அப்பொழுது அக்கிராஸனம் வகித்த R. M. சயானி என்னும் பம்பாய் முஸ்லீம் தலைவர் மனோமோகனருடைய குணாதிசயங்களைப் பற்றிப் பேசுங்கால் தேசஸேவையில் அவருக்கிருந்த ஊக்கத்தையும் இடைவிடாது வேலைசெய்யும் வழக்கத்தையும் காட்டி,எந்த விஷயத்திலும் அவர் விதண்டமாய் வாதம் செய்யாது மரியாதையாய்ப் பதிலளிப்பாரென்றும், பரம ஞானமும், பேசும் திறைமையும், சர்ச்சையில் எதிராளிகளுக்குப் பதில் சொல்லும் சாமர்த்தியமும் உடையவரென்றும் சொல்லினர்.

இவர் தருமசிந்தை பிரபலமானது. வர்த்தனம் வாங்காமல் எளியோருடைய வழக்கை எடுத்தாடும் இவர் பெருமை மேலே சொல்லப்பட்டிருக்கிறது. சிறுவர்களின் சங்கமாகட்டும், தர்ம ஸ்தாபனங்களாகட்டும், கைம் முதல் இல்லாமல் கஷ்டப்படும் பத்திரிகைகளாகட்டும், அவர் சகாயத்தை அபேக்ஷித்துப் பலனடையாமல் போனவர்களில்லை. சிறந்த வங்காள மகா கவியான மைக்கேல் மது சூதன தத்தருக்கு அவர் பரம உபகாரம் செய்திருக்கிறார். அவர் 1873-வது வருஷத்தில் நோயால் வருந்தி நிர்வாகமின்றி அலிப்பூர் ஆஸ்பத்திரியில் இருந்த பொழுது மனோ மோகனர் அவரை அடிக்கடி போய்ப் பார்ப்பதுண்டு. அப்பொழுது இறந்த அவர் மனைவியை அடக்கம் செய்யவும், வைத்தியசாலையில் அவருக்கு எல்லோரும் ஒத்தாசை செய்யவும் உதவி புரிந்தார். பிறகு அவர் இறந்த பொழுது, தாம் அவருக்கு வாக்களித்த பிரகாரம் ஒரு நிதி ஏற்படுத்தி அவரது இருகுமாரர்களையும் படிக்கவைத்துச் சர்க்கார் உத்தியோகமும் பண்ணிவைத்தனர்.

வங்கநாட்டு மணியான மனோ மோகன் கோஸ் நம் பாரத மக்களால் மறக்கப்படுவரோ ?

கவியும் காலணா லேபிலும்

THE POET & THE QUARTER ANNA STAMP

ஓர் ஆச்சரியமான கொலை மர்மம்

I

கோரமான காட்சி



அன்று காலை நாங்கள் காப்பி குடிக்கும் பொழுது பேசிக்கொண்டிருந்த விஷயம் நிலைச்சேரிக் கொலைதான். ஆயினும் எங்கள் ஆக்ஷேப சமாதானத்தில் என் சிநேகிதர் அம்மையப்ப பிள்ளை சிறிதும் கலந்துகொள்ளவே இல்லை. அதுவே எனக்கு ஒரு ஆச்சரியமாகத் தோன்றிற்று. நாங்கள் ஒவ்வொருவரும் எங்களுடைய அனுமானங்களை எடுத்து விஸ்தரித்துப் பேசினோம். ஆயினும் இவ்விஷயத்தில் முதன்மையாக அபிப்பிராயம் கொடுக்கவேண்டியவர் அவராயிருக்க, அவர் மௌனம் சாதித்து அன்று காலை வெளிவந்த "பிரபஞ்ச தண்டோரா' பத்திரிகையைக் கண்கொட்டாது வாசித்துக் கொண்டிருந்தனர்.

எங்கள் மேஜையில் உட்கார்ந்திருந்த ஒருவர், "நமது கவிகுஞ்சர துப்புசிகாமணி என்ன ஒன்றும் பேசவேயில்லையே! நேற்று இரவு நாம் பேசிக்கொண்டிருக்கும்பொழுது, 'அனுமானத்தால் நிச்சயிக்கக்கூடாதது ஒன்றமில்லை' என்று பலத்த வாதம் செய்தனரே. ஆனால் என்ன' எப்பொழுதும் தத்துவத்தில் புத்தி செலுத்துபவர்களுக்கு இந்தமாதிரி ஒரு ஆத்துமா தன் கூடுவிட்டுப்போன விஷயம் பிரமாதமானதல்ல போலும்!" எனப் பரிகாசமாய்ச் சொல்லினர்.

இதைக் கேட்டு அங்குள்ளோரில் பலர் சிரித்தனர். ஆயினும் அவர் யோக்யதை அவர்களுக்கு அவ்வளவாகத் தெரியாது. அவர் கவனம் (கவி பாடும் திறமை) எல்லோருக்கும்போல எனக்கும் தலைவலிதான். ஆயினும் அவருக்குத் துப்பறிவதில் சாமர்த்தியம் மிக அதிகம். எனக்கும் அவ்வழி சபலம் உண்டு. நாங்கள் இவ்விஷயத்தைப் பற்றிப் பேசும்பொழுதெல்லாம் என் சிநேகிதர் ஒருநாள் தனது பூரா சாமர்த்தியத்தை உலகமறியக் காட்டுவாரென்றே நினைத்திருந்தேன்.

பிள்ளையவர்கள் இவ்வார்த்தையைக் கேட்டதும், பத்திரிகையிலிருந்து கண்ணெடுத்துப் பார்த்தார். அப்பொழுதே அவருக்குப் பெரிய யுக்தி தோன்றிற்று என்றே நினைத்தேன். "தத்துவமறிய விரும்பும் என்போலிய மனிதருக்கு இந்த நிலைச்சேரிக் கொலை பலவித யோசனைகளைத் தருகிறது. இக்குற்றம் எப்படி நடந்திருக்குமென்று நான் யோசனைசெய்து பார்க்கப் பார்க்க அது என் மனதைக் கவர்ந்து விட்டது" என்றனர். "என்னையா, உம்முடைய யோசனைகளைத்தான் சொல்லுமே பார்ப்போம் எனக்கு இதன் உண்மையை அறியவேண்டுமென்கிற ஆஸ்தை அதிகமாயிருக்கிறது. ஏனெனில் காரிய சீல முதலியார் எனக்கு இரண்டு வருஷமாக ஆபீஸ் தலைவரல்லவா! கண்டிப்பு மனிதன்தான். ஆனால் தப்பொன்றுக்கும் போகமாட்டான். அவரிடம் ஒருவருக்கும் பரமப்ரீதி கிடையாதுதான். ஆயினும் அவருக்கு விரோதிகளும் கிடையாது" என நான் கேட்டேன்.

அப்பொழுது அம்மையப்பபிள்ளை, "நல்லது ;

இன்றி யமையாச் சிறப்பின வாயினுங் குன்ற வருப விடல்.

நடந்த விஷயங்களைப் பார்ப்போம். இதோ 'பிரபஞ்ச தண்டோரா' சொல்லுகிறதாவது :—

நேற்று சாயங்காலம் நிலைச்சேரியில் ஒரு கோரமான சம்பவம் நேர்ந்தது. வியாபார மந்திரி ஆபீஸில் பெரிய உத்தியோகத்திலிருந்த காரிய சீல முதலியார் தமது பங்களா காம்பௌண்டில் வழிநடையில் இறந்துகிடந்தனர். அவர் மண்டை ஒரு வழவழப்பான ஆயுதத்தினால் பலதரம் அடிக்கப்பட்டு உடைந்துபோயிருந்தது. அவ்வாயுதம் எதுவாயிருக்குமென்று சொல்ல முடியவில்லை. இந்தகோரமான கொலையைச் செய்தவன் திருடுவதற்காக வந்திருக்கலாமெனத் தோன்றுகிறது.

பின் வந்த செய்தி—இக்கொலையைக் கண்டுபிடித்த முதலியாரவர்கள் ஸம்ஸாரம் எழுதி வைத்த வாக்குமூலம் பின்வருமாறு :—

எனது புருஷன் ஆபீஸிலிருந்து வீட்டுக்குத் திரும்பி வரும்பொழுது கொல்லப்பட்டிருக்க வேண்டும். அவர் சரீரம் எங்கள் வீட்டிலிருந்து கூப்பிடு தூரத்தில் வண்டிவரும் பாதையில் கிடந்தது. சுமார் ஏழரை மணிக்கு வீட்டிலிருந்து காம்பௌண்ட் வாசலுக்குத் தபால்காரனைச் சந்திக்கவந்தேன். நல்ல இருட்டு. திடீரென்று தடுக்கி விழுந்தேன். அது ஒரு ஆளாயிருக்கக் கண்டு நடுங்கிக் கோவென்று அலறினேன். நான் போட்ட கூக்குரலைக் கண்டு தபால்காரனும் ஓடி வந்தான். அவன் ராந்தலின் வெளிச்சத்தால் இறந்தவர் என் புருஷனெனக் கண்டேன். அதைப் பார்த்ததுமே எனக்கு பிரஜ்ஞை தப்பிப் போயிற்று. கொலை செய்தவனை நான் பார்க்கவுமில்லை; சந்தடி ஒன்றும் கேட்கவுமில்லை. ஆயினும் அவன் வெகு தூரம் போயிருக்க முடியாது. ஏனெனில் நான் தொட்டுப் பார்த்த பொழுது எங்கள் முதலியார் சரீரம் சூடாகவேயிருந்தது. இந்த அநியாயக் கொலைக்குக் காரணமென்னவென்று சொல்ல முடியாது. கொலைகாரன் ஒரு வேளை திருட வந்திருக்கலாம். அவருடைய தங்க கடிகாரத்தையும் சங்கிலியையும் காணோம். ஆயினும் அந்தப்பாவி அவருடைய பணப் பையைத் தொடவில்லை. அதில் ஆயிர ரூபாய்க்குமேல் நோட்டுகளிருந்திருக்கின்றன. ஒரு வேளை நான் வருவதைக் கண்டு பயந்து ஓடிப்போனானோ என்னவோ!

II

ஆக்ஷேப சமாதானங்கள்

இதுதானையா, இப்பத்திரிகையில் கண்ட விஷயம். ஆயினும் மற்றப்பத்திரிகா நேயர்கள் என்ன சொல்லுகிறார்களென்று பார்ப்போம் 'தந்தி'யில் என் சிநேகிதர் பொட்டிப் பிள்ளை பின்வருமாறு எழுதுகிறார்.

அவர் நிலைச்சேரி வாசிதான். கொலை நடந்தவுடனேயே அங்கு போயிருப்பார். என்ன விந்தை! கொக்குப்போல் இவருக்கு மதி ஒன்றே. அவர் எழுதுவதாவது :—

"இந்தக் குற்றத்தில் ஒரு பெரிய விசேஷம் கொலையாளிகளைக் கண்டு பிடிக்கக்கூடிய அடையாளம் ஒன்றுமில்லாமலிருப்பதே. வழிநடையெல்லாம் கப்பி போட்டிருந்ததால் கொலை செய்தவன் கால் அடையாளமொன்றும் காணோம். அடித்து மண்டையை உடைக்க உபயோகித்த ஆயுதத்தையும் காணோம். வேறு அடையாளத்தையும் காணோம். முதலியார் சுருட்டு முதலியன குடிப்பதில்லை. ஆயினும் அவர் சட்டையின் மீது சிகரெட் சாம்பல் நிறையப்பட்டிருந்ததால், அவரைக் கொன்றவன் தனது கோர கிருத்யத்துக்குப் பிறகு ஒரு சிகரெட்டும் குடித்திருப்பதாகத் தெரிகிறது நல்ல நெஞ்சழுத்தக்காரன் போலும். சவத்தின் மார்பக்கத்தில் ஒரு புதிய காலணா ஸ்டாம்பு கிடந்தது. இது ஒரு சமயம் அந்தப்பாவி போட்டிருந்தாலும் இருக்கலாம் அதிலிருந்து நாம் ஒன்றுமறிய முடியவில்லை. இன்னும் சொல்லக்கூடிய விஷயம் ஒன்றுதான். கொலைகாரன் தன்வேலையை முழுதும் செய்ய அவகாசமில்லையென்று நினைக்கவேண்டியிருக்கிறது. இறந்தவரிடமிருந்து அவருடைய கடிகாரச் சங்கிலியை அவன் வேகமாய் இழுத்ததில் அவ்விடம் சட்டையே அறுந்துவிட்டது. மேலும் இந்தக் கொலை முன்னதாகவே தீர்மானிக்கப் பட்டதல்ல. அப்படியிருந்தால் அவர் வீட்டுக்கு இவ்வளவு அருகாமையில் அக்காரியத்தைச் செய்யத் துணிந்திருக்கமாட்டான். ஆயினும் இந்தப் பேர்வழி நல்ல நெஞ்சழுத்தக்காரனாகவிருக்கவேண்டும். முன்பின் குற்றஞ் செய்து வழக்கமும் இருக்கவேண்டும்."

"பொட்டிப் பிள்ளை சாமர்த்தியமாகத்தான் எழுதுகிறார். ஆயினும் அவர் சொல்லுவது சரியென எனக்குத் தோன்றவில்லை" யென முடித்தார் கவிகுஞ்சர அம்மையப்ப பிள்ளை.

"அதில் என்னையா தப்பிதம்? அவர் சொல்லுவ

தெல்லாம் சரியாகத்தானே தோன்றுகிறது'' என்றார் கரிகாலப் பிள்ளை.

"அதில் முன்பின் ஒற்றுமையில்லையே. கொலையாளி நெஞ்சழுத்தக்காரனானால், கொலை செய்தவுடனேயே ஒரு சுருட்டோ, சிகரெட்டோ குடித்தானானால் அவனுக்கு அவகாசம் பூர்ணமாயிருந்திருக்கவேண்டும். ஆயினும் முதலியார் சட்டைப்பைகளைப் பொறுத்துத் தேடி சாமான்களை யெடுத்துக்கொண்டு போகாமல் பயந்தவன் போல் கடிகாரத்தைப் பிடித்திழுத்திருக்கிறான். அது அகப்பட்டதுமே அவன் ஓடிவிட்டான். முதலியார் ஸம்ஸாரம் அங்கு இரண்டொரு நிமிஷம் கழித்து வந்தபொழுது அவன் அடையாளமேயில்லை. இது யுக்திக்கு ஒத்திருக்கிறதா?'' என்று கேட்டார் கவிகுஞ்சரம்.

அப்பொழுது கரிகாலப்பிள்ளை, "அவ்வளவு யுக்தி தெரிந்தவர், தாமே ஏன் அங்கு போய் எல்லாவற்றையும் அறிந்து திருடனைப் பிடிக்கக் கூடாது?'' என்று பரிகசித்தார். "அப்படிச் செய்வதாகத்தான் உத்தேசம்'' என்று சொல்லி அவர் வாயையடக்கினர் அம்மையப்ப பிள்ளையும்.

III

காலணா லேபில்

அன்று நானும் கவிகுஞ்சரமும் நீலைச்சேரிக்குப் போனபொழுது மணி பத்திருக்கலாம். ஸ்டேஷனிலிருந்து "சீல நிவாஸ'' த்திற்குப் பதினைந்து நிமிஷத்தில் நடந்து போய்விட்டோம். அதுதான் இறந்துபோன முதலியாருடைய பங்களா. சுற்றிலுமுள்ள காம்பௌண்ட் விஸ்தாரமானது. வழிநடை மிக நீண்டது.

நாங்கள் வாசலண்டை இறங்கியதும், ஒரு போலீஸ் சேவகர், "உங்களை உள்ளேவிட முடியாது'' என்று சொல்லிக்கொண்டு எங்களைப் போகாமல் தடுத்தனர். அப்பொழுது பிள்ளை, "எங்களுக்கும் அங்கு போகவேண்டிய அவசரமில்லை. ஆயினும் இந்தக் கேஸை நடத்தும் போலீஸ் இன்ஸ்பெக்டருடனாவது கொலைநடந்தவுடன் சவத்தைப் பார்த்திருந்தவர் யாராவது இருந்தால் அவருடனாவது சிலவார்த்தைகள் பேசவேண்டும்'' என்றனர். 'அப்படியா? தாங்கள் என்னுடன் பேசலாமே. அம்மாதிரி சவத்தை முதலில் பார்த்தவர்கள் முதலியார் பெண்சாதி சூடாமணி அம்மாளும், தபால் சேவகர் உத்தண்டி பிள்ளையும், நானுந்தான்'' என்றார் போலீஸ் சேவகர். "அப்படியா? மிகவும் சந்தோஷம்'' என்றார் பிள்ளை. மெதுவாக சேவகர் பைக்குள் நாணயம் நழுவிய சத்தமும் காதில்பட்டது. "அச் சவத்தின் பேரிலிருந்த காலணா லேபிலை நீர் பார்த்ததுண்டா'' என்று கேட்டார் பிள்ளை.

கா:—நான்தான் அதை முதலில் பார்த்தேன். என் கையிலிருந்த ராந்தலை ஆட்டினவுடனே அது தென்பட்டது. அது இறந்தவருடைய மார்பில் கிடந்தது. புதிய லேபிலாதலால் அது நன்றாகத் தெரிந்தது.

அ. பி:—சரிதான். அது உபயோகப்படுத்தாத லேபிலோ?

கா:—சுத்தப் புதிது. அப்பொழுதுதான் போஸ்டாபீஸிலிருந்து வந்ததுபோ லிருந்தது. அதைப் பார்க்கும் பொழுதுதான் ரொம்ப வேடிக்கையாயிருந்தது. ஆயினும் அதைவிட வேடிக்கை எங்கு பார்த்தாலும் கிடந்த சிகரெட்டுச் சாம்பல்தான். அந்த மனிதன் சட்டையெல்லாம் ஒரே சாம்பலாக இருந்தது. அவர் முகத்தின்பேரில்கூட அது சிறிது பட்டிருந்தது.

அ. பி:—ஓஹோ! என்ன ஆச்சரியம். அவர் சட்டையில்கூட நெருப்புப்பட்டிருந்ததாமே?

கா:—ஆமாம். இரண்டொரு இடங்களில் துணி பொசுங்கித்தா னிருந்தது.

அ. பி:—ஒரு வேளை கொலை செய்தவன் வெளிச்சத்துக்கென்று தீக்குச்சியைக் கிழித்திருக்கலாமோ?

கா:—(வெகு சாமர்த்தியவான்போல் அபிநயித்து) சுற்றி நூறடிக்கு ஒரு நெருப்புக் குச்சிகூட கிடையாது. நடை முழுதும் ஓரிடங்கூட விடாது தேடிப் பார்த்துவிட்டோம்.

"அப்படியானால் அந்தச் சட்டை பொசுங்கினதற்குக் காரணம் என்னவென்று உங்களுக்குத் தோன்றுகிறது?'' என நான் கேட்டேன். கான்ஸ்டெபிள் தலையை அசைத்துக்கொண்டு, "அதெல்லாம் எங்களுக்குத் தெரியும்'' என்று வாயைக் கெட்டியாய் மூடிக்கொண்டுவிட்டார்.

அ. பி:—"ஐயா சேவகரே, உங்களை இன்னும் ஒரு கேள்விதான் கேட்கவேண்டியிருக்கிறது. கொலை செய்தவன் என்ன ஆயுதத்தைக்கொண்டு அடித்திருப்பானென்று உங்களுக்குத் தோன்றுகிறது? போலீஸில் இதைப்பற்றி என்ன அபிப்பிராயம்?''

கா:—"அது ஒன்றும் எங்களுக்குப் புரியவில்லை. ஆனால் இங்குள்ள டாக்டர் ஒரு சிறிய இரும்பு ஆயுதத்தால் அடி விழுந்திருக்கிறதென்

றும் அதன்மேல் குழி குழியாகப் பள்ளங்கள் இருந்திருக்க வேண்டுமென்றும் அபிப்பிராயப் படுகிறார். மேலும் காயங்கள் பட்டிருந்ததைக் கவனித்தால் கொலை செய்தவன் பெரிய ஆளாக வும், நல்ல பலிஷ்டனாகவும், வள்ளங் கையனாகவு மிருக்க வேண்டுமென்றும் அபிப்பிராயப் படுகி றார். தனக்குள் தான்தான் கெட்டிக்காரரென்று அவருக்குச் சிறிது அபிப்பிராயம் உண்டு.

அப்பொழுது அம்மையப்ப பிள்ளை "டாக்டர் களெல்லாம் அப்படித்தான்" என்று சொல்லி விட்டுத் திரும்பினார். சீக்கிரம் நிலைச்சேரி மேலைத் தெருவுக்கு வந்தோம். அங்குதான் தபால்கார உத்தண்டி பிள்ளை வீடு. அவனை இரண்டொரு கேள்விகள் கேட்கவேண்டு மென்பது நமது கவி குஞ்சரத்தின் அபிப்பிராயம். ஆயினும் நாங்கள் அவன் வீடு வந்தபொழுது அங்கொரு ஜனக் கூட்டமிருந்தது. என்ன விசேஷமெனக் கேட் டோம். "உத்தண்டிப் பிள்ளையை கைதியாக்கி விட்டார்கள். அவர்தான் காரியசீல முதலியா ரைக் கொன்றதாக போலீஸாரின் அபிப்பிராயம்" என்றும், "நான் சீல நிவாஸத்தில் ஒரு வேலைக் காரன். ஆகையால் உத்தண்டி பேரில் சந்தேகம் ஏற்பட நல்ல காரணமிருக்கிறதென்று எனக் குத் தெரியும்" என்றும் ஒருவன் சொன்னான்

IV

துப்பு

அவன் சொல்லுவதை ஆவலுடன் எல்லோ ரும் கேட்கவே சந்தோஷத்துடன் பின்வரு மாறு இன்னும் சிறிது ஜம்பமாய்ப் பேசினான்.— முதலியார் ஸம்ஸாரம் சூடாமணி அம்மாள் போலீஸ் இன்ஸ்பெக்டரிடம் வாக்கு மூலம் கொடுக்கும் பொழுது நானிருந்தேன். இந்த உத்தண்டி சிறிது காலமாய் முதலியாரு டன் சண்டைபிடித்து வருகிறான். நேற்றுக் காலையில் இருவருக்கும் கைகலந்து விடும்போ லிருந்தது. பங்களாவில் ஒரு பொல்லாத நாய் இருக்கிறது. அது உத்தண்டி வரும்பொழுதெல் லாம் அவனைத் துரத்துகிறது. கடிக்குமோ வென அவன் பயப்படுகிறான். அவன் நேற்றுக் கடைசி யாகக் காம்பௌண்ட் வாசல் தாண்டிக் கடிதம் கொண்டு வருகிறதில்லை என்று சொல்லி விட் டான். அதனால்தான் நேற்றிரவு அந்தக் கடிதங் களை அவனிடம் வாங்கி வருவதற்குச் சூடா மணி அம்மாள் வாசலுக்கு வந்தது. வரும்பொ ழுதுதான் முதலியார் இறந்திருக்கக் கண்ட னள். இன்னொரு சந்தேகமுமுண்டு. முதலியாரு டைய சட்டை இரண்டொரு இடத்தில் பொ சுங்கி யிருந்ததல்லவா? அது இந்த உத்தண்டி கடிகாரத்தை எடுக்கக் குனிந்தபொழுது அவன் ராந்தல் விளக்குப்பட்டுப் பொசுங்கி யிருக்க வேண்டும்." என்று சொல்லி முடித்தான். எல் லோரும், "என்ன ஆச்சரியம்" என்று பேசிக் கொண்டிருக்கும்பொழுது, பிள்ளை "இந்த உத் தண்டி நல்ல தடியனல்லவா?" என்று கேட்டார். அப்பொழுது அங்குள்ளார் ஒருவர் "தடியனா?" உயிரேயில்லாத ஒரு வீங்கல். ஆயினும் பொல் லாப் பயல்கள்! என்ன செய்வானென்று சொல்ல முடியாது" என்றார்.

"அது என்னமோ சரிதான்" என மற்றொரு வன் சொல்ல, அதைப்பற்றி எல்லோரும் பேச ஆரம்பித்தனர். கவிகுஞ்சரமும் "பட்டணம் போகலாமே" என்று சொல்லினர் அப்பொ ழுது.

நான் :—"பட்டணமா? ஆனால் இந்தக் கேஸ் முடிந்துவிட்டதா? உத்தண்டிதான் குற்றவாளி யா? தீர்மானத்துக்கு வந்துவிட்டீரா?" எனக் கேட்டேன்.

அ. பி :—"நான் அப்படிச் சொல்லவில்லையே. ஒரு நாய்க்குப் பயப்படுகிற வீங்கல் உத்தண்டி டாக்டர் சொன்ன தடியனாகவிருக்க முடி யுமா? அப்புறம் அந்த லேபில் இருக்கிறது. அந்த விஷயம் தெரிந்த பிறகுதான் இந்தக் குற் றம் ருஜுவாகும்."

நான் :—"என்ன காலணா லேபில் உம்மைச் சும்மா விடாதுபோலிருக்கிறதே. உத்தண்டி தபால்காரன். அவனிடம்—.

அ. பி:—அவசரப்படாதேயும் ஐயா. தபால் காரனாயிருந்தால் போகிற விடங்களிலெல்லாம் தபால் லேபிலைச் சிந்திக்கொண்டு போவானோ?" என்று சொல்லிவிட்டு உடனே மௌனமாயிருந் தனர்.

பட்டணமும் வந்துசேர்ந்தோம். அவரை விட் டுப் பிரியும்பொழுது கவிகுஞ்சரம் "உங்களாபீ ஸில் எத்தனை குமஸ்தாக்க ளிருக்கின்றனர்?" எனக் கேட்டார். "மொத்தம் பத்துப் பேர். ஆனால் சற்று ஜாக்கிரதையாகப் பேசவேண்டும். குற்றவாளியை எங்கள் ஆபீஸில்—" என்று சொல்லிமுடிக்குமுன், அவர் "அவசரப்படேல். எனக்கு ஒருவர் பேரிலும் சந்தேகமில்லை. ஆயி னும் இதில் நான் வேலை செய்வதானால் எங்கிருந்

தாவது ஆரம்பிக்கவேண்டுமே. முதலியார் ஆபீ ஸிலேயே ஆரம்பிக்கிறேன் இப்பொழுது மணி பன்னிரண்டாகப் போகிறது நீங்கள் ஆபீஸுக்குப்போக வேண்டாமா? நானும் கூடவே வருகிறேன் உங்களுடன் இரண்டொரு மணி நேரமிருக்க வேண்டும்'' என்று சொல்லிக் கூடவே வந்தனர்.

V

மர்மத்திலும் மர்மம்

"அப்படியே செய்யுங்கள். ஆயினும் இதெல்லாம் கால விரயம் தான்'' என்று சொல்லிக் கொண்டே அவருடன் ஆபீஸுக்குள் நுழைந்தேன். அங்கு இந்தக் கொலையைப் பற்றித்தான் பேச்சு. உத்தண்டியைக் கைது செய்தது அவர்களுக்குச் சற்று முன்னமே தெரியும். அதைப் பற்றி எல்லோரும் வம்பளந்து கொண்டிருந்தனர். அப்பொழுது கவிகுஞ்சரம் என் பக்கத்தில் ஒரு நாற்காலியில் உட்கார்ந்துகொண்டு "வாஸ்தவந் தான். உத்தண்டி பேரில் சந்தேகப்பட பலத்த காரணமிருக்கின்றது. வழிநடப்பில் அவர்கள் இருவரும் சந்திக்க, பழைய சண்டை மறுபடியும் கிளம்ப, அப்பொழுது கோபம்—'' என்று சொல்லி முடிக்கு முன், திடுக்கிட்டு நாற்காலியிலிருந்து எழுந்து நின்றுகொண்டு எதையோ கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தார். "என்ன சமாசாரம்?'' என்று நான் கேட்க, அவர் சிரித்துக்கொண்டே "புதிதொன்றுமில்லை இப்பூதலத்தில் எனக் கவி பாடியது பொய்யாமோ?'' எனச் சொன்னார்.

நான். "அப்படியென்றால்?''

அ.பி:—இப்பூமியில் புதியது ஒன்றும் கிடையாது என்று அர்த்தம். உம்முடன் குமாஸ்தாக்களாக விருக்கப்பட்ட இவர்கள் பெயரென்ன?

அவர்கள் பெயர்களை நான் வரிசையாகச் சொல்லிக்கொண்டு வரும்பொழுது, கவிகுஞ்சரம் அதை கவனிக்கவேயில்லை. என்னவோ, வாய் முணுமுணுத்துக் கொண்டிருந்தார். அவர் பலத்த யோசனையிலிருப்பதைக் கண்ட நான் இவர் கவனம் செய்வதில் விழுந்துவிட்டார் எனத் தீர்மானித்துக் கொண்டேன். அவரும் சீக்கிரமே "இந்த இரண்டில் எது ஐயா உமக்குப் பிடித்திருக்கிறது?

ஈரக்காற்றின் சினந்த வீச்சு,
சினந்தகாற்றின் ஈரவீச்சு.

சிரிக்கிறீரா? இரண்டும் நன்றாகத்தானில்லை. ஆயினும் அது என் மனதைவிட்டுப் போகவில்லை'' என்று சொன்னார்.

அப்பொழுது எங்களாபீஸ் உதவி மானேஜர் குப்புஸாமி பிள்ளை அவ்வழியாக வந்து என்னைச் சில கேள்விகள் கேட்டார். அவர் கொண்டு வந்த காகிதக்கட்டை நாங்களிருவரும் படித்துக் கொண்டிருந்தோம் அம்மையப்பபிள்ளை பக்கத்திலிருந்தா ரென்பதையே நான் மறந்துவிட்டேன்

அவரோ மேஜையின்பேரில் சாய்ந்துகொண்டு, சற்றும் இங்கிதம் தெரியாதவர்போல், "இந்த சிகரெட்டுப் பத்தவைக்கச் சிறிது நெருப்புவேண்டும், தரலாமா!'' எனக் கேட்டனர். நான் சிறிது சலிப்புடன் எனது சட்டைப்பையில் நெருப்புப் பெட்டியைத் தேடிக்கொண்டிருந்தேன். ஆனால் மேஜையின் கீழாக அவர் என் காலை மிதித்து என்னை சும்மாவிருக்கும்படி செய்தனர். அப்பொழுது குப்புஸாமி பிள்ளை தம்மிடமிருந்த ஒரு சிறு 'பெற்றோல்' சிகரெட்டு விளக்கை அவரிடம் கொடுக்க, 'மெத்த சந்தோஷம் ஐயா,'' என்று வாங்கிக்கொண்டு, கனத்தபுகை சூழ சிகரெட்டு குடித்தனர்.

குப்புஸாமி பிள்ளையும் தன் காரியம் முடிந்ததும் தமது அறைக்குச் சென்றனர். அப்பொழுது என் நண்பர் ஒரு துண்டுக் காகிதமெடுத்து அதில், "குப்புஸாமி பிள்ளை எங்கு இருக்கிறாரென்று உமக்குத் தெரியுமா?'' என்று எழுதி, அதை என் பக்கம் தள்ளினர். அதிலேயே "கல்லடி, பீமசாமி தெரு 'அன்ன நிவாஸ்,' ஹோட்டலில் மேல் மெத்தையில் இருக்கிறார்'' என்று எழுதினேன் அப்பொழுது, "'ஈரக்காற்றின் உரத்தவீச்சு' தான் திறமெனத் தோற்றுகிறது'' என்று சொல்லிக்கொண்டே எழுந்து அக்காகிதத்தை எடுத்துக்கொண்டு, மெதுவாய், "சிறிது நேரங்கழித்து, உம்மை நான் 'டெலிபோனில்' கூப்பிடலாம்'' என்று சொல்லிவிட்டுப் போயினர். ஆனால் வாசற்படி தாண்டுமுன் 'உங்களுக்குப் பணம் தருவதாகச் சொன்னேனே'' என்று தன் பையிலிருந்து, ஒரு பிடி பணம் எடுத்தார். விரலிடுக்கு வழியாய் ஒரு நாணயம் நழுவ, அதையெடுக்கக் குனிந்தவர் தவறி விழுந்தனர். அங்கிருந்தோர்கள் வந்து சிந்திய காசையெல்லாம் எடுத்துக் கொடுக்க, அவற்றை யெல்லாம் என் மேஜையின் மேல் வைத்துவிட்டுப் பதில் சொல்லாமல்

போயினர். ஏற்கெனவே நடந்த விஷயங்கள் ஒன்றும் புரியாத எனக்கு இது மர்மத்திலும் பலத்த மர்மமாகத் தோன்றிற்று.

VI

நிமிஷம் தப்பினுல்—

அவர் போனபிறகு எனக்கு வேலை ஓடவேயில்லை. கவிகுஞ்சரம் எதைக் கண்டுவிட்டார்? குப்புஸாமி பிள்ளை விலாசம் அவருக்கு என்னத்துக்கு? எனப் பல விஷயங்களையும் நினைத்து நினைத்துப் பார்த்துக் கடைசியில் ஒன்றும் புரியாமல் 'டெலிபோன்' சமாசாரம் வரட்டும் என இருந்துவிட்டேன்.

நான்கு மணி ஆயிற்று. டெலிபோனில் யாரோ கூப்பிட, உடனே நான் போனேன். "அது யார்? பலவேசம் பிள்ளையா? உடனே அன்ன நிவாஸத்திற்கு வருக. வந்ததும் பரதேசி முதலியார் எங்கு இருக்கிருரென்று விசாரித்து நான் இருக்குமிடம் உடனே வருக" என்று பிள்ளை சொன்னது கேட்டது. அவர் வார்த்தையில் ஒரு குதூஹலமுமிருந்தது. "இதோ வந்துவிட்டேன். என்ன புதிதாகத் தெரியவந்தது?" என்று கேட்டேன்.

"வந்து சேருங்கள், நேரில் பேசிக்கொள்ளலாம்" என்றதும், நான் ஒருவரிடமும் சொல்லாமல் வெளியில் வந்து 'பஸ்'பிடித்துக்கொண்டு இருபது நிமிஷத்தில் அன்ன நிவாஸம் போய், உடனே "பரதேசி முதலியார் எங்கே?" என்று ஒரு வேலைக்காரனைக் கேட்டேன். நான் கேட்டுக் கொண் டிருக்கும்பொழுது குப்புஸாமி பிள்ளை வெகு வேகமாய் வந்து மாடிப்படியை ஏறிப்போனுர். வேலைக்காரன், "முதலியாரவர்கள் மெத்தையில் மேலண்டைச் சரகில் பன்னிரண்டாவது அறையில் இருக்கின்றுர். தங்களை உடனே வரச் சொன்னுர்" என்று சொல்ல, நானும் அவசரமாய்ப் படியேறிப் போனேன். படி தாண்டியதும் யாரோ குறவளையைப் பிடித்ததுபோல், "பலவேசம் பிள்ளை, பலவேசம் பிள்ளை" என்று கவிகுஞ்சரம் கூப்பிட்ட குரல் காதில்பட்டது. நான் திகைத்துத் திரும்புமுன், 'ஐயோ! ஐயோ!' என்றும் கத்தினுர். ஒரே ஓட்டமாய்த் தாழ்வாரத்தின் வழியாய் ஓடி, பன்னிரண்டாவது அறையைப் பார்த்தேன். அதில் ஒருவருமில்லை. அதற்கு எதிரிலுள்ள அறையில் சத்தம் கேட்டதுபோலிருந்தது. அது தாளிட்டிருந்தபடியால் அதைத் திறக்க முடியவில்லை. உடனே என் முழுபலத்தோடும் அதன் பேரில் பாயக் கதவு உடைந்து போயிற்று.

அங்கு பலிஷ்டனை ஒரு ஆள் அம்மையப்ப பிள்ளையை ஒரு கட்டிலின் பேரில் தள்ளி அவரைக் கொல்லவென்று அவர் குறவளையைக் கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டிருக்கப் பார்த்தேன். அவன் பேரில் பாய்ந்து அவனைப் பிடித்திழுக்க, அவன் எங்களாபீஸ் உதவி மானேஜர் குப்புஸாமி பிள்ளையாக விருந்தான். அம்மையப்பப் பிள்ளையும் சுவாசம் வாங்க, "அவனை விடாதேயும் ஐயா, பலவேசம்! — இவன்தான் முதலியாரைக் கொன்றவன்" என்றனர்.

குப்புஸாமி பிள்ளை தப்பித்துக்கொள்ள வெகு பாடு பட்டான். நாங்களிருவரும் சேர்ந்து அவனைக் கட்டிப்பிடிக்க முடியவில்லை ஹோட்டல் வேலைக்காரனும், அங்கு வந்திருந்த பலரும், அப்பொழுது ஒத்தாசை செய்யா திருந்தால், அவன் எங்களை உதறிவிட்டுப் போயிருப்பான்.

பிறகு நடந்தது யாரும் ஊகிக்கக் கூடியதே. எங்கு பார்த்தாலும் பலத்த சத்தம் போலீஸ்காரரில் ஒரு அரைடஜன் பேர்வழிகள் அவனைக் கைதுசெய்ய வந்துசேர்ந்தனர். கவிகுஞ்சரத்தின் பாடு கொண்டாட்டம். அவர் எப்படி இதைக் கண்டுபிடித்தாரென்று கேட்காதவரில்லை.

VII

குற்றத்தின் விவரம்

குற்றவாளி குப்புசாமிபிள்ளை கொடுத்த வாக்கு மூலம்:— நான்தான் காரிய சீல முதலியாரைக் கொன்றேன். அன்று ஆபீஸில் மற்ற குமாஸ்தாக்கள் வீடு சென்ற பிறகு அவர் என்னைக் கூப்பிட்டு, நான் ஒரு வியாபார சங்கத்திலிருந்து லஞ்சம் வாங்கியதாகக் குற்றஞ் சாட்டினர். நான் அந்தச் சங்கத்தாருக்கு ஒரு 'கண்ட்ராக்ட்' சிபார்சு செய்திருந்தேன். அவர்கள் எனக்கு வெகுமானம் தருவதாகச் சொன்ன கடிதம் எப்படியோ அவர் கையில் சிக்கி விட்டது. மேலதிகாரிகளுக்குத் தெரியப்படுத்துவது தமது கடமையென்றும், அப்படிச் செய்தால் என்னை அவர்கள், 'ப்ராஸிக்யூஷன்' செய்வார்களென்றும் சொன்னுர். நான் மன்னிக்கவேண்டுமென்று பலதடவை கேட்டும் மறுத்துவிட்டனர்.

அந்தக் கடிதத்தை அவர் தமது பாக்கெட் புஸ்தகத்தில் வைக்கும் பொழுது நான் பார்த்தேன். அவர் ஆபீஸ்விட்டு வெளிவந்தபொழுது

அக்கடிதத்தை எப்படியாவது அவரிடமிருந்து பிடுங்கிவிடுகிறதென்ற தீர்மானத்துடன் பின் சென்றேன். அவரை உடனே கொன்று விடலா மென்று ஓடினேன்.

ஆயினும் அப்படிச் செய்ய முடியவில்லை. அவர் 'பஸ்' ஏறியதும் நானும் ஒரு 'பஸ்' பிடித்துக்கொண்டு நீலச்சேரிக்கு வந்து சேர்ந்தேன். அவர் பங்களாவுக்குப் போகும்பொழுதும் பின் தொடர்ந்தேன். அவரைக் கொல்ல சமயம் வாய்க்கவில்லை. தன் பங்களாவைபடைந்து வழி நடையில் போய்க்கொண்டிருந்த காலத்தில், 'இனிமேல் தயங்கலாகாது?' என்று நினைத்து உடனேயே அவரை நோக்கிப் பாய்ந்தேன். அப்பொழுது என் கையில் ஆயுதமொன்றுமில்லை. ஆனால் என்னுடைய பை கனமாயிருந்தது அப்பொழுது நமது ஆபீஸில் சுருட்டுச் சாம்பல் தள்ளுவதற்காக வைத்துள்ள இரும்புக் குழாய்களில் ஒன்றை எனது பையிலெடுத்துப்போட்ட ஞாபகம் வந்தது. அது ஒரு பெரிய ஆயுதமல்ல. ஆயினும் வேறொன்றுமில்லாததால் அதைக் கையிலெடுத்துக்கொண்டு முதலியார் பின்னே வேகமாய் ஓடி அவர் திரும்பிப் பார்க்குமுன் அவர் தலையில் ஓங்கி ஒரு அடி அடித்தேன். அவர் உடனேயே கீழே விழுந்துவிட்டனர் ஆயினும் என் ஆத்திரத்தில் அவர் மண்டையில் பல அடிகள் அடித்தேன். கடைசியில் அவர் நகரவேயில்லை.

எனது சிகரெட்டுப் 'பெற்றோல்' விளக்கைக் கொளுத்தி அவர் பாக்கெட் புஸ்தகத்தைக் கண்டுபிடித்து அதிலிருந்து என் காகிதத்தை எடுத்தேன். பிறகு அப்புஸ்தகத்தைப் பையிலேயே வைத்து விட்டுச் சிறிது தூரம் ஓடினேன். அப்பொழுது அவர் சாமானில் எதையாவது எடுத்து விட்டால் போலீஸ்காரர் இக்கொலை ஒரு சாதாரணமான திருடனால் செய்யப்பட்டதென்று ஊகிப்பார்கள் என்று நினைத்து மறுபடியும் ஓடிவந்து அவர் கடிகாரத்தையும் சங்கிலியையும் இழுத்தேன். அதையும் நான் பையில் வைத்திருந்த குழாயையும் அவர் வீட்டிலிருந்து இருநூறு கஜத்துக்குப் பக்கத்திலுள்ள குட்டையி லெறிந்துவிட்டு வீடு திரும்பினேன். —குப்புஸாமி பிள்ளை.

VIII

கவிகுஞ்சரத்தின் கதை

அன்றிரவு நாங்கள் சாப்பிடும்பொழுது அம்மையப்பபிள்ளை தன் கதையைப் பின்வருமாறு சொன்னார்:—

இந்தச் சம்பவத்தில் எனக்கு ஒரு சந்தேகந் தானிருந்தது. கொலை செய்தவன் எண்ணந் தானென்ன ? பணமா யிருக்கமுடியாது. ஆயிர ரூபாய் நோட்டை விட்டுவிட்டு ஒரு கடிகாரத்துக்கும் சங்கிலிக்குமா திருடுவான் ? வேறு எதையாவது எடுத்துக்கொண்டு போயிருக்கலாமோ ? அது மற்றவர்களுக்குப் பிரயோசனமில்லாமலிருக்கலாம். ஆனால் கொலை செய்தவனுக்கு அவசியமாயிருக்கலாம். ஒரு காகிதமாயிருக்கலாமோ ?

மறுபடி யோசனை செய்ததில் காலணு லேபில் ஞாபகத்துக்கு வந்தது. அது சவத்தின் பேரில் கிடக்கவேண்டிய காரணமென்ன ? புதிதாகவும் சுருண்டு நசுங்காமலுமிருந்ததால், அது ஒரு பையிலிருந்து செத்தவன்பேரில் விழுந்திருக்கவேண்டும். கொலை செய்தவன் அந்தக் கோர கிருத்யத்துக்குப் பிறகு அந்தப் பையைத் திறந்து பார்த்திருக்கவேண்டும் முதலியார் பாக்கெட் புஸ்தகத்தில் நோட்டுகள் ஒன்றும் கெட்டுப் போகவில்லைதான். ஆயினும் அவன் அதைத் திறந்து தனக்கு அவசியமாயிருந்த ஒரு கடிதத்தை மாத்திரம் எடுத்திருந்தால் என்ன ? அப்படிச் செய்யுங்கால் லேபில் கீழே விழுந்திருக்கலாம்" என்று நினைத்தேன். அப்படி நினைத்ததற்குக் காரணம் மற்றொன்று மிருந்தது. இறந்தவர் சட்டை இரண்டொரு இடத்தில் விஸ்தாரமாய்ப் பொசுங்கி யிருந்ததல்லவா? அப்பொழுது ஒரு வெளிச்சத்தின் தழல் அதில் பட்டுத்தானே அது பொசுங்கி யிருக்கவேண்டும். ஒரு குற்றவாளி தனக்கு வேண்டிய காகிதத்தைத் தேடும்பொழுது இரண்டு நெருப்புக் குச்சியைக் கிழித்திருக்கலாம். ஆயினும் தீக்குச்சி நெருப்புப் பட்டால், அவ்வளவு பெரிதாய்ப் பொசுங்காதே. மேலும் கான்ஸ்டெபிள் சொன்னதில் எரிந்த நெருப்புக்குச்சித் துண்டு அங்கு ஒன்றும் காணப்படவில்லையே. ஆகையால் அவ்வெளிச்சம் எதுவாய் இருக்கலாமென்று யோசிக்க, அநேகமாய் அது இக்காலத்தில் உபயோகத்திலிருக்கும் ஒரு சிறு 'பெற்றோல்' விளக்கா யிருக்குமென்றே தீர்மானித்தேன்.

முதலியாரைக் கொலை செய்தது, அவர் காம்பௌண்டுக்குள்ளிருந்த வழி நடையில் என்றால் அவர் வீட்டுக்கு வெகு சமீபத்தில். அந்த நடப்பு

னீளமானது தான். குற்றவாளியானவன் தான் அவரை அடித்த அடிகள் வீட்டில் கேட்டுக் கலவரத்தை யுண்டு பண்ணுமென்று நினைக்கவில்லை போலும். அதனால் குற்றவாளிக்கு முதலியாரைத் தெரிந்திருந்த போதிலும் அவர் வீட்டுக்கு முன் பின் வந்திருக்க முடியாதென்று நிச்சயித்தேன். அதாவது அவன் அக்கம்பக்கத்தவன் அல்ல. சற்று தூரத்திலிருந்தே வந்திருக்கவேண்டும். ஆகையால் அந்த விடத்தில் அவனைத் தேடுவது பிரயோஜனப் படாது என்று நினைத்து முதலியார் ஆபீஸிலேயே சிறிது பரிசிலனை செய்யலாமென்று தீர்மானித்தேன்.

ஆபீஸில் நுழையும் பொழுதே நான் செய்த தீர்மானம் சரி யென்பதற்குத் தகுந்த ருஜுவு ஏற்பட்டது ஏனெனில் அங்கு சென்றதும் முதலில் என் கண்களில் பட்ட வஸ்து இதுதான் என்று தன்னுடைய பையிலிருந்து வட்டமான ஒரு இரும்புக் குழாயை எடுத்துக்காட்டினார்

இது பலவேசம் பிள்ளைக்கு நன்றாகத் தெரியும். இம்மாதிரி அநேகம் அவர் ஆபீஸில் கிடக்கின்றன. இது காகிதத்துக்குக் கனமாகவும், சுருட்டு, சிகரெட்டுச் சாம்பல் தட்டிவிடுவதற்கு உபயோகமாகவும் இருந்து வருகிறது. இதைப் பார்த்தீர்களா? ஒரு பெரிய எலுமிச்சம்பழம் போலிருக்கிறது. இதன் பக்கங்களில் குழி குழியாகப் பள்ளங்க ளிருக்கின்றதைக் கவனித்தீர்களா? இதன் மேல்பாகத்தில் சிகரெட்டுச் சாம்பல் தட்டிவிடும்படி ஒரு பொத்தல் வெட்டப்பட்டிருக்கிறது. உஷ்ணமான சுருட்டுச் சாம்பல் எந்த இடத்திலும் ஒட்டிக்கொள்ளும். இது குழிவாயிருப்பதால் இதற்குள் ஒட்டிக்கொண்ட சாம்பலை வெளியே சுலபமாய் கொட்டமுடியாது. கொலை செய்தவன் இதை தன் பையில் போட்டுக் கொள்ளுமுன் கவிழ்த்திருக்கலாம். ஆனால் அதைத் துடைத்துச் சுத்தம் பண்ணவில்லை. அதைக்கொண்டு முதலியாரை அடித்தபொழுது அதன் உள்ளிருந்து சாம்பல் அவர் பேரில் உதிர்ந்திருக்கிறது எனத் தீர்மானித்தேன். இது நல்ல ருஜுவானதால், எல்லோரும் நான் வேண்டுமென்று கீழேபோட்ட சில நாணயங்களைப் பொருக்கிக் கொண்டிருக்கும் சமயத்தில் இதை எடுத்துக்கொண்டு வந்துவிட்டேன்.

நான் பலவேசம் பிள்ளையோடு உட்கார்ந்திருந்தபொழுது அறையிலிருந்தவர்களை ஜாக்கிரதையாய்க் கவனித்து வந்தேன். அங்கிருந்தவர்களில் இருவர் 'பெற்றோல்' விளக்கு வைத்துக் கொண்டிருந்தனர். ஆனால் அவர்களிருவரும் பெரிய ஆள்களல்ல. மேலும் வள்ளங்கையர்களுமல்ல. பிறகு குப்புஸாமி பிள்ளை நான் உட்கார்ந்த மேஜைக்கு வந்தபொழுது அவன் வள்ளங்கையன் என்று கண்டேன் ஆளும் பெரியவன். அவனும் 'பெற்றோல்' விளக்கு உபயோகப்படுத்துகிறானென்றும் தெரிந்துகொண்டேன்.

உடனே அன்ன நிவாஸத்துக்குச் சென்று ஒரு அறை அமர்த்தினேன். அவன் குற்றவாளியென்பதாக வைத்துக்கொண்டு அவன் அன்று சாயங்காலம் போட்டுக்கொண்டிருந்த உடுப்புகளைக் கவனித்துப் பார்க்கவேண்டுமென்று அவன் அறையைத் திறந்து உள்சென்றேன். ஏனெனில் அவன் சட்டையின் இடது கை ஓரத்தில் ரத்தக் கறையாவது வேறு அடையாளமாவது இருக்குமென்று தீர்மானித்தேன். அவன் போட்டுக்கொண்டிருந்த சட்டை ஒரு மூலையில் தொங்கிக்கொண்டிருந்தது அதன் வெளிப் பக்கத்தில் ரத்த அடையாள மில்லாமல் தேய்த்து விட்டான் ஆயினும் கைக்குள் இரண்டொரு பொட்டுக் கறை இருந்தது.

உடனே பலவேசம் பிள்ளையை அழைத்தேன். அவர் வருமளவும் இன்னும் ஏதாவது அடையாளமுண்டாவென்று அங்குமிங்கும் பார்த்துக் கொண்டிருந்தேன். அப்பொழுது குப்புசாமி பிள்ளை திடீரென்று வந்தான். மேல் நடந்த விஷயந்தான் உங்களுக்குத் தெரியுமே" என்று சொல்லி முடித்தார். அப்பொழுது அங்கிருந்த ஒருவர், "தாங்கள் பெரிய துப்பு நிபுணராக வல்லவா இருக்கவேண்டும்" என உரைத்தனர்.

அப்பொழுது கவிகுஞ்சரம், "என்ன, துப்பா? போதும் போதும். யாரோ ஒருவன் கொலை செய்யப்போக, இன்று முழுதும் இரண்டு வரி கூடப் பாடமுடியாமல் போய்விட்டது" எனத் தன் காரியத்தைக் கவனிக்கப்போனார்.

முற்றிற்று.

பாலர்களுக்கென்று நமது விவேகபோதினி காரியாலயத்தில் பிரசுரித்துள்ள இதிகாச புராணங்கள் லளிதமான பாஷையில் ரசமாய் எழுதப்பட்டுள்ளன. அவற்றில் ஒன்றைத் தருவித்துப் பார்க்க.

மருந்தோமற் றானோம்பும் வாழ்க்கை பெருந்தகைமை பீடழிய வந்த விடத்து.

இரஞ்சிதம்

[ஸ்ரீமான் ஆ. இராமசாமி முதலியார், பீ. ஏ.]

(226-ம் பக்கத் தொடர்ச்சி.)

அவருடைய மேன்மைக்குணமன்றோ அவருக்குக் கூற்றுவனுய் நின்றது. அவரைக் கெடுத்து அவருடைய ஆஸ்தியை யெல்லாம் பாழாக்கி அவரை ஏழையாக்குவதில் உமக்குண்டாகக் கூடிய நன்மையென்ன? அவர் உம்முடைய பந்துவல்லவா? அவர் நற்குண சீலராய் விளங்கி நன்மார்க்கத்திலொழுகி பேருங்கீர்த்தியும் பெற்று வாழ்வது உமக்குங் கௌரவமல்லவா; ஏனோ வீணாக அவரைத் தீயவழியிற் சேர்க்கவேண்டும்? நம் மூன்று குடும்பங்களு மிருந்த உந்நத நிலைமை என்ன? இப்பொழுதிருக்கும் இழிவான தன்மை எவ்விதம்? மூன்றில் ஒன்றேனுந் தழைத்து வளர்ந்தால் மற்றவர்கட்கும் மேன்மையல்லவா? அவரும் உம்மைப்போல் கெட்டு நின்ருல் உமக்குண்டாகும் ஆனந்தம் என்ன? எதற்காக இவ்விதஞ் செய்யவேண்டும்? என்றுரைத்து இன்னுமேதோ சொல்ல விருந்தவளைத் தடுத்து,

மதன :—இரஞ்சிதம்! உனக்குத்தான் பேசத் தெரியுமென்று இவைகளை யெல்லாஞ் சொல்லுகிருயா என்ன? நான் எவரைக் கெடுத்து விட்டதாகக் கூறுகிருய்? இரத்தினம் என்னுற் கெட்டானென்றோ சொல்லுகிருய்? அவனுடன் நான் சரியாகப் பேசி அநேக நாட்களாகின்றனவே. நான் அவனைப் பார்த்தும் சில மாதங்கள் கடந்தனவே. அவ்வாறிருக்க அவனை நான் கெடுப்பது எவ்விதம்? ஒருவர் பார்த்து மற்றொருவரைக் கெடுக்கமுடியுமா? கடவுள் பார்த்து ஒருவரை யழிக்கலாமேயன்றி மனிதனுலென்ன முடியும்?

இரஞ் :—கடவுளொருவர் இருக்கிருரென்ற நம்பிக்கை உமக்குங்கூட விருக்கிறதா? வீட்டையும் கடையையு மன்றி மற்றோரிடம் போயறியாத அவரைத் தாசிவீடே கதி யென்றிருக்கும்படி செய்துவிட்ட தாம் ஒன்றும் அறியாதவரைப் போற் பேசுகின்றீர். உம்முடைய மனச்சாட்சியே உம்மை வாதிக்கவில்லையா? உம்போன்ருர்க்கு மனச்சாட்சி என்பது மொன்றுண்டா? முழுப் பூசனிக்காயைச் சோற்றில் மறைத்த மாதிரி எல்லாவற்றையுஞ் செய்து அவரை இவ்வூரிலிருந்து துரத்தியும் விட்டு ஒரு பாவதோஷத்தையு முணரார்போற் பாசாங்கு செய்கின்றீர்.

மதன :—இரஞ்சிதம்! பெண்ணுதலின் நீ இவ்வளவு கூறியும் எனக்கு உன்மீது கோபம் வராமலிருக்கிறது. வேறெவரேனும் இம்மாதிரி என்முன் சொல்லியிருப்பாராயின் என்ன செய்வேன் தெரியுமா? ஆதலின் சற்று நாக்கை உள்ளேவைத்துப் பேசு.

இரஞ் :—(கோபச்சிரிப்புச் சிரித்து) உள்ளேயிருக்கும் நாக்கு வெளியில் எதற்கு வருகிறது? உள்ளதைச் சொன்னுல் உடம்பெரிச்சல் என்றமாதிரி உம்முடைய தீச்செயல்களை நான் வெளியிட்டுக்கூறவே உம்முடைய மனமே உம்மைத் தண்டிக்கிறதுபோலும்.

மதன:—இரஞ்சிதம்! உன் பிதற்றுதலை நிறுத்து. இனி அதிகம் பேசுவாயானுல் எனக்குக் கோபம் வரும். பிறகு மதனகோபன் என்னசெய்வான் என்பதை நீ யுணராய்.

இரஞ்:—இவைகளுக்கெல்லாம் இரஞ்சிதம் பயந்துவிடுவாளென்று கனவிலும் நினைக்கவேண்டாம். அறையிலிருக்கும் இரஞ்சிதத்திற்கு அம்பலத்தில் நடக்கும் விஷயம் என்ன தெரியப்போகிறதென்ற நம்பிக்கையி லிருக்கவேண்டாம். நீர் செய்துவந்த ஒவ்வொரு சங்கதியையும் நான் நன்கறிவேன். உம்முடைய நண்பர்களிலொருவனை ஏவிவிட்டுச் சென்னைவாசி யென்றுரைத்து அவருடன் கூட்டு வியாபாரஞ் செய்யும்படி சொன்னதும், இன்னும் சிலரை யனுப்பிவைத்து எல்லோருமாக அவரை அழைத்துக்கொண்டு நாடகம் பார்க்கச் சென்றதும், அன்று கொட்டகைக்கு நெருப்புவைத்ததும், அவர் தாசிவீடு எவ்வாறு சென்ருரென்பதும், அவருடைய நிலங்களைவிற்றுக் கடையை மூடும்படி செய்ததும், சென்ற வாரத்தில் அவர் திரிச்சிராப்பள்ளிக்குச் சென்றதும் ஆகிய எல்லாவிஷயங்களும் எனக்கு நன்ருகத்தெரியும். என்ன காரியத்தை யுத்தேசித்து இவைகளை யெல்லாஞ் செய்திருக்கிறீர் என்பதையும் நான் அறிவேன். உம்முடைய மனோபீஷ்டம் ஈடேறு மென ஒரு சிறிதும் எண்ணவேண்டாம்.

மதன :—சீ; சீ, வாயை மூடு. அதிகம் பேசுவாயானுல்—

இரஞ் :—உம்முடைய அதிகாரமெல்லாம் தாசிகள் வீட்டில். உம்முடைய கோபம் வந்து இங்கு ஒருவரையு மொன்றுஞ் செய்யமுடியாது.

மதன :—இரஞ்சிதம்! வீணாக என் கோபத்திற்குப் பாத்திரமாகவேண்டாம். மதனகோபன்

மயிர்நீப்பின் வாழாக் கவரிமா வன்னு ருயிர்நீப்பர் மானம் வரின்,

ஒரு காரியத்தை நினைத்தால், எத்தகைய இடையூறு வரினும் அதைச் செய்து முடிக்கவல்லவன் என்பதை மனதில் உறுதியாக வைத்துக்கொள்

இரஞ் :—நீர் என்மீது கோபித்துக்கொள்ள வேண்டிய காரணமொன்றையுங் காணேம். அவ்விதங் கோபித்துக் கொண்டாலும் அதைப்பற்றி எனக்கொரு சிறிதுங் கவலையில்லை. உம்முடைய சபதம் எவ்விடத்தில் நிறைவேறினும் இங்கு நடவாதென்பதை உறுதியாக மனதிற் பதித்து வைத்துக்கொள்ளவும்.

மதன :—அவ்வாறு நினைத்து மோசம் போக வேண்டாம். நான் சொல்வதைக் கேள்.

இரஞ் :—தாம் என்னிடஞ் சொல்லவேண்டியதொன்றுமில்லை. அதை நான் கேட்க வேண்டிய அவசியமுமில்லை. இரத்தினத்தை வஞ்சித்துக் கெடுத்ததுபோல், இரஞ்சிதத்தையும் வஞ்சித்து வசப்படுத்தி விடலாமென்ற எண்ணம் உமக்கிருக்குமாயின் அதை அறவே நீக்கிவிடுவது உமக்கு நலம்.

மதன :—இரஞ்சிதம் ! வேண்டாம். வீணைக் கெட்டுவிடுவாய்.

இரஞ் :—நான் கெட்டுப் போவேனே என்ற கவலை உமக்கு வேண்டாம். என்னைக் கெடுத்து விடலாமென்ற நம்பிக்கையையும் கொள்ள வேண்டாம்.

மதன :—இரஞ்சிதம்! என் சாமர்த்தியத்தை நீ யறியாய்.

இரஞ்:—தங்களுடைய வல்லமையைப் பெண்கள்பாற் கூறும் ஆடவர்கள் எத்தகையோ ரென்பதை நான் சொல்லவேண்டியதில்லை.

மதன :— அவ்விதமா ? சரி ; உன்னைப் பார்த்துக் கொள்ளுகிறேன், என்று சொல்லி விட்டு, இரஞ்சிதம் பதிற் கூறுமுன் வெளியிற் சென்றான்.

ஆறும் அத்தியாயம்

இரஞ்சிதத்தை எடுத்துச் செல்லல்

திரிச்சிராப்பள்ளியிற் கோபால பிள்ளையால் நியமிக்கப்பட்ட நாடகக் கம்பெனி எவ்வாறு நடைபெற்றிருக்கு மென்பதை வாசகர்களுக்கு நாம் சொல்லவேண்டிய அவசியமில்லை சரியாக நடிப்பவர்களாயினும் காதுக் கினிமையாகப் பாடக் கூடியவர்களாயினும் அந்தக் கம்பெனியிலில்லை. கண்டு களித்தற்குரிய சீன்களும் கிடையா. எனினும், நடிப்போரும் வேலைக்காரர்களும் பெருத்திருந்ததனாலும், சீன்கள் அதிகமாகக் கொண்டுவரப் பட்டிருந்ததனாலும், கம்பெனியும் புதிய பெயரை வகித்திருந்ததனாலும் இவைகளைக் கண்ணுற்ற அவ்வூர்வாசிகள் அது ஒரு பெரிய நாடகக் கம்பெனியா யிருக்குமென்ற நம்பிக்கையால் முதலாட்டத்திற்குத் திரள் திரளாக வந்து கூடினர். கொட்டகையில் இடமில்லாமல் டிக்கட் கொடுப்பதை நிறுத்தும்படியாகவுங் கூட வாயிற்று. ஆனல் மறுதினம் முதற்கொண்டு வசூல் குறைந்துகொண்டே வந்தது. கடைசியாகச் செலவிற்குப் போதிய வருமானங்கூடக் கிட்டாமற் போயிற்று. இவ்வாறு இரண்டு மாதங்கள் கடந்தன. மதுரையிலிருந்த நிலத்தைக் குறைந்த விலைக்கு விற்பதற்கான ஏற்பாட்டையும் கோபாலபிள்ளை செய்துவிட்டான்.

வீடொன்றைத் தவிரத் தன் ஆஸ்தியென்று சொல்வதற்குரிய தொன்றுமில்லா வத்தகைய நிலைமைக்கு வந்த இரத்தினம் ஒருநாள் தனியாக வுட்கார்ந்திருந்தபொழுது பின்வருமாறு யோசிக்கலுற்றான் :—“எந்தக் காரியத்தைச் செய்தாலும் கைகூடி வருவதாகக் காணேம். தந்தையாரால் செவ்வனே நடத்தப்பட்டு வந்த வியாபாரம் குன்றி நின்றதுமன்றி அவரால் ஸ்தாபிக்கப்பட்ட மளிகையும் மூடப்பட்டது. அதுதான் அவ்விதமாயிற்றே யென்று நாடகக் கம்பெனி வைத்தால் தக்க ஊதியங் கிடைக்கக் கூடுமென வெண்ணினேன். அதிலும் நஷ்டமே யுண்டாகிறதே யன்றி லாபத்தை யடைவதாயில்லை. நிலங்களை யெல்லாம் விற்றுவிட்டேன். இப்பொழுது எஞ்சி நிற்பது என்ன ? வீடொன்றுதான். இவ்வாறு ஏன் ஆகவேண்டும்? இதன் காரண மென்ன ? நம் நடக்கை தெய்வத்திற்குச் சம்மதமில்லை போலும்” என்று சிறிது மௌனமாயிருந்து மறுபடியும் “அன்று சமையற்காரன் கொடுத்த இரஞ்சிதத்தின் கடிதத்தில் ஏதேதோ வரையப்பட்டிருந்தது. மறுபடியும் சாவகாசமாய்ப் படித்துக்கொள்ளலாமென்று வைத்தேன். மறந்து விட்டேன்” என்று சட்டைப் பையிலிருந்து ஒரு கடிதத்தை யெடுத்து ‘ ஆம் இக்கடிதந்தான் ’ என்று (படித்துப் பார்த்து) மதனகோபனுக்கும் நமக்கும் யாதொரு மனஸ்தாபமுமில்லையே. அவன் என்னையேன் கெடுக்கவெண்ணுகிறான். என்னைக்கெடுப்பதற்கும் இரஞ்சிதத்தை அவன் விவாகஞ்செய்துகொள்வதற்கும் என்ன சம்பந்தம். ஒன்றை

இளிவரின் வாழாத மான முடையா ரொளிதொழு தேத்து முலகு.

யுங்காணோமே'' என்று தனக்குத்தானே சொல்லி யோசித்துக் கொண்டிருந்தபொழுது மதுரைக்குச் சென்றிருந்த அம்புஜம் திரும்பிவந்து ''என் துரையே! எங்கிருக்கின்றீர்?'' என்று சொல்லிக்கொண்டே இரத்தினம் உட்கார்ந்திருந்த அறைக்குள் வந்தாள்.

கணிகைமாதின் இனியவசனம் காதில் விழவும் களிப்பெய்திய இரத்தினம் கடிதத்தைச் சட்டைப்பையில் வைத்துக்கொண்டதுமன்றி அதைப்பற்றித் தான் சிந்தித்திருந்தனவெல்லாவற்றையும் மறந்து " அம்புஜம்! ஊரில் எல்லோரும் க்ஷேமந்தானே? நேற்றே வந்துவிடுவதாகச் சொல்லிச் சென்றவள் ஏன் வரவில்லை'' என்று கேட்டான்.

அம்புஜம்:—காரணமின்றி நிற்கவில்லை. நம்ம ஊரில் ஒரு புதிய நாடகக் கம்பெனி வந்திருக்கிறது. அதிலுள்ள ஆக்டர்களெல்லாம் பெண்களே. அதை நடத்துகிறவளும் ஒரு பெண்தான். தினப்படி ஏராளமான வசூலாகிறது. அதில் 'இராஜபார்ட்' போடும் ஒரு பெண் மற்றெல்லோரையும்விடப் பாட்டிலும் நடிப்பதிலுஞ் சிறந்தவளாகக் காணப்படுகிறாள். அவளுக்காகவே தான் சனங்கள் நாடகம் பார்க்கச் செல்லுகிறார்கள். அவளொருத்தி யில்லாவிடில் அக்கம்பெனி நடைபெறாது. அவளை நம் கம்பெனிக்குச் சில ஆட்டங்களுக்காயினும் வரவழைத்து நாடகம் நடத்தினால் தக்க வரும்படி கிடைக்குமென்ற உத்தேசத்தால் நேற்று அவளைப் பார்ப்பதின் பொருட்டுச் சென்றேன். அக்கம்பெனியின் 'மானேஜர்' அவளை விடுவதற்கு ஒரு சிறிதுஞ் சம்மதிக்கவில்லை. ஆனால் அப்பெண் என்னிடம் நம் கம்பெனியைப் பற்றி விசாரித்தறிந்தபின் தான் எவ்விதமேனும் தன் எஜமானியின் உத்தரவைப் பெற்றுக்கொண்டு அடுத்த சனிக்கிழமை இங்கு வருவதாகவும் அதைப்பற்றி முன்னதாகவே இங்கு விளம்பரஞ் செய்யலாமென்றும் உறுதி வாக்குக்கொடுத்திருக்கிறாள். நானும் அதற்கு ஒப்புக்கொண்டு வந்திருக்கிறேன். இனித் தங்களிஷ்டத்தைத் தெரிவிக்க வேண்டியதுதான்.

இரத்தினம்:— நீ செய்ததை நான் கூடாதென்று சொல்லப்போகிறேனா. அதிலும் இது நன்மையைத் தருவதாக விருக்கின்ற தாதலின் இதைப்பற்றி என் விருப்பத்தைக் கேட்க வேண்டிய அவசியமில்லை.

அச்சமயம் அங்குவந்த கோபாலபிள்ளை "ஏது ஊருக்குச் சென்றவர்கள் அதிகநாட்களங்கு தங்கிவிட்டாற் போலிருக்கிறது" என்று சொல்லிக் கொண்டே உட்கார்ந்தான்.

அம்பு:—கொஞ்சம் வேலையிருந்தது. அதனால் தான் குறித்தநாளில் திரும்பி வரமுடியவில்லை.

இரத்தினம் "அந்த வேலையையும் இன்னதென்று சொல்லியிருக்கக் கூடாதா?" எனவுரைத்து அவள் செய்துவந்திருக்கும் ஏற்பாட்டைக் கோபாலபிள்ளைக்குத் தெரிவித்தான்.

கோபாலபிள்ளை:—அவ்விதமா? மிக்க சந்தோஷம். ஆனால் இதிலெனக்குச் சில சந்தேகங்களிருக்கின்றன. அவற்றில் முதலாவது அவளுக்குக் கொடுக்க வேண்டிய தொகை யெவ்வளவென்பதேயாம்.

அம்பு:—அதுவிஷயமாக நான் கேட்காமல் வந்துவிடவில்லை. நமக்குப் பிரியப்பட்டு எவ்வளவு கொடுத்தாலும் அதைச் சந்தோஷத்துடன் பெற்றுக் கொள்வதாகவும், நாம் இதைக் குறித்துக் கவலை கொள்ள வேண்டிய நிமித்தமில்லை யென்றும், தான் வருவதற்குச் சம்மதித்தல் புகழை விரும்பியேயன்றிப் பணத்தில் இச்சை வைத்தல்லவென்றும் என்னிடஞ் சொல்லியிருக்கிறாளாதலின் இந்தவகையில் தமக்குண்டாயிருக்கும் சந்தேகத்தை நீக்கிவிடலாம்" என வுரைத்தாள்.

கோபா:—அவ்விதமெனிற் சந்தோஷமே. இரண்டாவதாக அவளுடைய வார்த்தையை நம்பி நாம் எவ்வாறு விளம்பரஞ் செய்வது?

அம்பு:—அதைப்பற்றியும் அவளிடம் பேசியிருக்கிறேன். விளம்பரஞ் செய்தபின் தான் வராவிட்டால் கம்பெனிக்கு நஷ்டமும் கெட்டபெயருமுண்டாவதன்றித் தனக்குங் குறைவேயென்று சொல்லியிருக்கிறாள். ஆதலின் அதைப் பற்றித் தாம் ஐயமுற வேண்டியதில்லை.

கோபா:—அப்பெண்ணுடன் நடிப்பதற்குச் சமானமான ஸ்திரீபார்ட் ஆக்டர்கள் நம்மிடமில்லையே. இரண்டும் பொருந்தியிருந்தாலன்றோ நாடகஞ் சோபிக்கும்.

அம்பு:—அப்பெண் தன்னுடன் நடிக்குமொரு பெண்ணை யழைத்துக்கொண்டு வருவதாக வாக்குக் கொடுத்திருக்கிறாள்.

இரத்தினம்,—"பேஷ்! எனதன்பிற் கினியாள் எல்லா ஏற்பாடுகளையுஞ் சரிவரச் செய்துவிட்டே வந்திருக்கிறாள்" என்று கோபாலபிள்ளையைப்பார்த்து "இனித் தாம் ஆக்ஷேபிக்கக் கூடிய

தொன்று மிராதென்று நினைக்கிறேன்'' என வுரைத்தான்.

கோபா:—அம்புஜத்தம்மாள் ஒரு காரியஞ் செய்வதென்றால் அதிற் குற்றங் கண்டு பிடிக்க வல்லா ரெவருளர்? ஆகவே 'நோட்டீசு' மூலமாய் விளம்பரஞ் செய்யவேண்டியதுதானே? முக்கிய மான விஷயமொன்றை மறந்துவிட்டேன். அப் பெண்ணின் பெயரையும், அவள் ஏதேனு மின்ன நாடகமென்று குறித்திருந்தால் அதையுஞ் சொல்லவேண்டுகிறேன்.

அம்பு:—அப் பெண்ணின் பெயர்—நான் சொல்லமாட்டேன். அதில் என் நாதரின் பெயர் வருகிறது. அவள் குறிப்பாக இன்ன நாடகந்தா னென்று சொல்லவில்லை.

இரத்:—அதனாற் குற்றமில்லை. சொல்லலாம். அல்லது ஒரு கடிதத்தில் வரைந்து கொடு.

அவ்வாறே அம்புஜம் 'இரத்தினமணி' என்று கடிதத்துண்டு ஒன்றில் வரைந்துகொடுக்க அதைக் கோபால பிள்ளை வாங்கிக் கொண்டு வெளியிற் சென்றான். புதிய ஆக்டர் வரும் சங்கதி நோட்டீசு மூலமாய்ப் பெயருடன் விளம்பரஞ் செய்யப்பட்டது இரத்தினமணி யின் பெயரும் புகழும் திருச்சிவரை எட்டியிருந்ததினால் நாடகம் பார்க்கச் செல் வோர் யாவரும் அந்நாளை எதிர்பார்த்திருந்தனர் குறித்த நாட்காலை இரத்தினமணியும் மற்றொரு பெண்ணும் திரிச்சி ரயில்வே ஸ்டேஷனில் இறங்கினார்கள். அவர்களுக்காக முன்னதாகவே சென்று காத்திருந்த அம்புஜம் அவர்களுக்கு நல்வரவு கூறி யழைத்துக் கொண்டு வந்தாள். வழியில் இரத்தினமணி, "எங்களுக்குத் தனி வீடொன்று தயார் செய்திருப்பீர்களென்று நம்புகிறேன்'' என்றுரைத்தாள். "கம்பெனி வீட் டிற்குப் பக்கத்திலேயே ஒரு வீடு பார்த்து வைத் திருக்கிறோம். அதில் நீங்கள் சௌகரியமாகத் தங்கி யிருக்கலாம். இன்று கோவலன் நாடகம் வைத்திருக்கிறோம். தங்களுடைய பெயரை முன்னதாகவே விளம்பரஞ் செய்திருக்கிறோ மெனினும் தங்களுடன் வரக்கூடியவர்களின் பெயர் தெரியாததால் இன்று இன்னும் நோட்டீசு கள் கொடுக்கவில்லை'' என்று அம்புஜம் சொன் னாள். அதற்கு இரத்தினமணி இவ்வம்மையின் பெயர் கனகவல்லி. வீடு சென்றதும் நோட்டீசில் அச்சிட்டு வெளியிடுங்கள்'' என்று சொல்ல, வண்டியும் நாம் முன் குறித்துள்ள கம்பெனி வீட்டண்டை வந்து நின்றது. மூவரும் வண் டியிலிருந்து இறங்கினார்கள். "இதுதான் கம் பெனி வீடு. தங்களுக்கென்று நியமித்திருக்கும் வீடு இது'' என்று எதிரிலிருந்த ஒரு வீட்டை அம்புஜம் காண்பித்தாள். இரத்தினமணி கம் பெனி வீட்டின் மேன்மாடியைப் பார்த்தாள். அங்கு இரத்தினம் நின்றுகொண்டு இவர்களைக் கவனிப்பதைக் கண்டு முகத்தை வேறுபுறந் திருப்பி அம்புஜத்தை யழைத்துக்கொண்டு தங் களுக்கென்று நியமிக்கப் பட்டிருந்த வீட் டில் இரத்தினமணி நுழைந்தாள். அவர் களுக்கு வேண்டினவற்றை யெல்லாஞ் செய்து விட்டு அம்புஜம் திரும்பிவந்து இரத்தினத்திடம் சங்கதியைத் தெரிவித்தாள். அங்கிருந்த கோபால பிள்ளை விஷயத்தை யறிந்துகொண்டு வெளியிற் சென்று நோட்டீசை அச்சடித்து விளம்பரஞ் செய்தான்.

அன்றிரவு சுமார் எட்டுமணிக்குக் கோபால பிள்ளையும் இரத்தினமும் கொட்டகைக்குப் புறப் பட்டுச் சென்றார்கள். அவர்கள் சென்ற ஒரு மணி நேரத்திற்குப் பிறகு இரத்தினமணியையும் கனகவல்லியையும்அழைத்துக்கொண்டுஅம்புஜம் நாடகசாலைக்குப் போனாள். ஒன்பது மணிக்குக் கொட்டகை முழுவதும் சனங்கள் நிறைந்து விட்டனர். டிக்கட்டுகள் கொடுப்பதும் நிறுத்தப் பட்டது. ஆட்டத்தையு மாரம்பித்தார்கள். நாடக மாரம்பிக்கப்பட்ட ஒருமணி நேரத்திற்குப் பிறகு இரத்தினம் "எனக்கு என்னமோ உடம்பு ஒரு மாதிரியாகவிருக்கிறது. என்னால்உட்கார்ந்திருக்க முடியவில்லை. நான் வீட்டிற்குச் செல்லுகிறேன். நாடகம் முடிந்தபின் நீ அவர்களை யழைத்துக் கொண்டு வா'' என்று அம்புஜத்திடம் சொல்லி விட்டுத் தன்னிருப்பிடத்திற்கு வந்துசேர்ந்தான்.

கம்பெனி வீட்டின் மேல்மாடியையடைந்த இரத்தினம் தான்வழக்கம்போற் படுத்துக் கொள் ளுமறைக்குட் சென்றான். கட்டிலின் மீது படுத் தான்; எழுந்தான். அறையிலங்குமிங்கு முலாவி னான்; மறுபடியும் படுத்தான்; படுத்திருக்க முடிய வில்லை; எழுந்துட்கார்ந்தான். கன்னத்திற் கையை வைத்துக்கொண்டு ஏதோ யோசித்தான். அது யாராகவிருக்கும்? அவள் இங்கு வருவதற் குக் காரணமில்லையே. காரணமிருப்பினும் வரக் கூடியவளல்லவே என்று இன்னும் ஏதேதோ தனக்குத் தானே சொல்லிக் கொண்டு சுமார் இரண்டுமணிநேர முட்கார்ந்திருந்து பின் எதை

யோ சிந்தித்தவனுப் வெளியில் வந்து நாடக சாலையை நோக்கிப் புறப்பட்டான்.

கொட்டகைக்குச் சுமார் நூறு கஜ தூரத் திற்கப்பால் வந்துகொண்டிருந்த இரத்தினம் நாடகசாலையின் சுவற்றோரத்தில் யாரோ இரண்டு ஆடவர்களும் அம்புஜமும் நின்று வார்த்தையாடு வதைக் கண்ணுற்று மறைந்து நின்று ஆடவர் கள் யாவரென்பதை உற்றுக் கவனித்தான். இன் னவர்களென்பதைத் தெரிந்து கொண்டான். அவர்கள் மெதுவாகப் பேசினதினால் இவன் காதி லொன்றும் விழவில்லை. இன்னது செய்வதெனத் தோன்றாமற் சற்றுநேரம் நின்றான். பின் ஏதோ வொன்றை நினைத்தவனுய் வீட்டிற்குத் திருப்பி வந்தான்.

முன் குறித்துள்ள அறையிலுட்கார்ந்து கொண்டு இரஞ்சிதத்தின் கடிதத்தை யெடுத் துப் பன்முறை படித்தான் "ஆஹா! இதற்கு முன் இக்கடிதத்தின் உண்மை எனக்கு விளங்க வில்லையே. முதன்முதற் படித்தபொழுதே இவ் விஷயங்கள் எனக்குத் தெரிந்திருக்குமாயின் நல மாக விருந்திருக்குமே. மதனகோபனின் வஞ்ச கக் குணத்தை யுணராமலன்றோ மோசம் போனேன். இக்கோபாலனின் வார்த்தை முற்றும் நிஜமான தென்றன்றோ எண்ணி ஏமாந்தேன். இத்தாசி அவர்களுக்குக் கீழ்ப்பட்டவள் என் பது எனக்குக் கொஞ்சமேனுந் தெரியவில் லையே. இவர்களுடைய அந்தரங்க வெண்ணம் ஒரு சிறிதும் எனக்கு இதுகாறும் புலப்படா திருந்தது ஆச்சரியமே. இவர்களுடைய நயவஞ்ச கம் அறை வீட்டிலிருக்கும் பெண்ணிற்குத் தெரிந்தும் எனக்குத் தெரியாமலிருந்தது விந் தையேயாகும். அம் மதனகோபனுக்கு நான் யாதொரு தீங்கையுஞ் செய்யாதிருக்கும்பொழுது எதற்காக அவன் எனக்கு இத்தகைய கெடுதலை யுண்டுபண்ண வேண்டும். ஏ! துன்மார்க்கா! உனக்கு ஏனோ இக்கெடுமதி வந்தது! நீ விலை மாதர் வலையிற் சிக்குண்டு கெட்டது போதா தென்று என்னையும் அழியச் செய்தாய்! மங்கை யர் திலகமாம் இரஞ்சிதத்தை மணஞ் செய்து கொள்ளவேண்டு மென்னும் விருப்பத்தாலா இக் கேட்டை எனக்கிழைத்தாய் உன்போன்ற மதியிலிகளும் இவ்வுலகிலுண்டா? உண்மையா கவே இரஞ்சிதத்திற்கு என்மீது காதலிருக்கு மாயின் அவள் உன்னை விவாகஞ் செய்து கொள்ள உடன்படுவாளா? அவள் தன் உயிரை யேனும் மாய்த்துக்கொள்வாளே யன்றி உன்னிட னிருந்து வாழ்வாளா? இரஞ்சிதம்! உன் எண் ணத்தை நான் முன்னமேயே உணராததாலன்றோ இவ்வாறு கெட்டழிந்திருக்கிறேன். கடிதத்தின் மூலமாய் எனக்கு இவ்விஷயங்களை யெல்லாம் தெரிவித்தவள் நேரிலேயே வந்து சொல்லியிருக் கக் கூடாதா" என்று வாய்விட்டுச் சொன்ன பொழுது, "இதோ வந்திருக்கிறேன்" என்று யாரோ தனக்குப் பின்னால் நின்று கூறுவதைக் கேட்டுத் திடுக்கிட்டெழுந்துபார்த்து "ஆ! இரஞ் சிதம்! நீயா! இங்கு எவ்விதம் வந்தாய்? எப் பொழுதுவந்தாய்? நான் இங்குதானிருக்கிறேன் என்பதை எவ்வாறறிந்து கொண்டாய்?" என்று கேட்டு அவளுடைய கரங்களைப் பிடித்துக் கொண்டான்.

இரஞ்:—அத்தான்! உட்காருங்கள். நான் இவ்வூருக்கு வந்திருக்கும் சங்கதியை முன்ன மேயே அறிந்திருப்பீரென்று நினைத்தேன். எல்லாவிஷயங்களையும் விவரமாகச் சொல்வதற்கு இப்பொழுது அவகாசமில்லை. சாவதானமாக எல்லாவற்றையும் தங்களுக்குத் தெரிவிக்கிறேன். **இரத்தினமணி** என்று பெயர் பூண்ட நாடகப் பெண் நானே என்பதை மாத்திரம் இப்பொழுது தெரிந்துகொள்ளுங்கள். தற்சமயம் நாம் செய்ய வேண்டிய காரியங்கள் சிலவிருக்கின்றன. மதன கோபன் இங்கு வந்திருக்கிறான். நாடகம் நடந்து கொண்டிருந்த சமயம் உள்ளே வந்தவன் நான் ஆண்வேடம் பூண்டிருந்தேனெனினும் எவ்வித மோ என்னை யறிந்துக்கொண்டவனுய் அம்புஜத் தையும் மற்றொருவனையும் அழைத்துக்கொண்டு வெளியிற் சென்றான். கொஞ்ச நேரத்திற்குப் பின் அம்புஜம் மாத்திரம் உள்ளேவந்து என் கழுத்தைக் குறிப்பாகப் பார்த்துவிட்டு வெளியிற் போனாள். என் கழுத்திலிருக்கும் மச்சத்தைப் பார்ப்பதன் பொருட்டு மதனகோபன் அனுப்பி யிருக்கவேண்டும். இதனால் அவனுக்கிருந்திருக்கக் கூடிய கொஞ்ச சந்தேகங்கூட நீங்கி என்னை இன் னவளென்று நன்கறிந்துகொண் டிருக்கிறான். தவிர அம்மூவரும் இப்பொழுது கொட்டகையி லில்லை. எங்கேயோ சென்றிருக்கிறார்கள். ஏதோ கெட்டவெண்ணத்துடன்தான் போயிருக்கிறார்க ளென்பதும் என் புத்திக்குப்படுகிறது. அவர்கள் மறுபடியும் திரும்பிவந்து நான் அங்கில்லாததை யறியுமுன் நாம் எங்கேனுஞ் சென்றுவிட வேண் டும்" என்று சொன்னாள்

இரத்:—இரஞ்சிதம்! உன் சாதுர்யத்தை எவ்வாறு புகழ்ந்து கூறுவதென்பது எனக்குத் தெரியவில்லை. நிற்க: அவர்கள் இங்கு வந்து என்ன செய்துவிடுவார்களென்று பயப்படுகிறாய்?

இரஞ்:—அத்தான்! மதனகோபன் இத்தகையோனென்பது தங்களுக்குத் தெரியாது. அவன் எக்காரியத்தையும் அஞ்சாமற்செய்யக்கூடியவன். அவசியமேற்படின் கொலைபுரியவும் துணிவான். மேலும் அவனிடம் ஆட்கள் அதிகமாகவிருக்கிறார்கள். அவர்களும் இவன்போன்ற நெஞ்சத்தினரேயாம். அத்தான்! நாம் இவைகளையெல்லாம் பேசி வீண்காலத்தைப் போக்கி எதிரிகளுக்கிடங் கொடுத்து விட்டோமென்றே சந்தேகிக்கிறேன். ஆதலின் தாம் இனி ஒரு விநாடியேனுந்தாமதியாமற் புறப்படும்படி வேண்டுகிறேன்.

இரத்:—இரஞ்சிதம்! நீ பெண்ணாதலின் இவ்வாறு பயப்படுவது இயல்பேயாகும் அம்மதனகோபன் தான் இங்குவந்து என்ன செய்யமுடியுமென்று நினைக்கிறாய்? நீ எதைக் குறித்தும் பயப்படவேண்டியதில்லை. நாம் இப்பொழுது வேறிடம் செல்ல வேண்டிய நிமித்தமுமில்லை. எனக்கு இத்தகைய தீங்கை யிழைத்த அவர்கள் என்முன் மனத்துணிவுடன் வருவார்களா? ஒருக்காலுமில்லை. ஆதலின் விடியும்வரை இங்கேயே தங்கியிருக்கலாம்.

இரஞ் :—'அத்தான்! இவ்விஷயத்தில் தாம் என் மனம்போல் நடக்கக்கூடாதா? நயவஞ்சகரின் தன்மையை யறியாமலன்றோ பேசுகின்றீர்'' என்று சொன்னவள் ''ஆ!'' எனக் கூவினாள்,

அதே சமயத்தில் இரத்தினத்தைப் பின்னால் நின்றபடியே ஒருவன் தாவிப் பிடித்தான். உடனே இரத்தினம் அவனுடைய கைகளை விலக்கிக்கொண்டு அவனைப் பிடித்துக் கீழே தள்ளித் தலையின்மீது தன் பலங்கொண்டு ஒரு உதை உதைத்துவிட்டு இரஞ்சிதம் எங்கே யென்று பார்த்தான். மூர்ச்சையுற்றுக் கிடக்குமவளை மற்றொருவன் தூக்கிக்கொண்டு செல்வதைக் கண்டு அவனுடைய விலாவிலுதைத்துக் கீழே தள்ளி இரஞ்சிதத்தை எடுத்துக் கட்டிலின்மீது படுக்க வைத்து, "இரஞ்சிதம்! இரஞ்சிதம்!'' என்றுபிட்டான். பதிலில்லை. மயக்க மருந்தைக் கொண்டு இவ்விதஞ் செய்திருப்பார்களென்பதை யுணர்ந்தஇரத்தினம்அறையில்அங்குமிங்கும் சுற்றிப் பார்த்தான். இரஞ்சிதத்தைத் தூக்கிச் சென்றவனருகில் ஒரு சிறு கைக்குட்டை கிடக்க அதிற்றான் அம்மருந்தை நனைத்துக்கொண்டு வந்திருப்பார்களென வறிந்து தான் கொடுத்த உதைகளால் நகரமுடியாமல் கிடக்கும் இருவர் மூக்கிலும் அதை வைத்து மயக்கமுறும்படி செய்துவிட்டுக் கொஞ்சந் தண்ணீர் கொண்டுவர விரும்பி வெளியில் வந்தான். அச்சமயம் அங்கு வந்த நால்வர் இவன் வருவதைக் கண்டு ஒருங்கே அவன்மீது பாய்ந்து பிடித்துக் கீழே தள்ளிக் கையையுங் காலையுங் கட்டி வாயிலுமொரு துணிப்பந்தை வைத்துவிட்டார்கள்.

இவ்வாறு திடீரென்று அங்குவந்த நால்வரில் இருவர் அறைக்குட் சென்று மஞ்சத்தின் மீது படுக்க வைக்கப்பட்டிருந்த இரஞ்சிதத்தைத் தூக்கிக்கொண்டு வெளியில் வந்தார்கள். இதைக் கண்ணுற்ற இரத்தினம் கட்டப்பட்டுக் கிடந்தானெனினு மெழுந்து நின்றான். ஆனால் அவனருகிலிருந்த இருவரும் பிடித்துக்கொண்டனர். நம் கதா நாயகியை வெளியில் தூக்கிக்கொண்டு சென்று தெருவில் தயாராக நிறுத்தப்பட்டிருந்த இரண்டு வண்டிகளொன்றிற் படுக்கவைத்தார்கள். பிறகு அவ்விருவரும் மேன்மாடிக்குச் சென்று நால்வருமாக இரத்தினத்தைப் பிடித்துத் தூக்கிக்கொண்டு வந்து மற்றொரு வண்டியிற் போட்டார்கள். அப்பொழுது மதனகோபன் முதலியோர் அங்குவந்து உத்திரவிட வண்டிகளிரண்டும் புறப்பட்டன.

ஏழாம் அத்தியாயம்

இரஞ்சிதத்தின் தற்காப்பு

இராமநாதபுரத்திற்குச் சுமார் கால் மைல் தூரத்திலுள்ள ஒரு தோட்டத்தின் மத்தியில், நாற்புறமும் உயர்ந்த மதிற்சுவர்களாற் சூழப்பட்டதும், முன் புறத்திற் பலவிதமான பூஞ்செடிகளை வைத்து வளர்த்து அலங்காரஞ் செய்யப்பட்டதுமான ஒரு சிங்கார மெத்தை வீடுண்டு. அதினுட் செல்வோமாயின் எதிரெதிர்ப்புறமாயுள்ள நான்கு அறைகளும் விசாலமான ஒருகூடமுந் தோன்றும். அவ்வறைகளில் வலப்பாகத்திற் பின்புறமாயுள்ள ஒன்றைத் தவிர மற்றவைகளெல்லாம் பூட்டப்பட்டிருந்தன. அவ்வாறு பூட்டப்படாமற் கதவுமட்டும் மூடப்பட்டிருந்த அறையின் முன் பக்கத்தில் இருவர் உட்கார்ந்து வார்த்தையாடிக் கொண்டிருந்தனர். அவ்வறையினுள்ளிருந்த அலங்காரமான மஞ்சத்தில் மயக்

கத்துடன் படுத்திருந்த ஒரு சுந்தரி கண்களைத் திறந்தாள்.; எழுந்துட்கார்ந்தாள்; மஞ்சத்தை விட்டிறங்கினுள்; அங்குமிங்கும் பார்த்தாள். "நான் எங்கிருக்கிறேன்? இது யாருடைய வீடு"? என்று தனக்குத்தானே சொல்லிக் கொண்டு சற்று நேரம் யோசனை செய்து "ஆம்! திருச்சியில் அவருடன் பேசிக் கொண்டிருந்தபொழுது யாரோ என்னைப் பின் புறத்தில் வந்து பிடித்தார்கள். பிறகு நடந்தன வொன்றும் எனக்குத் தெரியவில்லை. அவ்வாறு என்னைத் தூக்கிக் கொண்டு வந்தவன் யாராக விருக்கக்கூடும்? வேறெவன்? அத்துன்மார்க்கன் மதன கோபனுகத்தா னிருக்கவேண்டும். அல்லது அவனைச் சார்ந்தவனுயிருக்கும். இங்கு எவ்விதம் வந்தேன்? வெளியில் யாரோ பேசிக்கொண்டிருக்கிருர்கள். அவர்களைக் கேட்டுப்பார்க்கலாம்" என்றெண்ணிக் கதவருகிற் சென்ருள்.

அவர்கள் பேசினதொவ் வொன்றும் அவள் காதில் விழுந்ததெனினும் எதைக் குறித்துப் பேசினுர்களென்பது அவளுக்கு விளங்கவில்லை. மெதுவாகக் கதவைத் திறந்தாள். வெளியிலுட்கார்ந்திருந்த இருவரும் எழுந்து நின்றனர். அவர்களில் ஒருவன், "அம்மா! தங்களுக்கு என்ன வேண்டும்?" என்று கேட்டான். "ஐயோ! தாங்கள் யார்? என்னை எதற்காக இங்கு கொண்டுவந்து வைத்திருக்கிறீர்கள்? இது யாருடைய வீடு? அக்கிரமமாக என்னைத் தூக்கிக் கொண்டு வரவேண்டிய காரணமென்ன? என்னை இவ்வறையிற் போட்டு அடைத்து வைத்திருப்பதின் கருத்தென்ன? இவ்வாறு என்னைச் சிறையிட்டிருக்கும் துஷ்டன் எவன்?" என்று அப்பெண் கேட்டாள். நாம் சொல்லாமலே அம்மங்கை இரஞ்சிதந்தான் என்பதை நமது வாசகர்கள் அறிந்து கொண்டிருப்பார்களென்று நம்புகிருேம்.

"அம்மா! இக்கேள்விகளுக்குப் பதில் சொல்ல எங்களுக்கு உத்தரவில்லை. தங்களுக்கு ஏதேனும் தேவையாயிருந்து சொன்னுல் அதைக் கொண்டு வரத் தயாராக விருக்கிருேம்" என்று அவர்களிலொருவன் சொல்ல, "இதனுல், என்னை இங்கு அபகரித்துக் கொண்டு வந்து வைத்திருக்கும் கசடனுடைய ஆட்களே நீங்கள் என்பது விளங்குகின்றது. எனினும், உங்களுடைய எஜமானன் இன்னவன் என்பதையாவது உங்களாற் சொல்ல முடியுமா?" என்று இரஞ்சிதம் கேட்டாள்.

அதற்கு அவன், "அதைத் தங்களுக்குத் தெரிவிப்பதற்கும் எங்களுக்கு உத்தரவில்லை. இருப்பினும், இன்னு மொன்றிரண்டு மணி நேரத்திற்குள் எங்கள் எஜமானர் இங்கு வருவாராதலின் தாமே நேரிற் கண்டு தெரிந்து கொள்ளலாம் என்பதை மாத்திரம் தங்களுக்குச் சொல்லுகிறேன்" என்றுரைத்தான். "ஐயா! நான் சற்று நேரம் வெளியிற் சென்று வரலாமா?" என்று நம் கதாநாயகி கேட்க, "அம்மா! தங்களைத் தனியாக வெளியில் அனுப்பக் கூடாதென்பது எஜமானருடைய கட்டளை. இன்னுங் கொஞ்ச நேரத்திற்குள் தங்களுக்கு ஆகாரமெடுத்துக் கொண்டு ஒரு பெண் வருவாள். வேண்டுமானுல் அப்பெண்ணை யழைத்துக்கொண்டு இவ்வீட்டின் பின்புறத்திலிருக்கும் தோட்டத்திற் சற்றுநேரம் உலாவி வரலாம். ஆனுல் அச்சமயத்தில் அப்பெண்ணை ஏமாற்றி ஓடிவிடலாமென்று எண்ணிவிட வேண்டாம். அவ்வித மேதேனும் செய்தால் அது பயன் பெருமற் போவது மாத்திரமன்றித் தங்களுக்குக் கெடுதலாகவே முடியும்" என்று அவன் சொன்னுன்.

அவர்களால் தன் சந்தேகங்களொன்றும் நிவர்த்தி யாகாதென வுணர்ந்த இரஞ்சிதம் கதவை மூடி உட்தாப்பாளிட்டுத் தோட்டத்தின் பக்கமாயிருந்த சாளரத்தைத் திறந்து பார்த்தாள். சாளரம் சிறியதாகவும், எதிர்ப்புறத்தில் தோன்றின மதிற்சுவர் உயரமாகவு மிருந்தனவாதலின் சுவற்றிற்கு அப்பால் வீடுகள் உளவென்பதையும் இலவென்பதையும் அவளாற் கண்டுகொள்ள முடியவில்லை. மற்ற பக்கங்களிற் சாளரங்களில்லாததால் மனச் சோர்வுற்றுத் தரையின் மீதுட்கார்ந்துகொண்டு பின்வருமாறு எண்ணினுள்:—

"என்னை இவ்விதம் அடைத்துவைத்திருக்கிறவன் எவன் என்பதை அவர்கள் சொல்ல மறுத்துவிட்டார்கள். அதைக்குறித்து அவர்கள்மீது குறைகூறுவது நன்றல்ல. அவர்களுக்கிட்டிருக்கும் கட்டளைக்கடங்கி அவர்கள் நடக்கிருர்கள். இக்காரியத்தை என்பாற் செய்யக்கூடியவன் மதனகோபனே என்பதில் யாதொரு சந்தேகமுமில்லை. அவனைத்தவிர வேறு விரோதிகள் எனக்கு எவருமிலர். மயக்கமருந்தின் துணை கொண்டே அச்சண்டாளன் என்னை இங்கு கொண்டுவந்திருக்கவேண்டும் ஐயோ! அத்தான்! நான் எவ்வளவு சொல்லியுங் கேட்காமற் காலதாமதஞ் செய்தீர். இப்படுபாவியின் கையிற் சிக்கும்படியாயிற்று.

என்னை இவ்வாறு மயக்கமருந்திட்டுக் கொண்டு வந்த பாவிகள் தங்களை என்ன செய்தார்களோ? ஏனோ நான் பெண்ணாய்ப் பிறந்தேன்! என்னாலன்றோ தங்களுக்குக்கஷ்ட மேற்படுகின்றது' தங்களைப்பற்றி நினைக்க நினைக்க எனக்கு ஒன்றுந் தோன்றவில்லையே! இக்கொலைபாதகன் மதனகோபன் எக்காரியத்தைச் செய்பவும் அஞ்சமாட்டானே! என்னைத்தூக்கிக்கொண்டுவந்ததைப்பார்த்த தாம் சும்மாவிருந்திருக்க மாட்டீர். இப்பாவியும் தனியாக வந்திருக்கமாட்டான். ஐயோ! அத்தான்! இச்சண்டாளர் தங்களை எங்கு தூக்கிச் சென்றார்களோ! அல்லது—ஐயோ! அத்தான்! அத்தான்! என்று கூவிக் கீழே விழுந்து கடகடவெனப் புறண்டு அழுதாள்.

அச்சமயத்தில் "அம்மா! அம்மா!" என்று கூறிக் கதவைத்தட்டித் தன்னை ஒரு பெண்பிள்ளை யழைப்பதை யறிந்து, "ஓகோ! அவர்கள் குறிப்பிட்ட பெண் வந்திருக்கிறாள் போலும். இவளிடத்திலிருந்து சில சங்கதிகளைக் கிரகிக்க வேண்டும்" என்று எண்ணி மனதைத் தைரியப் படுத்திக் கண்களைத் துடைத்துக் கொண்டு எழுந்துசென்று கதவைத் திறந்தாள். இரஞ்சிதம் எண்ணினதுபோல், சுமார் நாற்பது வயதென்று மதிக்கத்தகுந்த ஒரு ஸ்திரீ சில தின்பண்டங்களை எடுத்துக்கொண்டு உள்ளே வந்தாள். இரஞ்சிதம் கதவை மூடிவிட்டுச் சாளரத்தருகில் வந்துட்காரவும் அப்பெண்பிள்ளை தான் கொண்டு வந்த ஆகாரத்தைஅவளெதிரில் வைத்து"அம்மா! உனக்கு எது பிரியமோ அதை எடுத்துச் சாப்பிடலாம்" என்று சொன்னாள்.

இரஞ்சிதம் :—"அம்மா! தாங்கள் தயவு செய்து உட்காருங்கள். எனக்கு ஒன்றும் வேண்டியதில்லை. நான் கேட்கும் கேள்விகளுக்கு மாத்திரம் சற்றே பெரிய மனது வைத்துப் பதிற் சொல்லவேண்டும்."

பெண் :—"இது என்ன அம்மா ஆச்சரியமாயிருக்கிறது. நீ இங்கு வந்த மூன்று நாட்களாகச் சித்த சுவாதீனமற்றுக் கிடந்ததால் என்னால் உனக்கொன்றும் கொடுக்கமுடியாமற் போயிற்று. நீ இன்று எழுந்திருந்திருக்கிறாய் என வெளியிலிருப்பவர்களாற் கேள்விப்பட்டுச் சந்தோஷத்துடன் வந்து சாப்பிடென்றால் ஒன்றும் தேவையில்லை யென்கிறாய். சாப்பிட்ட பின் என்னைக் கேட்க வேண்டியதைக் கேட்டால் எனக்குத் தெரிந்தவரைக்கும் பதிற் சொல்லுகிறேன்.

இரஞ்:—"நான் மூன்று நாட்களாகவா இங்கிருக்கிறேன்! அம்மா! என்னை மன்னிக்க வேண்டும். எனக்குப் பசியில்லை. தயைகூர்ந்து என் இஷ்டத்தைப் பூர்த்திசெய்ய வேண்டுகிறேன்.

பெண் :—"என்னம்மா இது! மூன்று நாட்களாய்ப் பட்டினியிருந்தும் பசிக்கவில்லை யென்றால் யார்தான் நம்புவார்கள். சரி; இருக்கட்டும். என்னை நீ கேட்க விரும்பியதென்ன?

இரஞ் :—அம்மா! இது யாருடைய வீடு?

பெண் :—இது ஒரு பெரிய தனவந்தருடைய மாளிகை. ஆனால் தற்சமயம் இது அவருக்குச் சொந்தமாயில்லை. தாசிகளின் மாய வலையிற் சிக்கி அவருக்கிருந்த ஆஸ்தியை யெல்லாமழித்து விட்டதுமன்றி மதுரையிலிருக்கும் தாசியொருத்திக்கு இம்மாளிகையையுங் கொடுத்துவிட்டு ஓட்டாண்டியாகத் திரிகிறார்.

இரஞ்:—"அம்மா! இது எந்த ஊர்?

பெண் :—"நீ இன்னவூரிலிருக்கிறா யென்பதே உனக்குத் தெரியாதா?"

என்று சொல்லி மௌனமா யிருந்தவளை நோக்கி,

இரஞ் :—'என்னம்மா, யோசிக்கிறீர்கள்?

பெண் :—'யோசனை யொன்று மில்லை. சற்றுப் பொறு; "வெளியிற் சென்று வருகிறேன்"

இரஞ் :—"அம்மா வேண்டாம்; வேண்டாம். தங்களுடைய கருத்தை அறிந்து கொண்டேன். கூடத்தி லிருக்கிறவர்களைக் கேட்டுவந்து எனக்குப் பதிலளிப்பதென்றால் நான் கேட்ட கேள்விக்குத் தாம் விடைகொடுக்க வேண்டிய அவசியமில்லை. அதுபோகட்டும். என்னை இங்கு கொண்டுவந்து வைத்திருப்பவர் யாவரென்பதையாவது தங்களால் எனக்குத் தெரிவிக்கமுடியுமா?

பெண்:—"அதுவுங்கூட உனக்குத் தெரியாதா! இது ஒரு பெரிய விந்தையே! நீ கேட்டவருடைய பெயர் எனக்குத் தெரியாது. ஆனால்—"

இரஞ்:—"ஏனம்மா! நிறுத்திவிட்டீர்கள்"

பெண்:—"அவர் மிகவும் நல்லவர். பெரிய குடும்பத்திற் பிறந்தவர். சற்குணசீலர். பெரிய சீமான். அழகிலுங் குறைந்தவரல்ல. அவருக்கு இன்னும் விவாகமாக வில்லை. மணஞ் செய்து கொள்வதன் பொருட்டே உன்னை இங்கு கொண்டு வந்திருக்கிறார். இவருக்கும் மிகவும் பொருத்தமாயிருக்கும். உனக்கேற்ற கணவன் அவரேயாவர். உனக்கு அவர் புருஷனாய் அமைய

நீ உன் முன் சன்மத்தில் பெரிய தவம்புரிந்திருக்க வேண்டும். உன்னைவிடப் பாக்கியசாலிகள் இவ்வுலகில் எவருமிலர். மேலும் ———

இரஞ்:—"அம்மா! போதும். தங்கள் கதையை அத்துடன் நிறுத்திவிட்டு மறுவார்த்தை யாடாமல் வெளியிற் செல்லலாம்.

பெண்:— நீ ஏதேனும் சாப்பிட்டால் நான் சென்று விடுகிறேன். நீ போவென்று சொன்ன பிறகு எனக்கிங்கென்ன வேலை. ஒருசமயம் என்னெதிரிற் சாப்பிடக் கூச்சப்படுகிறாய் போலும். அவ்விதமெனின் நான் போகிறேனம்மா என்று சொல்லி எழுந்து நடந்தாள்.

இரஞ்சிதம் "எனக்கொன்றும் வேண்டியதில்லை. இவைகளை எடுத்துக் கொண்டு போகலாம்" என்று சொன்னாளெனினும் அப்பெண் பிள்ளை காதுகேளாதவள்போற் கதவைத்திறந்து மூடிவிட்டு வெளியிற் சென்றாள்.

ஒவ்வொருவரும் தம்மாலியன்ற வரைக்குந் தத்தம் உயிரைக் காப்பாற்ற வேண்டியது ஆன்ம தருமம் என்பதைக் கருத்திற் கொண்ட இரஞ்சிதம் அங்கு தனக்கென்று வைக்கப் பட்டிருந்தவைகளிற் சில பழங்களைச் சாப்பிட்டுச் சுத்த சலத்தைக் குடித்தாள். பிறகு "இப்பெண்ணும் நான் கேட்டதைத் தெரிவிக்காமற் சென்று விட்டாள். சரி. இருக்கட்டும். இவர்களுடைய எஜமானன்தான் இன்னுங் கொஞ்ச நேரத்திலிங்கு வருவானென்று சொன்னார்களே. அப்பொழுது பார்த்துக் கொள்ளுகிறேன்" எனவெண்ணி ஆழ்ந்தயோசனையி லுட்கார்ந்திருந்தாள்.

கொஞ்ச நேரத்திற்குப் பின் இரஞ்சிதமிருந்த அறையின் கதவு மெதுவாகத் திறக்கப்பட ஒரு வாலிபன் உள்ளே வந்து கதவை மூடிவிட்டு அங்கிருந்த நாற்காலி யொன்றில் உட்கார்ந்தான். நம் கதாநாயகி இருந்த விடத்தைவிட்டு நகரவில்லையெனினும் ஒரு விநாடியில் எதிரிக்குத் தெரிவிக்காமல் தன் கண்ணோட்டத்தைச் செலுத்தித் தான் கொண்டிருந்த சந்தேகத்திற்கிணங்க மதனகோபன் தன் எதிரில் உட்கார்ந்திருப்பதைத் தெரிந்துகொண்டாள். எனினும் அவளுடைய முகத்தில் கோபக்குறியேனும் அச்சக்குறியேனுங் காணப்படவில்லை. அவன் ஏதேனும் தன்னைக் கேட்டபின் பேசலாமென்று சும்மாவிருந்தாள். மதனகோபனும் அவள் ஏதேனும் தன்னைக் கேட்பாளென்ற எண்ணத்தாற் பேசாமலிருந்தான். இவ்வாறு இருவரும் சற்று நேரம் மௌனமாயிருந்து கடைசியாக மதனகோபன், "இரஞ்சிதம்! ஏன் கீழே உட்கார்ந்து கொண்டிருக்கிறாய்? உனக்கென்றல்லவோ இக்கட்டிலை வாங்கிவைத்திருக்கிறேன். ஏன் சாப்பிட மறந்துவிட்டாய்? இவ்வரிய மெத்தை வீடு உன்னுடையதுதான். உனக்காக நகைகளையும் சேலைகளையும் வாங்கி வைத்திருக்கிறேன் பார்" என்று சொல்லி அங்கிருந்த ஒரு 'அல்மைரா'வைத் திறந்து விலையுயர்ந்த ஆபரணங்களையும் உயர்தரமான பட்டுப் புடைவைகளையு மெடுத்து எதிரில் வைத்து "இதோ பார்! இவ்வைரக்கம்மல் இரண்டாயிரம் ரூபாய் பொருமானது. இக்கடிகாரச் சங்கிலியை உனக்கென்றே நவீனமாகச் செய்திருக்கிறேன். இம்மேகவர்ணப் புடவையை நீ கட்டிக்கொண்டால்தான் அதற்கு மதிப்புண்டு. இப் பாதசரத்தை உன் காலிலிட்டுப் பார்த்தாற்றான் நன்றாகவிருக்கும். என்ன ஒன்றும் பேசாமலும் திரும்பிப் பார்க்காமலும் மௌனமாயிருக்கிறாய்! ஏன் இரஞ்சிதம்! நான்தான் உன்னைக் கொண்டுவந்திருப்பேன் என்பதைத் தெரிந்துகொள்ளாமல் நம் ஆட்களைக் கேட்டாயாமே!" என்று சொன்னான்.

இரஞ்சிதம்:–(சாந்தமாக) உத்தமோத்தமரான வீரபத்திர பிள்ளையின் புத்திரர் இத்தகைய தீச்செய்கையைத் தன் அத்தை மகள்பாற் செய்யக்கூடியவரென்று நான் கனவிலும் நினைக்கவில்லை. எனினும், எனக்குக் கெடுதலைச்செய்ய விரும்புவோர் தம்மைத்தவிர எவரும் இப்புவியிலிலாதலின் உம்முடைய ஆட்கள் எனக்குத் தெரிவிக்காவிடினும் என்னை அபகரித்து வந்தவர் தாமே என்பதை நன்குணர்வேன். நிற்க: இவ்வாறு திருட்டுத்தனமாகத் தூக்கிக்கொண்டு வந்து என்னை இங்கு அடைத்து வைத்திருப்பதின் காரணமென்ன?

மதனகோபன்:—என் அத்தை மகளை நான் அழைத்துக் கொண்டு வந்ததில் திருட்டுத்தனமென்ன விருக்கிறது?

இரஞ்சிதம்:—தாம் சொல்வதுபோல் என் இஷ்டத்தைப்பெற்று நீர் என்னை அழைத்து வந்திருந்தால் திருட்டுத் தொழிலன்றுதான். அவ்விதமல்லாமல் மயக்க மருந்திட்டு ஒருவருமறியாமல் இராப்பொழுதில் என்னைத் தூக்கிக்கொண்டன்றோ வந்திருக்கிறீர்.

மதனகோபன்:—நான் நியாயமாக அழைத்

இறப்பே புரிந்த தொழிற்றுஞ் சிறப்புந்தான் சீரல் லவர்கட் படின்.

தால் நீ வரமாட்டா யென்று நினைத்து இவ்வாறு செய்தேன்.

இரஞ்:—என் மனதிற்கு விரோதமாக என்னை அபகரித்துக் கொண்டு வந்திருக்கிறீர் என்பது ஏற்படுகின்றது.

மதன:—அவ்விதமே வைத்துக்கொள். இவ்வாறு ஏன் செய்தாய் என்று என்னைக் கேட்கக் கூடியவர்கள் யார்?

இரஞ்:—"பெண்பாவம் பொல்லாத தென்பதை யறியீர்போலும். சர்வ வியாபகராய் விளங்கும் ஈசன், திரிகரணவாயிலாய் நாம் செய்யும் ஒவ்வொரு காரியத்தையும் நன்குணர்ந்து கொண்டு நற்கருமங்கள் புரிவோர்க்கு இகத்தில் சுகத்தையும், பரத்தில் மோட்சத்தையு மளித்துச் சன்மானித்தும், தீத்தொழில் செய்வோர்க்கு இம்மையில் துக்கத்தையும் மறுமையில் தீராநரகத்தையுங் கொடுத்துத் தண்டித்தும் வருகிறார் என்பதை ஒருசிறிதும் நினைக்காமற் பேசுகின்றீர். சர்வசக்தி வாய்ந்த பகவான் சதா நம்மைக் கவனித்து வருகிறார் என்னும் நம்பிக்கை உமக்கிருந்தால் இக்காரியம் செய்திருக்கமாட்டீ ராதலின் பாவபுண்ணியத்தைக் குறித்துத் தம்மிடம் பேசுவது பிரயோசனத்தைத் தராது. அரச தண்டனைக்காவது பயப்படுவீரென்றெண்ணுகிறேன். தாம் இப்பொழுது எனக்குச் செய்துள்ள தீங்கை அதிகாரிக ளறிவாராயின் தாம் பன்னிரண்டு வருடம் சிறைச்சாலையி லிருக்கவேண்டி வருமென்பதையாவது மனதில் வைக்கவும்."

மதன:—இரஞ்சிதம்! என்ன காரணத்தை யுத்தேசித்து உன்னை நான் இங்கு கொண்டு வந்திருக்கிறேன் என்பதை யோசிக்காமற் பேசுகின்றாய்.

இரஞ்:—நான் யோசித்துப் பார்த்தும் எனக்கு விளங்காததால் உம்மை முதலிலேயே கேட்டேன். தாம் அதற்குப் பதிற் சொல்லவில்லை.

மதன:—உண்மையில் உனக்கு காரணந் தெரியாதா?

இரஞ்:—நான் அதை எவ்விதம் அறிந்து கொள்ளக்கூடும்?

மதன:—உனக்குத் தெரிந்திருக்கும். வெட்கத்தால் மறைக்கிறாய்போலும். உன்னை விவாகஞ் செய்து கொள்வதற்காகவே இக்காரியத்தைச் செய்தேன்.

இரஞ்:—என்ன சொன்னீர்! என்னை விவாகஞ் செய்துகொள்ளவா போகின்றீர்! ஒரு பெண்ணை அவளிஷ்டத்திற்கு மாறாகத் தூக்கி வந்து அடைத்துவைத்துப் பட்டினிபோட்டுப் பின் விவாகஞ் செய்துகொள்வது எவ்வூர் வழக்கமென்று எனக்குத் தெரியவில்லை. அப்பெண்தான் அதற்குச் சம்மதப்படுவாளா? ஒரு பெண்ணை விவாகஞ் செய்து கொள்வதென்றால் அவளுடைய பெற்றோரைக் கண்டு கேட்டு அவர்களுடைய சம்மதத்தைக் கொண்டு மண முடிப்பது உலக வழக்கமாயிருக்கத் தாம் இவ்வாறு உரைப்பதின் கருத்து விளங்கவில்லையே?

மதன:—உன் பெற்றோர்கள் உயிருடனிருந்தால் நானும் அவ்விதமே செய்திருப்பேன். உனக்குத்தான் ஒருவருமில்லையே.

இரஞ்:—ஒருவருமில்லாவிட்டால்?

மதன:—என்னுடைய இஷ்டப்போற் செய்ய வேண்டியதுதானே?

இரஞ்:—தாய் தந்தையரைப் பறிகொடுத்து விட்டு என் பாட்டியைத்தவிர வேறோர் துணையின்றி அநாதையா யிருக்கும் அபலையான என்னை அநியாயமாகத் தூக்கிக்கொண்டு வந்து அடைத்திருப்பதுமன்றி மனங் கூசாமல் உன் இஷ்டம்போல் என்னை என்ன வேண்டுமென்றாலும் செய்யக் கூடுமெனக் கூறத் துணிவு கொண்ட சண்டாளா! என் தற்கால நிலைமையையெண்ணி என்பா லிரக்கங் காட்டவேண்டியது உன் கடமையாயிருக்க என்னைக் கெடுக்க நினைப்பது தருமமாகுமா? கண்ட பெண்கள் மீதெல்லா மிச்சைவைத்து உன் வலையிற் சிக்கின பெண்களை யெல்லாம் கற்பழியச் செய்ததுபோல் என்னுடைய கற்பையுங் கெடுக்க வா எண்ணியிருக்கிறாய்? உன்னுடைய எண்ணம் ஈடேறுமென்று கனவிலும் நினைக்கவேண்டாம். சில அறிவற்ற பெண்கள் நீரின்மேற் குமிழியன்ன செல்வத்தில் ஆசைகொண்டு நீ கொடுத்த பணத்தை ஆவலுடன் ஏற்று அவர்களுடைய கற்பை உனக்கு விற்றதுபோல் நானும் மோசம் போய்விடுவேன் என்ற எண்ணத்தால் முன்னொரு முறை எனக்கு வேண்டும்பொழுது பணங்கொடுப்பதாகச் சொன்னாய். இப்பொழுது இந் நகைகளையும் புடவைகளையுங் காட்டுகிறாய். இவைகளெல்லாம் உன்னுடையனவா? தாசிகளிடத்தில் இரவலாக வாங்கி வந்திருக்கிறாய் என்பதை நான் அறியேனோ? இவைகளெல்லாம் உன்னுடையனவாக இருப்பினும், இவ்வீட்டிற்கு நீயே

சொந்தக்காரனுக விருக்கினும், அப்பொழுதே னும், இந் நிலையற்ற வஸ்துக்களி லிச்சைவைத்து விலைபெற்ற கற்பை யிழந்துவிட இஷ்டங்கொள் வேனென்ருே கருதினுய்? உன் துர்க்குணங்களை யறியேனு? உன் துர் நடவடிக்கைகள் எனக்குத் தெரியாதனவா ? நீ இப்பொழுதிருக்கும் இழி வான நிலைமையை உணரே னென்ருே நினைத் திருக்கிருய்? உன்னுடைய தீத்தொழில்கள் என் காது வரைக்கு மெட்டவில்லை யென்ரு மதித்தி ருக்கிருய்? குலத்தைக் கெடுக்கப் பிறந்த கோட ரிக் காம்பே! இத்தகைய இகழ்ச்சிகளொன்றை யுந் தாங்காமல் புகழ்ச்சியை மேற்கொண்டும் நல் லொழுக்கத்தைக் கடைப்பிடித்தும் நன்மார்க் கத்தே நடந்தும், கோடீசுவரனுக விளங்கினுலும் அப்பொழுதும் உன்னுடைய செல்வத்தை இத் துரும்பினுங் கடையாக மதிப்பேனே யல்லாமல் அதன்மேல் ஆசைவைத்து அதை அடைய விருப்பங் கொள்வேனென்று கருதவேண்டாம். கற்பு இன்னதென்பதும், அதன் தன்மை இவ் விதமென்பதும் அதன் வல்லமை இத்தகைய தென்பதும் உனக்குத் தெரியா. நீ கற்ற கல்வி யையெல்லாம் கணிகையர் பாதங்கட்கு அர்ப்பண மாக்கி விட்டுக் கசடனுகத் திரிகிருய் இது வரைக்கும் நீசெய்துள்ள பாவங்கள் எண்ணிறந்த னவாகும். ஆனுல் அவற்றில் கொலைப் பாவ மொன்றிராதென்று நினைக்கிறேன். அப்பாவத் தையும் சேர்த்துக்கொள்ள என்னைக் கொண்டு வந்திருக்கிருய். கிடைத்தற்கரிய மானிடப்பிற வியை யெய்தியும் அதனுல் உன் ஆன்மா யாதொரு பிரயோசனத்தையு மடையாமல் பாவ காரியத்திலேயே தலைப்பட்டு நின்ருல் இப்பாவங் களை யெல்லாம் போக்க எவ்வளவு கோடிகாலம் நரகத்திலழுந்திக் கிடந்து எவ்வளவு சன்மங்கள் எடுக்கவேண்டி வருமோ என்பதை நீ எண்ணிப் பார்க்கவில்லையா? நிலையற்ற வாழ்வைச்சதமென்று நம்பி, அற்ப சுகத்திலாசை வைத்து, நாற்றத் துருத்தியன்ன இப்பொய்யுடலைக் கண்டு மோகித்து மோசம் போகவேண்டாம்.

மதன :—(இம்மாதிரி அவள் பேசும்போது அவளைத் தடுத்து) இரஞ்சிதம்! எனக்கு உப தேசஞ் செய்வதற்காக உன்னை நான் இங்கு கொண்டுவரவில்லை. இதுவரைக்கும் ஏதேதோ சொல்லிவந்தாயே யல்லாமல் முக்கியமாக எதை எனக்குத் தெரிவிக்கவேண்டுமோ அதைப்பற்றி ஒன்றையுஞ் சொல்லாமல் விட்டாய். நீ ஒருமை யிற் பேசினது உனக்கு என்பாலுள்ள அன் பின் மிகுதியைக் காட்டுகிறதேயன்றி உன்னு டைய கோபத்தின் அறிகுறியாகக் காணப்பட வில்லை.

இரஞ் :—நான் சொன்னவைகளெல்லாம் விழலுக்கிறைத்த நீர்போ லாயின. மறைபொரு ளாக வுரைத்தால் உனக்கு ஒன்றும் விளங்காது. என்னைக் கலியாணம் செய்துகொள்ள வேண்டு மென்னும் எண்ணத்தை அறவே ஒழித்துவிட் டால் உனக்கு நன்மையுண்டாகும்.

மதன :—இரஞ்சிதம்! இப்பொழுதுதான் உன்னுடைய எண்ணம் எனக்கு நன்கு விளங்கு கிறது. என் துர்நடவடிக்கை உனக்கு என் மீது அருவருப்பை யுண்டாக்கி யிருப்பதால் அதைவிட்டு நல்லொழுக்கத்தைக் கைக்கொண் டால் என்னை நீ மணஞ்செய்துகொள்ள மறுக்க மாட்டா யென்பதைத் தெரிந்துகொண்டேன். உன் இஷ்டப்பிரகாரம் நடக்கிறேன். இப் பொழுது சம்மதந்தானே ?

இரஞ்:—உன்னைப் போன்ற மதியீனர்களும் இருக்கிருர்களா என்பது சந்தேகமே. பல்லோ ராலும் புகழப்பட்டுப் பரமயோக்கியனுய் விளங் கும் சமயத்திலும் உன்னை மணம்புரிய இஷ் டங் கொள்ளேன் என்பதை முன்னதாகவே சொன்னேன். அதை மறந்து பேசுகின்ருய். உன் னுடைய துர்க்குணத்தை யெல்லாம் விட்டு நல் லோர் சகவாசத்தை மேற்கொண்டு நன்மார்க்கத் தில் நடக்கிருய் என்பதை நான் கேள்விப்பட் டால், உன்னுடைய தற்கால நிலைமையை நினை த்து உன்மீது எவ்வளவு பரிதாபங் கொள்ளுகி றேனே அவ்வளவுக் கவ்வளவு சந்தோஷத்தை அப்பொழுது அடைவேன். இதைத் தவிர உனக்கு நான் சொல்லவேண்டியது வேறென்று மில்லை. ஆதலின் இனிக் காலதாமதஞ் செய்யாமல் தயவுசெய்து என்னைக் கொண்டுபோய் என் வீட்டில் விட்டுவிடவும்.

மதன:—(தேகம் குலுங்க நகைத்து,) உன்னை உன் வீட்டில் விட்டு வரவா இவ்வளவு கஷ் டப்பட்டு இங்கு கொண்டுவந் திருக்கிறேன். இவ்விடத்தை விட்டு நீ வெளிக்கிளம்பவேண்டு மென்ருல் என் மனைவியாகப் போகவேண்டுமே யன்றி வேறுவிதமாகச் செல்ல முடியாதென்ப தை உறுதியாக வைத்துக்கொள் என்ருன்.

சிறுத்தொண்டர்

(234-ம் பக்கத் தொடர்ச்சி.)

[ஷை மெட்டு]
[அநுபல்லவி]

சிறு:—கொண்ட நோன்பும் போக—
நொந்து நாமுஞ் சாக
கும்பிட்டதெய்வம்—தெண்டிக்க நாமும்
வம்பிட்டதென்ன—அன்புள்ள மாதே-எங்

பிரிய காதலி! நாம் இதுநாள் வரையிலும் உயிரினுமிக்க உயர்பொருளாய்க் கருதி பெருஞ் செல்வமிட்டுக் கண்ணுக்குக் கண்ணாய் காத்து வந்த நமது விரதம் வீணாகப் போகுமோ! அப்படிப் போக நாம் என்ன குற்றத்தைச் செய்தோம். உடல் பொருள் ஆவி மூன்றையும் தந்தன்றோ ஊக்கி உழைத்தோம். இல்லை,—நான் மனச்சபலங் கொள்ளமாட்டேன். பெண்ணே! நீ பைங்கிறையைப் பொன்னை அள்ளித்தா, எங்கேனுஞ் சென்று எப்படியேனும் என் சுபாங்கனைக் கொண்டுவருவேன்.

"தெய்வத்தா லாகா தெனினும் முயற்சி தன் மெய்வருந்தக் கூலிதரும்". என்னால் கூடியவரையிலும் முயற்சிப்பேன். "முயற்சி யுடையார் இகழ்ச்சி யடையார்" பின்பு தெய்வம் விட்ட வழி விடட்டும். நீ போய்க் கொண்டு வா.

திரு:—தேவரீர் சொல்வதைத் தட்டிப் பேச என் நா எழவில்லை. இருப்பினும் காரியம் ப்ரமாதமானதால் தங்களுக்கு யான் இச்சமயத்தில் மந்திரி போல் இருந்து தந்திரம் உரையாவிட்டால் நான் பெண் ஜன்மமெடுத்து தங்களுக்கு மனைவியாய் வாய்த்ததின் பலன்தான் என்ன?

சிறு:—உன் யுக்தியை நான் உபேக்ஷித்து ஒதுக்கி விட மாட்டேன். உத்தம மென்றால் நிச்சயமாய்க் கையாடுவேன். சந்தேகமில்லை. என்ன அது?

திரு:—[வாடா என் கண்ணின் மணியே மெட்டு]
புன்னாக வாராளி—ஆதிதாளம்]

[பல்லவி.]

கையினில் வெண்ணெயிருக்க-வீணாக
நெய்க் கலைவாருண்டோ

[சரணம்]

ஐயனுரைத்தவண்ணம் அரிய நற்பாலகனை
மெய்யாக நான் தருவேன்-விடுவீர்கவலையினை-கை

நாதா! கையினில் வெண்ணெயை வைத்துக் கொண்டு நெய்யுக்கலையலாமோ. தங்களுக் கொரு கவலையும் வேண்டாம். நமது சிவயோகியர் விரும்பிய சகல லக்ஷணங்களும் பொருந்திய ஆண்பிள்ளை யொருவனை நான் தருகின்றேன்.

சிறு:—

[ஷை மெட்டு]
[பல்லவி]

எந்தவிதந்தருவாய்-உன் வார்த்தை
விந்தையே நீயறிவாய்

[சரணம்]

சிந்தை மகிழத் தாயார் சேயைப் பிடித்திருக்கத்
தந்தை யறுத்துனக்கு தருவரோ-புவியில்-எந்த

என்ன கண்மணி! நீயே உள்ள கஷ்டத்தை மெல்ல எடுத்துரைத்துவிட்டு நீயே அதை மறுப்பதென்றால் உன்னுடைய வார்த்தை எனக்கு வேடிக்கையா யிருக்கிறது. நம் அடியார் குறிப்பிட்ட ஆண்பிள்ளை உனக்கு எங்கு கிடைக்கும்? எப்படிகிடைக்கும்? உனக்கு மாத்திரம் யார் தமது பிள்ளையையறுத்துப் பிழைத்துப்போ என பெரிய மனதுடன் கொடுக்கக் காத்துக்கொண்டிருக்கிறாரோ?

திரு:— [ஷைமெட்டு]
[பல்லவி]

கொண்ட நோன் பழியாமல்-ஐயர் முன்பு
கண்ட சொல் இழியாமல்

[சரணம்]

பண்டு செய்ததவத்தின் பயனாய் நமக்குதித்த
மைந்தன் சீராளனை மனதுபோற் செய்யலாமே
[கையி

சிறு:—சிவ! சிவ! சிவ! [காதைப் பொத்திக் கொள்ளுதல்]

திரு:—ஸ்வாமி! தாங்கள் குறிப்பிட்ட லக்ஷணங்களோடு கூடிய அதிசுபாங்கனை யார்தான் இவ்வுலகத்தில் நமக்கு உதவப் போகின்றார்கள்? அது இல்லையென்றே நினையுங்கள். அப்பேர்ப்பட்ட மங்களங்களோடு நம் வீட்டிலேயே இருக்கும் நமது அருமைப் பாலகன் சீராளன் தன்னையே நம் மனம்போல் செய்து கொள்ளலாமே.

சிறு:—ஹா! தெய்வமே!!

திரு:—நாதா! கடவுள் நம்மைச் சோதிக்கின்றாரே என்ன செய்வது? மனதில் கவலை கொள்ள வேண்டாம். நாழியாகின்றது. நமது அரிய விரதமும் அழியக்கூடாது, ஐயர் முன்பு சொன்ன உறுதிவார்த்தையும் இழிவாகக் கூடாது. என்ன சொல்லுகின்றீர்கள்?

சிறு:—(அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்]

எத்தனை விரதங்காத்து ஈசன்தருள்வந்துற்று
பத்துமாதங்கள் நொந்து பரிவுடன்பெற்ற பாலன்
இத்தரை மீதிலோங்கு மிசைபெற வாழ்தற்கின்றி
உத்தமவிரதங்காக்க ஒருப்பட்டாய் நலமோகண்ணே.

ஹா! பேதாய் இருந்திருந்து என்ன வார்த்தை சொல்லவந்தாய்? எத்தனையோ விரதங்களை அனுஷ்டித்து, அன்னமில்லாமலும், நித்திரையில்லாமலும்,

பனியிலும், வெயிலிலும், கால்கடுக்க நடந்து வருந்தியதை மறந்தனையோ? கோவில் எத்தனை, குளமெத்தனை, சத்திர மெத்தனை, அத்தனையும் போதாமல் தான மெத்தனை, தவங்களெத்தனை, பூஜை யெத்தனை, புனஸ்காரம் எத்தனை, இத்தனையுஞ் செய்து ஈசன துதிருவருளால் பத்துமாதங் கருவுற்று, நொந்து தளர்ந்து வயிறுளையப் பெற்றெடுத்த நமது தேனினும் பாலிலும் திவ்விய குமாரன் சீராளனைக் காலன் வாய்க் கிரையாக நாமே கொடுப்ப தென்றால் வயிறுதான் கொதியாதோ! நமதுவண்குலந்தான் தளர்ந்து மடியாதோ! ஈசன் கோபந்தான் நம்மையும் நம் விரதத்தையும் எரியாதோ. கொல்லா விரதம் பூண்ட உன் துல்லிய மென்மனத்தில் ஏது இப்படி ஜனித்தது? யோசித்துப் பார். நினக்கென்ன கன்னெஞ்சமோ, அல்லது சின்னஞ் சிறு பாலகன்மீது என்ன வஞ்சமோ?

திரு:—நாதா! அடியாளின் மீது வெறுப்புக் கொள்ளாதீர்கள். இந்தப்பேதை சொல்லுவதையும் சற்று காது கொடுத்துக் கேளுங்கள். தினமும் ஆயிரக்கணக்காக அடியார்கள் அன்னமுண்ண வந்ததும், இன்றுமாத்திரம் என்று மில்லாதபடி, மன்றில் நடம் புரிந்தாரைக் கண்டு வணங்குஞ் சிவனடியார்கள் தேடியுங் காணு தொழிந்ததும், பின்பு, ஆயிரம் நாவைப் படைத்த ஆதிசேஷனாலும் அளவிடமுடியாத அழகோடும் ஆண்டி யொருவர் வந்ததும் அவர் ஆளனில்லா வீட்டில் அமுதுண்பதில்லை யெனப் போனதும், அண்டி அழைத்தபோது அந்த அரனார் வடிவமைந்த அடியார் ஆண்பிள்ளைக்கறியில் ஆசைப்பட்டதும் தாங்கள் ஆகட்டும் என வந்ததும், ஸ்வாமி! ஏதோ விபரீதமாயிருப்பதாகத் தங்களுக்குத் தோன்றவில்லையோ ஐயா, இதில் ஓர் விசேஷ மிருப்பதாகத் தங்கள் திருவுளந்தான் நினைக்க விலையோ! நாம் அதைரியப்படாமல் நடக்கவேண்டியதை நடத்தவேண்டுமேயல்லாமல் காலதாமதஞ் செய்தல் பின்னுஞ் சஞ்சலத்திற்கு இடந்தருமே யன்றி ஒருநாளும் நலந்தாராது. அழியாதபழிவரும். வாருங்கள் தங்கள் கவலையைத் தீருங்கள். இந்த அற்பவாழ்க்கை நீர் மேற் குமிழி. கருவிலோ பிறப்பிலோ குழந்தையிலோ கௌமாரப்பருவத்திலோ நடுவயதிலோ விருத்தாப்பிய தசையிலோ இம்மானுட சென்மம் அழிவது அனுபவசித்தம். என்று இறந்தால் என்ன? அது எப்படி இறந்தாலென்ன? நமது இஷ்டப்படி முடிவது தான் இல்லையே! ஊழ்வினை யாரை விட்டது? திரிமூர்த்திகளையும் தெருவிலலையவைக்கும் வலிமை பெற்றதாச்சுதே. நம்மால் நமது செல்வக் குமாரன் சீரழியவேண்டு மென்றிருந்தால் அதை யார் தடுக்க முடியும்? ஆகையால், என் மனதுக்கினிய மாணிக்கமே, தாங்கள் சித்தங் கலங்க வேண்டாம். நஞ்சுண்ட கண்டர் திருவடிகளையே நமது கருத்திலெண்ணி பண்ணிய தவத்திற்குப் பழுது வாராமற் காத்துக் கொள்ள வேண்டும். சகல சாஸ்திர சம்பன்னராகிய தங்களுக்குத் தெரியாத நியாயம் அடியாளுக்கென்ன தெரியப் போகிறது?

சிறு:—கண்மணி. இப்படியோ உன் கள்ளமில்லா நல்ல உள்ளம் விளங்குகின்றது. சுடர் விளக்காயினும் தூண்டுகோல் வேண்டு மென்பதுபோல நீ என் பக்கத்திலிருந்து பாங்குறைத்ததனால் என் புத்தி தீக்ஷண்ய மடைந்தது. மனமும் பலமடைந்தது. நான் குழம்பிய மனதால் ஏதேதோ சொல்லிவிட்டேன்.........ஹாம். இனித் தாமதஞ் செய்யாமல் நம் காரியத்தைக் கையாடுவோம்.

நங்காய். நம் புத்திரன் பள்ளிக்குப் போயிருக்கிறானே, வருவதற்கு நேரமாகுமே. வரும் வரையில் காத்திருப்பதா?

திரு:—காத்திருந்தா லெப்படி! இப்பொழுதே நெடுநேரமாய் விட்டது. அவன் வரும்வரையில் காத்திருப்பதால் வேளை மீறிப்போய் விடுமே. தாங்கள் சென்று நமது அருமைப் பாலகனை அழைத்துவர வேண்டியதுதான்.

சிறு:—ஹே! ப்ரியே! அவனிடம் நான் என்ன சொல்லி அழைத்து வருவேன்? கல்வியிற் பிரியமுள்ள செல்வன் காரணங் கேட்பானே; என்ன சொல்லுவது?

திரு:—"உன்மாமன் முதலியவர்கள் வந்திருக்கின்றார்கள். உன்னைப்பார்க்க ஆவலோடுங் காத்திருக்கின்றார்கள். பார்த்து வருவாய் வா" என்று அழைத்து வாருங்கள். நான் அதற்குள் கறிக்கு வேண்டியவைகளைச் சித்தப்படுத்தி வைக்கிறேன். போய் வாருங்கள். [போதல்]

சிறு:—ஹே! தீனதயாபரா! த்ரிநேத்ரா. எள்ளுக்குள் எண்ணெய்போலும் அன்பர் உள்ளத்துள் உயிர்போல நிறைந்து நிற்கும் நின்மல சொரூபியே! உன் கருணைத் திறத்தை அடியேன் அளவிடப்போமோ. என் மனைவியின் மனது எப்படியோ என்ன சொல்லுவாளோ என ஏங்கிக் கிடந்த அடியேனைத் தாங்கித் தண்ணருள் புரிந்த தயாள சீலா சரணஞ் சரணம். திவ்விய திருவடித்தாமரைக்கு நமஸ்காரம்.

எந்தெந்தவிதமாய் என் பத்தினியைப் பரிசோதிக்க வேண்டுமோ என்னால் முடிந்தவரை சோதித்துப் பார்த்தாய் விட்டது. அவள் சிவசொரூபமாச்சுதே. அவளா பின்னடைவாள்? என்னை ஆளவந்த தெய்வமே உன்னை பத்தினியாகப் பெற்ற பாக்கியமே பாக்கியம். நாயிலும் கடையேனாகிய எனக்கு நீ தெய்வமாக வந்து ரக்ஷிக்க வேண்டியவள் ஏதோ ஊழ்வினை அப்படிவந்து சேர்ந்தது. நீ நாயகியாக வாய்த்தாய். கைலாயபதவி கைமேலுனக்குண்டு.

(இதன் தொடர்ச்சி 280-ம் பக்கம் பார்க்க.)

சிறுவர், ஸ்திரீகளுக்கான பக்கங்கள்

CHILDREN'S AND LADIES' PAGES

ப்ரதிஞ்ஞா யௌகந்தராயணம்

(199-ம் பக்கத்தொடர்ச்சி.)

(வாஸவதத்தா பரிணயம்).

வத்ஸ ராஜன் பிடிபட்டு உஜ்ஜயினியில் சிறையில் வைக்கப்பட்டதைக் கேள்வியுற்ற யௌகந்தராயணன், தக்க சூழ்ச்சியால் அவனை விடுவிக்கக் கருதினான் என்று முன்னர் கூறப்பட்டது. வியாஸபகவான் அருளிச் செய்த உடைகளைக் கொண்டு அவன் பைத்தியக்காரன் வேஷங் கொண்டான்; ருமண்வான் என்னும் மந்திரி ஒரு பௌத்த ஸன்னியாசி (சிரமணகன்) வேடந் தரித்தான்; வத்ஸராஜனது அந்தரங்கத் தோழனான வஸந்தகன் ஒரு டிண்டகன்* உருக் கொண்டான். மற்றும் அநேக சாரபுருஷர்கள் மாறு வேடந்தரித்து, ப்ரத்யோதனது ஸேவகர்களாக அமர்ந்தனர். இன்னும் பலர் குருடர், செவிடர் என்னும் பாவனைசெய்து ஸஞ்சரித்து தகவல் அறிந்துவந்தனர். யௌகந்தராயணாதிகள் உஜ்ஜயினில் ஆங்காங்கு ஸஞ்சரித்து, பிரதி தினமும் ஒரு ஸங்கேதஸ்தானத்தில் கூடி இரகசியம பேசுவது வழக்கமாயிருந்தது. வத்ஸராஜனைச் சிறைபிடித்துத் தன் வசமாக்கினதுபற்றி, மகிழ்வும் கர்வமுமடைந்த ப்ரத்யோதனனும் அவனுடைய மந்திரிகளாகிய பரதாரோஹகனும், ஸாலங்காயனனும் சற்றும் சந்தேக மன்னியில், நிச்சிந்தையா யிருந்துவந்தனர்.

இவ்வாறு சிலகாலம் வசித்து, உஜ்ஜயினியிலுள்ள சந்தர்ப்பங்களைத் தெரிந்து கொண்டு, யௌகந்தராயணன் வத்ஸராஜனை விடுவிப்பதற்குரிய ஆலோசனை செய்து, அதை வஸந்தகன் மூலமாய் வத்ஸராஜனுக்குச் சொல்லியனுப்பி, அவ்வாறு செய்யலாமா என்று அரசனது கருத்தை யறிந்துவரச் செய்கிறான். இவ்வாலோசனையின் ஸாராம்சமாவது :— ப்ரத்யோதனுக்கு நளாகிரி என்னும் மிகப் பிரியமான பட்டத்து யானை ஒன்றுண்டு. பலவித பிரயோகங்கள் செய்து, அதற்குப் பெரும் மதமுண்டாகும்படி செய்யவேண்டும். திடீரென்று மதம் பிடித்து அவஸ்தைப்படும் அந்த யானையின் மதம் தெளிவதற்குப் பற்பல சிகித்ஸைகள் செய்தும் பயன் படாதது கண்டு ப்ரத்யோதன், கஜங்களை வசீகரணம் செய்து அடக்குவதில் மகா நிபுணனான வத்ஸராஜனைச் சரணமடைவான். ஆகையால் அவனது கட்டளையினால் சிறையிலிருந்தும் விடுவிக்கப்பட்ட வத்ஸராஜன், கோஷவதி என்னும் வீணையைக் கைக்கொண்டு, நளாகிரியைச் சாந்தப்படுத்தி, ஸ்வாதீன மாக்கிக்கொண்டு, அதன்மேலேறிக்கொண்டு, வெகு வேகமாய்ச் சென்று, கௌசாம்பி போய்ச்சேரவேண்டும் அச்சமயம் சத்துருக்கள் எதிர்த்தால் இரகசிய வேஷம்பூண்டு சத்துருக்கள் மத்தியில் ஸஞ்சரித்து வரும் வத்ஸனைச் சேர்ந்த சார புருஷர்கள் அவனுக்குத் தீங்கு நேரிடாமல் பார்த்துக்கொள்வார்கள்.

இவ்வித ஆலோசனையை யௌகந்தராயணன், விதூஷக வேஷங்கொண்ட வஸந்தகன் மூலம் அரசனுக்குச் சொல்லியனுப்புகிறான். அவன் அதை வத்ஸனுக்குத் தெரிவித்து அவன் சொல்லும் பதிலை, யௌகந்தராயணன், ருமண்வான் இவர்களுக்கு அறிவிப்பதற்காக, எல்லோரும் ஒரு இரகசிய ஸ்தானத்தில் கூடுகிறார்கள். இவ்வாறு கூடிப்பேசுவதற்கு ஸங்கேதமாக, மாறு வேடந் தரித்துள்ள அம்மூவருக்கும் வெளிப்படையாக ஒரு அர்த்தமும், அவர்கள் அறிந்துகொள்ளக்கூடிய வேறுவித உள்ளர்த்தமும் ஏற்படும்படி ஸம்பாஷணை நடக்கிறது.

விதூஷகன் தான் வைத்திருந்த கொழுக்கட்டைகளுள்ள பாத்திரத்தை உன்மத்தகன் (யௌகந்தராயணன்) திருடிச் சென்றதாகவும், அதைத் திருப்பிக் கொடுக்காவிட்டால், கூக்குரலிட்டு அவனை ஆபத்துக்கு உள்ளாக்குவதாயும் சொல்லுகிறான்.

உன்மத்தகன் கொழுக்கட்டையாவது யாருடையது? அதை என்ன பண்ணுகிறது? கடித்துத் தின்கிறதா ? தூரத்தில் எறிந்து விடுவதா ? மூட்டைகட்டி வைக்கிறதா? நான் ஐராவதம்போல் பலிஷ்டன். நீ அழுதாலும் சரி, கூவினாலும் சரி, நான் கொடுக்கமாட்டேன், என்று கூறினான்.

இச்சமயம் விதூஷகன் 'ஐயோ அக்கிரமம்' என்று கூக்குரலிடுகிறான். ச்ரமணகன் (ருமண்வான்) வந்து, விதூஷகனுக்கு அபயமளித்து, உன்மத்தகனை அதைத் திரும்பக் கொடுக்காவிட்டால், அவனைச் சபித்துவிடுவதாகப் பயமுறுத்து

*விகாரமான வேஷம்பூண்டு, தாறுமாறாய்ப்பேசி, ஜனங்கள் நகைக்கும்படி செய்து, பிச்சை யெடுத்துப் பிழைப்பவன்.

கிருன். உன்மத்தகன் பயந்து கொழுக்கட்டையை அவனிடம் கொடுக்கிருன். ச்ரமணகன் தனது பிரபாவத்தைப்பற்றிப்பெருமைபாராட்டி, அவ்வித உபகாரத்திற்கு விதூஷகன் தன்னை வாழ்த்தவேண்டுமென்று கூறுகிருன். அச்சமயம் விதூஷகன், உச்சிவேளையானதால்தான் அக்கினி கிருகம் போவதாயும், அதற்கு முந்தியே அது காலியாயிருக்குமென்று தெரிவித்துச் செல்லுகிருன் இந்த ஜாடையறிந்து மற்றிருவரும் அங்குச்சென்று, எல்லோரும் உட்கார்ந்து கலந்து பேசுகிருர்கள்.

யௌகந்தராயணன்:—'வஸந்தகனே, நீ அரசனைப் பார்க்க முடிந்ததா? நான் சொன்னதை அவரிடம் தெரிவித்தாயா ? அவர் என்ன பதில் சொன்னர்?

வஸந்தகன்:—அவர் ஸ்நானம் செய்வதற்காக ஏற்பட்டிருந்த சதுர்த்தசி தினம் அவ்வேளையை எதிர்பார்த்திருந்து அவரைக்கண்டு, அவருடன் வெகுநேரம் பேசிக்கொண்டிருந்தேன்.

இதுகேட்ட யௌகந்தராயணன்,'வஸந்தகனே நீ மறுபடியும் அவரிடம் போய், நான் ஏற்கனவே குறிப்பிட்டுள்ள இரகசியஆலோசனையை நடத்துவதற்குத் தக்ககாலம் நாளையதினம் என்று தெரிவிப்பாயாக! நளாகிரியானையானது நிற்கும், ஸ்நானம் செய்யும், உண்ணும், படுக்கும் ஸ்தானதிகளில் ஔஷதாதிகளை உபயோகித்தும், மந்திரங்களைப் பிரயோகித்தும் அதற்கு மதம்பிடிக்கும்படி செய்தாய்விட்டது. யானைச்சாலைக்குச் சமீபத்திலுள்ள கிருகத்தை, காற்று அனுகூலமாயடிக்கும்போது கொளுத்தி மத யானைக்கு வெறி உண்டாக்குவதற்கும், தேவாலயங்களில் பேரி முதலிய வாத்தியங்களை முழக்கி, அதை அங்கு மிங்கும் வெருண்டு ஓடச்செய்வதற்குமுரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள. இவ்வித சந்தர்ப்பத்தில் ப்ரத்யோதன் அவசியம் நமது அரசனைச் சரணமடைவான். அவனலேயே சிறையிலிருந்து விடுவிக்கப்பட்ட வத்ஸராஜன் தமது வீணையைக் கையில் எடுத்துக்கொண்டு, அதைச் சாந்தப்படுத்தி, அதன்மீது ஏறி,ப்ரத்யோதனது ஸைனிகர்கள் அவரைப் பின்தொடர்ந்துவர முடியாவண்ணமும், வழியில் விந்திய வனத்திலுள்ள சிங்கங்கள் கர்ஜித்து ஒய்வதற்கு முன்னர் அக்காட்டைத் தாண்டிச் சென்று, கௌசாம்பியையடையும் வண்ணமும் அவ்வளவு விரைவாய்ச் சவாரிசெய்து செல்லவேண்டும் என்று கூறுவாயாக!'' என்று கட்டளையிட்டான் இதைச் செவியுற்ற வஸந்தகன் சிந்தனையுற்றவனுய்க் காணப்பட்டான். அதன் காரணம் என்ன என்று ருமண்வான் வினவினன் வஸந்தகனும், அவர்கள் செய்துள்ள சூழ்ச்சி பலிக்காமல் போகுமோ என்று தான் சந்தேகித்துச் சிந்தையுற்றதாகத் தெரிவித்தான். அதன் விபரத்தைக் கூறும்படி அவர்கள் வேண்ட, வஸந்தகன், 'சென்ற காலாஷ்டமீ தினத்தில், வாஸவதத்தையானவள் தாதியோடு கூட துர்க்காதேவி ஆலயத்திற்குப் பல்லக்கிலேறிச் சென்ருள். அவள் கன்னிகையாதலால் ராஜஸ்திரீகளுக்குரிய திரைச்சேலைகள் பல்லக்கில் இல்லை. ராஜவீதியை விட்டுவிட்டு வத்ஸராஜன் சிறையிடப்பட்டுள்ள கிருகத்தின் வழியாய்ச் சென்றுகொண்டிருக்கையில், தோள்மாற்றுவதற்காக அப்பல்லக்கு அங்கு நிறுத்தப்பட்டது. அப்போது வத்ஸராஜன், சிறைச்சாலை காற்பவனைச் சமாதானப்படுத்தி அனுமதி பெற்று, வெளிவந்து வாஸவதத்தையைப் பார்க்கலுற்றுன். அதுமுதல், சிறைச்சாலையே ஒரு சிங்காரவனம் என நினைத்து,சிருங்கார லீலைகள் செய்துவருகிருர்'' என்று சொல்லக்கேட்ட யௌகந்தராயணன், "இவ்வாறல்லவா, கஷ்டங்கள் ஒன்றுகூடி ஸம்பவிக்கின்றன ருமண்வானே, நாம் அரசனை மீட்கமுடியாது; இவ்வித வேஷத்தோடேயே நமது விருத்தாப்பியத்தைக் கழிக்க வேண்டிவரும் போலிருக்கிறதே'' என ஒருவாறு துக்கிக்கலானன்.

அப்போது வஸந்தகனனவன் அவர்கள்செய்த ஆலோசனை அரசனுக்குப் பிடிக்கவில்லை யென்று தெரிவித்தான். ''நான் சிறையிலிருந்து விடுபட்டு வெளி வரவேண்டுமென்பது எனக்கு இஷ்டந்தான். ஆனல், அவ்வாறு செய்வதிலும், ப்ரத்யோதனுக்கு அவமானம் உண்டாகும்படி செய்ய வேண்டும். வாஸவதத்தையுடன் வெளிச்சென்று, அவன் செய்துள்ள அவமானத்துக்குப் பதிலுக்குப் பதிலான மானபங்கம் ஏற்படுத்தவேண்டும். ஏதோ, காமவிகாரத்தில் நான் இவ்வாறு கூறுவதாக நினைத்து என்னை அவமதிக்கவேண்டாம் என்று யௌகந்தராயணனிடம் கூறுவாயாக!'' என்று அரசன் கூறினதாகச் சொன்னன்.

'ஆச்சரியம்! அரசனது புத்தி எவ்வளவு வெட்கமற்றதாய்விட்டது! காலம் தேசம் இவற்றிற்கு ஒவ்வாததும், மித்ரவர்க்கங்களுக்கு துக்ககரமுள்ளதுமான காம விஷயத்தில் அரசன்

மனம் பிரவேசித்ததே; இதெல்லாம் நமது துர்ப் பாக்கியமே! இல்லாவிடில், ஹம்ஸ தூளிகா மெத்தையில் படுப்பதற்குரிய அரசனுக்கு, தானே தன்கையால் பரப்பப்பட்ட புல்மயமான படுக்கையானது மன்மத விகாரத்தை யுண்டுபண்ணுமா? காலிலிடப்பட்ட விலங்குகளின் சப்தமானது காம சேஷ்டையில் ஆஸ்தை உண்டாக்குமா? சிறைச்சாலையில் தனது காவலுக்கு ஏற்படுத்தப் பட்டுள்ள சில காவலாளிகள் 'அரசே' என்று பரிஹாஸமாய்க் கூப்பிடுவதைக் கேட்டும், எவனாவது ஸ்திரீ விஷயமான சாபல்யத்திலிருந்து மனதைத் திருப்பாமலிருப்பானா? என்று வியந்து கூறினான்.

இதுகேட்ட வஸந்தகன், தாங்கள் அரசனுக்குச் செய்ய வேண்டிய கடமையைச் செய்து விட்டதாயும், அவனது புத்தி மாறுபட்டமடைந்து தங்கள் பிரயத்தினம் பயன்படாமற் போகும்படி செய்தபடியால், தாங்கள் அவனை விட்டுவிட்டு, ஊர்போய்ச் சேரவேண்டியது தான் என்றும் அபிப்பிராயப் பட்டான். யௌகந்தராயணன், அவ்வாறு துக்கத்தாலும் மன்மத பீடையாலும் வருந்தும் அரசனைக் கைவிடுவது நியாயமில்லை என்று எடுத்துரைக்க, அரசனது கோரிக்கை ஈடேறும்படிசெய்ய யாது உபாயமென்று ருமண்வான் வினவினான். உடனே யௌகந்தராயணன், 'அர்ஜுனன் சுபத்திரையை அபகரித்துச் சென்றது போலும், யானையானது தாமரைக்கொடியைப் பிடுங்கி எடுப்பதுபோலும், வத்ஸராஜன் வாஸவதத்தையை எடுத்துச்செல்லுமாறு செய்யாவிடில், நான் யௌகந்தராயணன் இல்லை. இருவரையும் அவசியம் வெளியேறச் செய்வேன்'' என்று பிரதிஞ்ஞை செய்தான்.

இச்சமயம் ஏதோ சப்தம் கேட்டது. அவர்கள் கூடிப் பேசின வீட்டு வாயலில் பலர் வந்து கூடினார்கள். இதுகண்டு அம்மூவரும் தனித்தனியாய் வெவ்வேறு வாயில் வழியாய் வெளிச்சென்றனர். யௌகந்தராயணன் உன்மத்தக வேஷத்துடன், 'ராகு சந்திரனைப் பிடிக்கிறான். அடே சந்திரனை விட்டுவிடு, இல்லாவிடில் உன் முகத்தை உடைத்து சந்திரனை விடுவிப்பேன் இதோ, ஒரு முறட்டுக் குதிரை ஓடிவருகிறது. இதன்மீதேறிக் கொண்டு பிச்சை எடுத்து சாப்பிடுகிறேன். ஏ பாலர்களே, என்னை அடிக்காதீர்கள்'' என்று பிதற்றிக்கொண்டு செல்லுகிறான்.

வர்த்தமானக் குறிப்புகள்

NEWS AND NOTES

மிக்க ஆழமான சுரங்கம்:—தென் அமெரிக்கா, பிரெஸில் நாட்டில், மாரோவெல்லோ என்னுமிடத்திலுள்ள சுரங்கம், பூலோகத்திலே மிக ஆழமானதாம். அதன் ஆழம் ஒன்றரை மைல். தங்கம் முதலிய லோகங்கள் அதிலிருந்து கிடைக்கின்றன.

* * *

பாசன வேலைகளின்கீழ் சாகுபடியான நிலம்:- 1924-25-இல் இந்தியாவில் சர்க்கார் பாசன வேலைகளால் ஜலம் பாய்ந்து சாகுபடியான நிலம் 2 கோடியே 72 லக்ஷம் ஏகராவெனத் தெரிகிறது. அது அதற்கு முன் வருஷத்தைவிட 6 லக்ஷம் ஏகரா அதிகமாம். ஆனால் 1922-23-இல் சாகுபடியான மொத்தம் 2-கோடியே 33 லக்ஷம் ஏகரா. இதுவே இதுவரையில் உயர்ந்து சாகுபடியான நில அளவு.

* * *

ஆம்ப்தில் பட்டத்துக்கு வார்ஸு:—சென்னைக் கவர்னராக விருந்த ஆம்ப்தில் பிரபுவின் குமாரன் 1922-ம் வருஷத்தில் தன் மனைவி க்ரிஸ்டாபெல் ஹூல்மே என்பவளுக்குப் பிறந்த ஜெப்ரி ரஸெல் என்னும் குழந்தை தன்னுடைய தன்றென்று கொண்டுவந்த விவாதம் கடைசியாக இம்மாதத்தில் முடிந்தது. அக்குழந்தை நியாயமாகப் பிறந்ததென்றும், அதுவே ஆம்ப்தில் பட்டத்துக்கு வார்சு என்றும் தீர்மானிக்கப்பட்டது. இந்தவியாஜ்யத்துக்குச்செலவு 40,000 பவுனும்; அதாவது 6-லக்ஷம் ரூபாயாகும்.

(277-ம் பக்கத் தொடர்ச்சி.)

கஷ்டமாகிய நான்தான் தனி நிற்பேன். அப்பொழுதும் என்னை நீ மறவாய். இறைவனுக்கு இதஞ் சொல்லி என்னையும் மீட்டுக்கொள்வாய் சரி. இனி புத்திரனை யழைக்கப் புறப்படுவோம்.

மற்றுப் பற்றெனக் கின்றிநின் திருப்பாதமே
   மனம் பாவித்தேன்
பெற்றலும் பிறந்தேனினிப் பிறவாததன்மை
   வந்தெய்தினேன்
கற்றவர் தொழுதேத்துஞ் சீர்க்கரை யூரிற்
   பாண்டிக் கொடுமுடி
நற்றவா உனை நான் மறக்கினும் சொல்லும் நா
   நமச்சிவாயவே.
ஓவுநாள் உணர் வழியும் நாள் உயிர்
   போகு நாள் உயர் பாடை மேல்
காவுநாள் இவை என்றலாற் கரு
   தேன்கிளர் புனற் காவிரி
பாவுதண் [illegible]ல் வந்திழி பரஞ் சோதிப்
   பாண்டிக் கொடுமுடி
நாவலாவுனை நான்மறக்கினும் சொல்லும் நா
   நமச்சி வாயவே. (போதல்)

1926 அமிருதாஞ்சனம் காலண்டர்கள் 1926

அழகிய மூன்று கலர்களில் ஸ்ரீ கிருஷ்ணன், மோஹினி ஆகியவர்களின் படங்கள், பிரபல சித்திரக்காரர்களால் எழுதப்பட்டவை.

ஒன்று விலை ரூ *0—2—0* ; டஜன் ரூ. *1—4—0* ; *100* ரூ. *9—12—0*.

தினசரி கிழிக்கக்கூடிய ஆபீஸ் காலண்டர் **1**-க்கு அ **4**. (தபால் பாக்கிங் சார்ஜ் வேறு.)

அமிருதா ஞ்சனம்

ஸர்வ நோய்களுக்கும் ஸித்த ஔஷதம்

அமிருதாஞ்சனம் அபூர்வமான மூலிகைகளிலிருந்து செய்யப்படுகிறது. எல்லா நோய்களுக்கும், தோலைப்பற்றிய சொறி சிரங்குகளுக்கும், வெட்டுக்காயம், இறுமல் முதலிய உபத்திரவங்களுக்கும் கைகண்ட மருந்து (விலை அணு பத்து). அமிருதாஞ்சனம் எல்லாவிடத்திலும் கிடைக்கும்.

இதர அமிருதாஞ்சனம் ஔஷதங்கள்

படைத்தைலம். — இது எல்லா விதமான படைகளையும் போக்கும் இரண்டு தடவை உபயோகித்தவுடன். எவ்வித படையும் போய்விடும். விலை டப்பி ஒன்றுக்கு அணு ஆறு.

தந்தசூரணம்.—பல்துலக்க இது நல்லதூள். பல் வியாதி, ஈறுவலி முதலியநோய்கள் நீங்கும். தினந்தோறும் உபயோகித்தால் பல் வெண்மையாகிமுகவசீகரமுண்டாகும். விலை டப்பி ஒன்று அணு 2.

அமிருதாஞ்சனம் டிப்போ,

நெ. 7, தம்புசெட்டி தெருவு, ஜார்ஜ் டவுன்,

சென்னைப்பட்டணம்.

THE QUEEN OF HAIR OILS

KAMINIA OIL (Registered)

கூந்தல் வளர் எண்ணெய்களுள் ராணி

காமினியா ஆயில் (ரிஜிஸ்டார்ட்)

இந்தக் காமினியா எண்ணெய் அதிக விலை உயர்ந்த சாமான்களடங்கியது. இது மயிர் உதிர்வதையும் மண்டை குடைச்சலையும் நிறுத்தி, பொடுகைப் போக்கிப் புது மயிர் வளர்ச்சியை விருத்திசெய்து வர்ணம் மாறிய கூந்தலை சுபாவ வர்ணத்திற்குத் திருப்பும். இது வியாபாரிகளுக்கும், மூளை சம்பந்தமாய் உழைப்புள்ளவர்களுக்கும, மாணுக்கர்களுக்கும், மூளையைக் குளிரச்செய்து ஞாபக சக்தியை விருத்திசெய்து தலையின் அடிப்பாகத்தைச் சுத்திசெய்யும். இதுவும் தவிர, காமினியா ஆயில், அதிக வாசனையுமுடையது.

நற்சாக்ஷி பத்திரம்

மூவத்துப்புழையி லிருக்கும் மிஸ்டர் பன்ஸோஸ் எழுதுகிறார்:—காமினியா தைலத்தை நான் மிகவும் சந்தோஷத்துடன் உபயோகித்தேன். அதின் அபூர்வமான குணங்களைப் பற்றி உங்களுக்கு வந்தனம் செய்யப் போதுமான காரணத்தைக் கண்டேன். இந்தத் தைலம் அதிக குளிர்ச்சியைக் கொடுப்பதும் தவிர, கொடிய தலைவலியை துரத்துகின்ற நிபுண "டாக்டர்". தயவுசெய்து ஒரு புட்டி காமினியா ஆயில் வி. பி-யில் சீக்கிரம் அனுப்பவும்.

மைசூர் பொருட் காட்சியில் தங்கமெடலும், அலஹாபாத் பொருட்காட்சியில் நல்ல நற்சாக்ஷிப் பத்திரமும் பெற்றிருக்கிறது.

ஒரு தரம் உபயோகிக்கவும்

ஒரு புட்டியின் விலை	ரூ. 1 0 0	வி. பி. தபால் செலவு	ரூ. 0 5 0	பிரத்தியேகம்
4—புட்டிகள்	,, 2 10 0	,, ,,	,, 0 14 0	,,

☞ எச்சரிக்கை:—காமினியா ஆயில் ஒவ்வொரு முக்கியமான பட்டணங்களிலும் கிராமங்களிலுமுள்ள கடைகளில் விற்கப்படுகிறது. உங்களுடைய சமீபத்தில் காமினியா ஆயில் விற்பவர் இல்லாவிடில், கீழ்க்கண்ட விலாசத்திற்கு நேராய் ஆர்டர் அனுப்பவும். ஆனல் உங்களூர் வியாபாரிகளிடம் வாங்கும்பொழுது, தங்களுக்கு அதிக லாபம் கிடைக்கும். வேறு மாதிரியான தெரியாத எண்ணெய்களை இதுதான் நல்ல எண்ணெய் என்று இந்தக் காமினியா ஆயிலுக்குப் பதிலாய்க் கொடுக்க முயற்சிசெய்வார்கள். காமினியா ஆயிலைத் தவிர நல்ல குணமுடைய வேறு எண்ணெய்கள் கிடையாததினல், அவர்கள் முயற்சிக்கு ஏமாருமல் எப்பொழுதும் இக்காமினியா ஆயிலே வேண்டுமென்று சொல்லிப் பெற்றுக்கொள்ளுங்கள்.

ஸோல் ஏஜண்டுகள்:— ஆங்கிலோ இண்டியன் டிரக் அண்டு கேமிகல் கம்பெனி,
155, ஜும்மா மஸீத், பம்பாய்.

Printed at the B. N. Press & Published by V. Kuppuswami Aiyar, 69, Brodies' Road, Mylapore. Madras,